July 2024

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

நற்றமிழரின் நாடித்துடிப்பு

July 2024

சுவடி — 14
ஓலை — 5

## வணக்கம் பல

ரஷ்யாவும் வட கொரியாவும் தங்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நடந்தால், ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர உதவி வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது என்று ரஷ்ய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இரு நாடுகளும் ஏற்கெனவே எதிர்கொண்ட அல்லது எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு சம்பவங்களுக்கு கூட்டு முயற்சியில் பதிலளிக்கும் கடமையை நிறைவேற்றவே இந்த ஒப்பந்தம் உருவாகியுள்ளது என்று வடகொரிய அதிபர் கூறினாலும், இவ்விரு நாடுகளும் உலகின் பிற நாடுகளுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

அமெரிக்க அதிபர் தேர்தலை முன்னிட்டு, ஜனநாயகக் கட்சி வேட்பாளரான தற்போதைய அதிபருக்கும், குடியரசுக் கட்சி வேட்பாளரான முன்னாள் அமெரிக்க அதிபருக்கும், நேருக்கு நேர் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் தனிப்பட்ட தாக்குதல்களுக்குக் குறை இல்லை என்றாலும், நாட்டின் எதிர்காலம் குறித்த விவாதமாகவே இது பார்க்கப்பட்டதால், உலகம் முழுதும் இது கவனம் ஈர்த்தது. அதேநேரம் வார்த்தை அனல் பறக்கும் தொலைக்காட்சி விவாதங்களாக மட்டுமே ஆகிவிடுகிற அபாயமாகாமல் இருந்தால் சரி!

இலங்கையில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளதால், அரசியல் கட்சிகள் பிரசாரத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ள நிலையில், தமிழர்களின் வாக்குகளை கவரும் நோக்கத்துடன், பிரதான எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து, தமிழர் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்வதைக் காண முடிகின்றது. இலங்கை அதிபராக இருப்பதற்கு ஒரு சிங்களவராக இருந்தாலே போதும் எனும் தகுதியை நிர்ணயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு, தமிழ்த் தலைவர்களும் துணையிருந்து விலைபோவது காலத்தின் கொடுமை! இனியாவது எதிர்காலம் நியாயமான பதிலை ஈழத் தமிழர்களுக்கு தரட்டும். அதற்கும் இந்தத் தேர்தல் முடிவுகள் தகுந்த பதிலைத் தரும் என்று நம்புவோம்!

வாசிப்பினால் வளர்ந்த தலைமுறைக்கும் வெறும் போழுதுபோக்கினால் வளர்ந்து வரும் இப்போதைய தலைமுறைக்குமான இடைவெளி குறித்து அலசும் கட்டுரைகளோடு பல்வேறு நல்ல பல ஆக்கங்களுடன், கதை, கவிதை, கட்டுரை என சுமந்து கொண்டு கதம்ப மலராக வருகின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழை வழமை போலவே வரவேற்று வாசியுங்கள்... நேசியுங்கள்...

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

## உள்ளே...



எத்தனை காலம் சர்வாதிகாரம்

வாக்கு மாறிய வாக்கு

சித்து விளையாட்டு மீண்டும் மீண்டும்

தமிழே தமிழே

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே

சேரமான் கனவு
தல வலம்
சிறுகதை
தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

யோக யாகம்!

மருத்துவ தமிழ்

வாழ்வும் வாசிப்பும்

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

# எத்தனை

### ரஷ்யா – வட கொரியா ராணுவ கூட்டணி

வட கொரியாவுக்கு 24 ஆண்டுகளுக்கு பின்னர் பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் முக்கியத்துவம் வாய்ந்த ராணுவ ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார். இரு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு தாக்குதலுக்கு இலக்கானால் மற்றொரு நாடு கைகொடுக்க வேண்டும் என்கிறது இந்த ஒப்பந்தம்.

அதிபர் விளாதிமிர் புதின் வட கொரியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். வட கொரிய தலைநகர் பியாங்யோங்கில் அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. வட கொரிய அதிபர் கிம் ஜான் உன்னுக்கு புதின் ரஷ்யாவின் விலை உயர்ந்த சொகுசு காரான ஆரஸ் உள்ளிட்ட பரிசுகளை வழங்கியதாக ரஷ்ய அதிபரின் உதவியாளர் யூரி உஷாகோவை மேற்கோள் காட்டி ரஷ்ய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. புதின் கிம்முக்கு ஆரஸ் காரை பரிசளிப்பது இது



புதினின் வடகொரிய சுற்றுப்பயணம் குறித்து தென் கொரியா அதிருப்தி தெரிவித்துள்ளது. ரஷ்யா — வடகொரியா இடையிலான ராணுவ ஒப்பந்தம் எத்தகையது?

கிம் ஜாங் உன்னுக்கு புதின் பரிசு

சர்வதேச அழுத்தங்களை புறந்தள்ளி ரஷ்ய

முதல் முறையல்ல . கடந்த பிப்ரவரியில் அவருக்கு ஆரஸ் லியூமோசின் காரை புதின் பரிசளித்தார், இருப்பினும் இந்த முறை எந்த மாடலை பரிசாகக் கொடுத்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினும், வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன்னும் காரில் ஒன்றாக சென்றதை காண முடிந்தது.

# காலம்

## சர்வாதிகாரம்



### ரஷ்யா — வட கொரியா ராணுவ ஒப்பந்தம்

ரஷ்யாவும் வட கொரியாவும் தங்களுக்கு எதிராக "ஆக்கிரமிப்பு" நடந்தால் ஒருவருக்கு ஒருவர் "பரஸ்பர உதவி" வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது என்று புதினை மேற்கொளிட்டு ரஷ்ய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் எதிராக "ஆக்கிரமிப்பு" ஏற்பட்டால் "பரஸ்பர உதவியை" புதிய ஒப்பந்தம் வழங்கும் என்று புதின் தெரிவித்தார். யுக்ரைன் மீதான வடகொரியாவின் நிலைப்பாட்டை "அதன் இறையாண்மைக் கொள்கையின் மற்றொரு சான்று" என்றும் புதின் கூறியுள்ளார்.

### ரஷ்யாவுக்கு கிம் புகழாரம்

ரஷ்யாவுடன் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கிம் ஜாங் உன், "வட கொரியா தனது நாடு அல்லது ரஷ்யா எதிர்கொள்ளும் "சம்பவங்கள் அல்லது போர்களுக்கு" "தயக்கமின்றி" பதில்கொடுக்கும்" என்றார்.அந்த பதில் என்னவாக இருக்கும் அல்லது "சம்பவம் அல்லது போர்" என்று அவர் கருதுவது எது என்று கிம் ஜாங் உன் விவரிக்கவில்லை.

"இரு நாடுகளும் ஏற்கனவே எதிர்கொள்ளும் அல்லது எதிர்காலத்தில் நம்மை எதிர்கொள்ளும் பல்வேறு சம்பவங்கள் அல்லது போர்களுக்கு கூட்டு முயற்சியில் பதிலளிக்கும் கடமையை நிறைவேற்றுவதில் எந்த வித்தியாசமும், தயக்கமும், அலைச்சல்களும் இருக்காது" என்று கிம் ஜாங் உன் கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய ஒப்பந்தம் "முற்றிலும் அமைதியானது மற்றும் தற்காப்புத்தன்மை கொண்டது" என்று கிம் மேலும் கூறினார்.




எந்தவொரு மேலாதிக்க நாடும் மேலாதிக்க சக்தியைப் பயன்படுத்த முடியாத ஒரு "பல்முனை உலகத்தை" உருவாக்குவதை இந்த ஒப்பந்தம் துரிதப்படுத்தும் என்றும் அவர் கூறினார். "கிம் ரஷ்யாவை "மிகவும் நேர்மையான நண்பர் மற்றும் கூட்டாளி" என்று அழைத்தார். புதினை "கொரிய மக்களின் அன்பான நண்பர்" என்று குறிப்பிட்டார்" என்று அரசு ஊடகமான ஆர்.ஐ.ஏ.யின் அறிக்கை தெரிவிக்கிறது.

ரஷ்ய அதிபர் புதின் பேசியது

புதின் தனது பேச்சில் ரஷ்யா — வட கொரியா இடையே ராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பதை பகிரங்கப்படுத்தினார். அத்துடன், பரஸ்பர உதவி, பொருளாதாரத் தடைகள் மற்றும் ஆயுத விநியோகம் ஆகியவை பற்றியும் அவர் குறிப்பிட்டார். அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் முன் முயற்சியால் வட கொரியா மீது காலவரையற்று விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ரஷ்ய பிரதேசத்திற்குள் தாக்குதல் நடத்த வல்ல துல்லியமான நீண்ட தூர ஆயுத அமைப்புகள், எஃப்—16 விமானங்கள் மற்றும் பிற உயர் தொழில்நுட்ப ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவது பற்றிய அமெரிக்கா மற்றும் பிற நேட்டோ நாடுகளின் சமீபத்திய அறிக்கைகளை புதின் தனது பேச்சில் குறிப்பிட்டார். வட கொரியாவுடன் "ராணுவ—தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்ப்பதையும் அவர் நிராகரிக்கவில்லை.

புதின் — கிம் சந்திப்புக்கு முன்னதாக, இரு தலைவர்களும் ராணுவ ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள் என்று உளவுத்துறை தகவல் கிடைத்ததாக தென் கொரியா கூறியது."ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால்" செல்ல வேண்டாம் என்று ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகரை தென் கொரிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாங் ஹோ—ஜின் கேட்டுக் கொண்டார்.ரஷ்யாவுக்கான முன்னாள் தென் கொரிய தூதரான சாங் ஜின், "உக்ரைனுடனான தனது போரை ரஷ்யா முடித்தவுடன், வட கொரியா மற்றும் தென் கொரியாவில் எது முக்கியமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

யுக்ரேன் போரில் இராணுவ உபகரணங்களுக்காக வட கொரியாவை ரஷ்யா நாடியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.ஒரு முன்னாள் சிஐஏ ஆய்வாளருக்கு, புடினின் பியோங்யாங்கிற்கான விஜயம், சர்வதேச சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட போதிலும் இரண்டு "பரியா மாநிலங்கள்" எவ்வாறு தங்கள் உறவுகளை உறுதிப்படுத்துகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

“புடின் தனது போர் முயற்சிக்கு உதவ உலகில் 198 வது பொருளாதாரத்தை நம்பியிருப்பது மிகவும் பரிதாபகரமானது என்று நான் நினைக்கிறேன்,” என்று அமெரிக்க உளவு நிறுவனமாக சிஐஏ—வின் ஆய்வாளர் சூ மி டெர்ரி, பிபிசியிடம் கூறினார்.

ஐரோப்பா ஆகிய இரு நாடுகளுடனும் வணிகத்தை விரும்புகிறது, மேலும் ரஷ்யா மற்றும் வட கொரியாவைப் போலவே உலகத்துடனான உறவிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ளவும் சீனா விரும்பவில்லை.” என்று கூறியுள்ளார்.




“உலகின் மற்ற பகுதிகளுக்கு இது மோசமான செய்தியாக இருக்கிறது. ரஷ்யாவுடனான கூட்டாண்மை வட கொரியா தனது ஆயுதங்களை திறம்பட சோதிக்க அனுமதிக்கிறது,” என்று அவர் கூறினார்.வட கொரியாவும் ரஷ்யாவும் நெருங்கிய நண்பர்கள், ஆனால் அவை உறுதியான நண்பர்கள் அல்ல என்கிறார் பிபிசியின் சீன செய்தியாளர் லாரா பிக்கர். “ரஷ்யா — வடகொரியா உறவின் முக்கிய வரம்புகளில் ஒன்று சீனாவுடனான அந்நாடுகளின் சொந்த உறவாகும், அதை அவர்கள் ஆபத்தில் ஆழ்த்த முடியாது. அதனால் அமெரிக்கா மட்டும் கவலைப்படவில்லை. சீனாவும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கும்.” என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் தொடர்ந்த அவர், “ரஷ்யா வட கொரியாவுக்கு கூடுதல் தொழில்நுட்பத்தை வழங்கப் போகிறது என்றால் அது சீனாவைக் கவலையடையச் செய்யும். புவிசார் அரசியலில் அமெரிக்காவின் இடத்தைப் பிடிக்க சீனா விரும்புகிறது. அது இன்னொரு பனிப்போரை விரும்பவில்லை. இது அமெரிக்கா மற்றும்

வடகொரியா, தென் கொரியாவுடனான தனது எல்லைக்கு அருகில் பல இடங்களில் சுவர் போலக்காட்சியளிக்கும் கட்டுமானங்களை மேற்கொண்டிருப்பதை புதிய செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.ராணுவமயமாக்கல் இல்லாத மண்டலத்திற்குள் (டி.எம்.இசட் — DMZ= Demilitarized Zone) நிலம் வெறுமையாக்கப்பட்டு சமன் செய்யப்பட்டிருப்பதை, ’பிபிசி வெரிஃபை’—ஆல் பகுப்பாய்வு செய்யப்பட்ட படங்கள் காட்டுகின்றன. இது தென் கொரியாவுடன் நீண்டகாலமாக இருந்த போர்நிறுத்தத்தை மீறுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்

DMZ என்பது வட மற்றும் தென் கொரியாவிற்கு இடையே 4.கி.மீ அகலமான ராணுவ நடவடிக்கை விலக்கப்பட்டப் பகுதி ஆகும்.இருநாடுகளும் அதிகாரபூர்வமாக இன்னும் போரில் உள்ளதாகவே கருதப்படுகிறது. ஏனென்றால் அந்த நாடுகளுக்கு இடையில் இதுவரை அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. ஞிவிஞீஇரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளும் தங்கள் பக்கத்தில் இருக்கும் பகுதியை கட்டுப்படுத்துகின்றன.இந்த சமீபத்திய

செயல்பாடு ‘அசாதாரணமானது’ மற்றும் இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்து வரும் நேரத்தில் நடந்துள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.“இந்தக் கட்டத்தில் வட கொரியா தனது ராணுவ இருப்பு மற்றும் எல்லையில் பாதுகாப்பை வலுப்படுத்த விரும்புகிறது என்று மட்டுமே நாம் ஊகிக்க முடியும்,” என்று தென்கொரியத் தலைநகர் சியோலை தளமாகக் கொண்ட நிபுணர் தளமான என்கே நியூஸின் செய்தியாளர் ஷ்ரேயஸ் ரெட்டி கூறுகிறார்.




வட கொரியாவால் அந்த பகுதியில் செய்யப்படும் மாற்றங்களைக் காணும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 7கி.மீ. நீள எல்லையின் உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களை ஆராய்ந்தது. ஞிவிஞீ—க்கு அருகில் தடைகள் அமைக்கப்பட்டுள்ள குறைந்தபட்சம் மூன்று பிரிவுகளை படங்கள் காட்டுகின்றன.

எல்லையின் கிழக்கு முனைக்கு அருகில் மொத்தம் சுமார் 1கி.மீ. நீள பகுதியில் இது அமைந்துள்ளது. எல்லையின் பிற பகுதிகளிலும் தடுப்புகள் கட்டப்பட்டிருக்கலாம். இப்பகுதியைக்காட்டும் முந்தைய உயர் தெளிவுத்திறன் படங்கள் இல்லாததால்,கட்டுமானம்எப்போதுதொடங்கியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் 2023—ஆம் ஆண்டு நவம்பரில் எடுக்கப்பட்ட ஒரு படத்தில் இந்த கட்டமைப்புகள் தெரியவில்லை.

“இரு நாடுகளையும் பிரிக்கும் இடத்தில் அவர்கள் ஒரு தடையை உருவாக்குவது இதுவே முதல் முறை என்று நான் கருதுகிறேன்,” என்று சியோலின் அசன் இன்ஸ்டிடியூட் ஃபார் பாலிசி ஸ்டடீஸின் ராணுவ மற்றும் பாதுகாப்பு நிபுணர் டாக்டர் யுகே யாங் பிபிசியிடம் கூறினார்.

“1990—களில் போர் வெடிக்கும் பட்சத்தில் பீரங்கிகள் முன்னேறுவதைத் தடுப்பதற்காக வட கொரியா பீரங்கிகள் தடுப்புச் சுவர்களை அமைத்தது. ஆனால் சமீபத்தில் வட கொரியா 2—3 மீட்டர் உயரத்திற்கு சுவர்களை எழுப்புகிறது, மேலும் அவை பீரங்கி தடுப்புச்சுவர் போல் இல்லை,” என்கிறார் டாக்டர் யாங். “சுவர்களின் வடிவமானது அவை [பீரங்கிகளுக்கான] தடைகள் மட்டுமல்ல, ஒரு பகுதியைப் பிரிக்கும் வகையிலானது என்பதைக்காட்டுகிறது,” என்கிறார் செயற்கைக்கோள் படங்களை மதிப்பாய்வு செய்த டாக்டர் யாங். வட கொரியப்பகுதியில் நிலம் காலியாக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன. புதிதாகக் கட்டப்பட்ட அணுகல் சாலை ஒன்றையும் எல்லையின் கிழக்கு முனையின் சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.

மேலே உள்ள வரைபடத்தில் ஞிவிஞீ—இன் சரியான வடக்கு எல்லையை வரையும்போது, எல்லை மேப்பிங் குறித்த பிபிசி ஆராய்ச்சியை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். ஏனென்றால், எல்லையின் கிடைக்கக்கூடிய வரைபடங்களில் சிறிய வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும்


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

நாங்கள் ஆராய்ந்த பெரும்பாலான வரைபடங்கள் ஞிவிஞீ—க்குள் நிலம் காலியாக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன.

‘முக்கிய சாலைகளை வலுப்படுத்துதல், கண்ணிவெடிகள் இடுதல் மற்றும் தரிசு நிலங்களில் செடிகொடிகளை அகற்றி சமன் செய்தல்’ தொடர்பான தற்போதைய நடவடிக்கையை




ராணுவம் அடையாளம் கண்டுள்ளது என்று தென் கொரிய கூட்டுப்படைத் தலைவர்கள் குழு (ஜே.சி.எஸ்) அதிகாரி ஒருவர் கூறினார்.“நிலத்தை சுத்தம் செய்வதன் நோக்கம் ராணுவ மற்றும் ராணுவம் அல்லாத அம்சங்களைக் கொண்டிருக்கலாம்,” என்று கொரியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச பாதுகாப்பு பேராசிரியரான கில் ஜூ பான் கூறினார்.“இது கண்காணிப்புக் கோபுரங்களை அமைப்பதை எளிதாக்கும். இதன் மூலம் தென் கொரியாவில் ராணுவ நடவடிக்கைகளை கண்காணிப்பது வட கொரியாவுக்கு எளிதாகிவிடும். எல்லையை கடந்து தென் கொரியாவிற்குள் நுழைய முயற்சிப்பவர்களை அடையாளம் காணவும் இது உதவும்,” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

“DMZ இல் கட்டமைப்புகளை உருவாக்குவது அசாதாரணமானது மற்றும் முன்கூட்டிய ஆலோசனை கலப்புகள் இல்லாமல் போர் நிறுத்தத்தை மீறுவதாகும்,” என்று மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தில் ஆசியா மற்றும் கொரியாவிற்கான மூத்த துணைத் தலைவர் பேராசிரியர் விக்டர் சா கருதுகிறார். கொரியப் போர் 1953—இல் ஒரு போர்நிறுத்தத்துடன் முடிவடைந்தது.

“ராணுவ நடவடிக்கைகள் நீக்கப்பட்ட பகுதியின் ‘உள்ளில் இருந்து, உள்ளே அல்லது எதிராக’ எந்த விரோதச் செயல்களையும் செய்ய மாட்டோம்,” என்று இதில் இரு தரப்பும் உறுதியளித்தன. ஆனால் இறுதி சமாதான உடன்பாடு எட்டப்படவில்லை.

சில வல்லுநர்கள் கிம் தெரிவித்த இந்த கருத்தை ‘முன்னோடியில்லாதது’ என்று அழைத்தனர். மேலும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் தென் கொரியாவை ‘பெரிய எதிரி’ என்று கிம் முத்திரை குத்தியதிலிருந்து அந்த நாட்டின் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றத்தை அவர்கள் கண்டனர். அப்போதிருந்து இரண்டு நாடுகளின் ஒற்றுமையைக் குறிக்கும் சின்னங்களை வடகொரியா அகற்றத் தொடங்கியது. நினைவுச்சின்னங்களை இடிப்பது மற்றும் அரசு வலைதளங்களில் உள்ள ஒற்றுமை பற்றிய குறிப்புகளை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளையும் அது மேற்கொண்டது.

“தெற்கிலிருந்து தாக்குதலைத் தடுக்க வட கொரியாவுக்கு உண்மையில் மேலும் தடைகள் தேவையில்லை. ஆனால் இந்த எல்லைத் தடைகளை அமைப்பதன் மூலம் வட கொரியா, இரு நாடுகளும் ஒன்றுபடுவதை தான் விரும்பவில்லை என்று சமிக்ஞை செய்கிறது” என்று கூறுகிறார் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் ஐரோப்பிய மற்றும் சர்வதேச ஆய்வுகள் மையத்தின் தலைவர் டாக்டர் ரேமன் பாச்சிகோ பார்டோ.இது கிம்மின் பரந்த நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகிறது என்றும் சில வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

“அமெரிக்காவுடனோ அல்லது தென் கொரியாவுடனோ பேச்சுவார்த்தையில் ஈடுபட விருப்பம் இருப்பது போல் வடகொரியா நடிப்பது கூட இல்லை. மேலும் பேச்சுவார்த்தைக்கான ஜப்பானின் சமீபத்திய முயற்சிகளையும் அது நிராகரித்துவிட்டது,” என்று ஆக்ஸ்போர்டில் உள்ள கொரிய தீபகற்ப ஆராய்ச்சியாளர் டாக்டர் எட்வர்ட் ஹோவெல் கூறுகிறார். “ரஷ்யாவுடன் வட கொரியாவின் நெருக்கம் அதிகரித்துள்ள நிலையில், இரு கொரியாக்களுக்கு இடையே இந்த ஆண்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்தால் ஆச்சரியம் ஏதும் இல்லை,” என்று அவர் குறிப்பிட்டார்.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"ஜனநாயகத்தில் வன்முறைக்கும் வெறுப்புக்கும் இடமில்லை"

ராகுல் காந்தி

(அது இரண்டும் இல்லேன்னா அரசியலே இல்லைன்னு தான், இதுவரைக்கும் அரசியல்வாதிகள் பாடம் நடத்திக்கிட்டு இருக்காங்க!)



"தமிழ் நாட்டுக்கு நல்ல தலைவர்கள் வேண்டும்!"

நடிகர் விஜய்

(அப்படியிருந்தால்.. மாற்ற முடிந்தால்... கொண்டாடலாம்!)



"வெற்றிக்குப்பின் தேசிய கட்சிகள் தமிழ்நாட்டைக் கண்டுகொள்வதில்லை"

எடப்பாடி பழனிசாமி

(அட, இங்கே உள்ள கட்சிகள் மட்டும் மக்களைக் கண்டுகிட்டா இருக்கீங்க?)



"தமிழ் செம்மொழி சிறப்பைப் பெறுவதற்குக் காரணம் திருக்குறள்!

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

(அது என்னமோ உண்மைதான்! ஆனா புதையல் மாதிரி கிடக்கிற சங்க இலக்கியங்களை சொல்ல மறந்துடாதீங்க!)



"வருத்தம் என்னவென்றால், சமூகத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பா.ஜ.கவில் பொறுப்புகளில் உள்ளனர். இதைத் தவிர்த்து, கட்சியில் கடுமையாக உழைக்கக் கூடியவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்!"

தமிழிசை சௌந்திரராஜன்

(அது சரி தான்! உங்க தலீவர் வேறு மாதிரி சொல்லிச்சே உங்களுக்கு!...)

# வாக்கு

### அமெரிக்க அதிபர் தேர்தல்: நேருக்கு நேர் மோதிய பைடன் – டிரம்ப் –

அமெரிக்க அதிபர் தேர்தலை முன்னிட்டு, ஜனநாயக கட்சி வேட்பாளரும் தற்போதைய அதிபருமான ஜோ பைடன், குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் இருவரும் முதன்முறையாக நேருக்கு நேர் விவாதித்தனர்.

இந்த விவாதத்தில் தனிப்பட்ட தாக்குதல்களுக்குக் குறை இல்லை. மேலும், பைடன் அவ்வப்போது கம்மிய குரலில் பேசினார். இதனால், ஜனநாயக கட்சியினர் தங்கள் வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும், "மெதுவாக ஆரம்பித்தாலும் வலுவாக விவாதத்தை நிறைவு செய்ததாக," பைடனுக்கு ஆதரவாக துணை அதிபர் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். மறுபுறம், டொனால்ட் டிரம்ப், பைடனை பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கை சார்ந்து தாக்கிக்கொண்டே இருந்தார்.

அமெரிக்காவில் இந்த ஆண்டு நவம்பர் 5 அன்று அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், போட்டியிடும் வேட்பாளர்கள் நேருக்கு நேர் விவாதித்துக்கொள்வது அமெரிக்க அதிபர் தேர்தலின் முக்கிய நிகழ்வு. அதன்படி, ஜூன் 27, அன்று ஜார்ஜியாவில் உள்ள அட்லான்டாவில் முதல் விவாதம் நடைபெற்றது.ஜோ பைடன், டொனால்ட் டிரம்ப் இருவருக்கும் இடையே 90 நிமிடங்கள் இந்த விவாதம் நீடித்தது. 2020 அதிபர் தேர்தலுக்குப் பிறகு நான்கு ஆண்டுகள் கழித்து இரு தலைவர்களும் நேருக்கு நேர் விவாதத்தில் ஈடுபட்டனர்.

விவாதத்தில் பணவீக்கம் பிரச்னை எழுப்பப்பட்டபோது, வேலை வாய்ப்பின்மையுடன் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தையே டொனால்ட் டிரம்ப் தனக்குக் கையளித்ததாகத் தெரிவித்தார் பைடன். அப்போது, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அமெரிக்க பொருளாதாரம் 'சிறப்பாக' இருந்ததாக டிரம்ப் தெரிவித்தார்.




டிரம்ப் ஒன்றும் செய்யவில்லை எனக் கூறிய பைடன், அவருடைய ஆட்சிக் காலத்தில் நிலைமை "மோசமாக" இருந்ததாகக் கூறினார். "எல்லாவற்றையும் சரிசெய்ய வேண்டியிருந்ததாக" பைடன் கூறினார். அப்போது, "பெருங்குழப்பம்"

# மாறிய வாக்கு

என்ற வார்த்தையை அடிக்கடி பைடன் உபயோகித்தார். “டிரம்ப் பணக்காரர்களுக்கு ஆதரவாக இருந்ததாக” பைடன் தெரிவித்தார். அப்போது டிரம்ப், தான் மக்களுக்கு முன்பு இல்லாத வகையில் வரியை குறைத்ததாகக் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது குறித்தும் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் அரசின் நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. டிரம்ப் ஆட்சிக் காலத்தில்தான் ஆப்கானிஸ்தானில்

## லூசியா பிளாஸ்கோ

“கொரோனா பெருந்தொற்றுப் பேரிடரின்போது தேவைகளுக்கு ஏற்ப நாங்கள் பணத்தைச் செலவழித்தோம். இதனால், மிகுந்த அழுத்தத்திற்குள் நாங்கள் தள்ளப்படவில்லை. எல்லாம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது” என்றார் டிரம்ப். அமெரிக்க எல்லைகள் சார்ந்த கொள்கைகளில் பைடனை டிரம்ப் தாக்கிப் பேசினார். அப்போது,




அமெரிக்கப் படைகள் சண்டையிட்டதாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை கண்ணியம் மற்றும் பலத்துடன் திரும்பப் பெறத் தான் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால், “அப்படைகளை (பைடன் ஆட்சிக் காலத்தில்) திரும்பப் பெற்றபோது அது அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் அவமானகரமான நிகழ்வாக இருந்ததாகவும்” டிரம்ப் கூறினார்.

சிறைவாசிகள், மனநல சிகிச்சை மையங்களில் உள்ளவர்கள் மற்றும் பயங்கரவாதிகள் எல்லைகள் வாயிலாக நாட்டுக்குள் வருவதாக டிரம்ப் கூறினார்.கடந்த பத்து ஆண்டுகளில் உலகின் எந்தப் பகுதியிலும் அமெரிக்கப் படையினர் தன்னுடைய ஆட்சியில்தான் உயிரிழக்கவில்லை என பைடன் கூறினார். பிபிசி உண்மை சரிபார்ப்புக் குழுவின்படி, பைடனின் இந்தக் கூற்று தவறானது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜோர்டானில் ட்ரோன் தாக்குதலில் அமெரிக்கப்




படையினர் கொல்லப்பட்டனர்.இதுதவிர, ஆகஸ்ட் 2021ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும்போது காபூல் விமான நிலையத்தில் நிகழ்ந்த தற்கொலை தாக்குதலில் அமெரிக்கப் படையினர் 13 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ். அமைப்பின் ஐ.எஸ்—கே பிரிவு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது.

போரில் உயிரிழக்கும் படையினர் குறித்த ஆய்வு அமைப்பு அளித்தத் தகவலின்படி, டொனால்ட் டிரம்ப் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கப் படைகளைச் சேர்ந்த 65 பேர் உயிரிழந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த வழக்கில் டொனால்டு டிரம்ப் குற்றவாளி என நியூயார்க் நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்தது. இதை விவாதத்தின்போது ஜோ பைடன் குறிப்பிட்டார். பைடன் கூறுகையில், “குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் இங்கு இருக்கிறார், அவரைத்தான் நான் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என கூறினார். டிரம்ப் ஒழுக்கமான நபர் அல்ல என பைடன் கூறினார். அதேநேரம், பைடனின் குற்றச்சாட்டுகளை டிரம்ப் மறுத்தார். காஸா குறித்த கேள்வி எழுகையில், முன்னாள் அதிபர் டிரம்ப் இஸ்ரேல் தன்

கடந்த 2006ஆம் ஆண்டு டொனால்ட் டிரம்ப்புடன் உடலுறவு கொண்டதாக ஆபாசப் பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். அதை டிரம்ப் மறுத்தார். மேலும் 2016ஆம் ஆண்டு தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற்றதற்கு முன்னதாக இந்த விவகாரம் பற்றி வெளியே பேசாமல் இருக்கத் தனக்குப் பணம் கொடுக்கப்பட்டதாக டேனியல்ஸ் கூறியுள்ளார்.



வேலையை முடிக்க வேண்டும் எனக் கூறினார். பைடன் பாலத்தீனியராகவே மாறிவிட்டதாக டிரம்ப் கூறினார். மேலும், யுக்ரேனுக்கு அமெரிக்கா உதவுவது குறித்தும் டிரம்ப் எழுப்பினார்.




யுக்ரேனுக்கு உதவுவதில் அமெரிக்காவை விட ஐரோப்பிய நாடுகள் குறைவாக செலவழித்துள்ளன என தெரிவித்தார். யுக்ரேனுக்கு உதவ அதிகமாக பணம் செலவழிக்குமாறு நேட்டா நாடுகளுக்கு பைடன் ஏன் அழுத்தம் தரவில்லை என்றும் டிரம்ப் கேள்வியெழுப்பினார்.

இஸ்ரேல்—ஹமாஸ் போரை முடிவுக்குக் கொண்டு வர என்ன செய்வீர்கள் என பைடனிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, போரை நிறுத்த ஹமாஸ் விரும்பவில்லை என பைடன் தெரிவித்தார். இஸ்ரேலின் உறுதியை மீண்டும் வலியுறுத்திய பைடன், ஹமாஸ் அழிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.வட அமெரிக்கா குறித்து செய்தி சேகரிக்கும் பிபிசி செய்தியாளர் ஆண்டனி ஸர்ச்செர், முன்னாள் அதிபர் டிரம்ப்பின் விவாதம் கட்டுப்பாட்டுடனும் அமைதியுடனும் இருந்ததாகக் கூறினார்.வாக்குவாதம் செய்தல், மிகைப்படுத்தப்பட்ட பதில்களைத் தருவதிலிருந்து டிரம்ப் விலகியிருந்தார்55. ஏனெனில், கடந்த தேர்தல் விவாதத்தின்போது, இந்த விஷயங்கள் அவரை பலவீனமாக்கின. டிரம்ப்பின் சில கூற்றுகள் முழுமையான தரவுகளின் அடிப்படையில் இல்லாவிட்டாலும், அவை முழுவதும் தவறான தகவல்கள் இல்லை. எனினும், டிரம்ப்பை பைடனால் மடக்க முடியவில்லை.

உதாரணத்திற்கு கருக்கலைப்பு குறித்த விவாதம் எழுந்தபோது, டொனால்டு டிரம்ப் அதை 'ஜனநாயக (கட்சியினரின்) தீவிரவாதம்' எனக் குறிப்பிட்டார். மேலும், பைடன் கட்சியின் தலைவர்கள் குழந்தைகள் பிறந்த பிறகு, கருக்கலைப்பை ஆதரிப்பதாக, தவறான தகவலைத் தெரிவித்தார். இந்த விவகாரத்தில் பைடன் வெற்றி பெற்றிருக்கலாம், ஆனால் அதைச் செய்ய பைடன் தவறிவிட்டார்.

விவாதத்தின்போது பல நேரங்களில் பைடனின் குரல் கரகரப்பாக இருந்தது, இதற்கு கடந்த சில தினங்களாகவே அவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவே காரணம் என, அவருடைய பிரசார அதிகாரிகள் தெரிவித்தனர். பைடன் விவாதத்தின்போது சில நேரங்களில் தடுமாறியதாகவும் அவருடைய வாதங்கள் தட்டையாக இருந்ததாகவும் பிபிசி செய்தியாளர் ஆண்டனி ஸர்ச்செர் குறிப்பிட்டுள்ளார். விவாதத்தின் ஆரம்பத்தில் அவருடைய வாதங்கள் அறிவுபூர்வமற்றதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். வயதைக் கடந்து தனக்கு போதிய ஆற்றல், வலு இருப்பதாக நிரூபிக்க பைடன் தவறிவிட்டார் என ஸர்ச்செர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழே

## முத்துகளை எடுக்கவோ கோக்கவோ?

மகாபாரதத்தில் கர்ணனுக்கும் துரியோதனனுக்கும் இடையே ஆழமான நட்பு நிலவியது. திரௌபதியின் சுயம்வரத்தின்போது, மற்றவர்கள் கர்ணனின் பிறப்பைப் பற்றித் தெரியாததனால், தேரோட்டி மகன் என அவனை இழிவாகப் பேச, துரியோதனனே அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டு அங்க தேசத்திற்கும் அரசனாக்குகிறான்.

பின்பு பாரதப்போர் மூண்டபோது கர்ணன் கௌரவர்களின் பக்கம் சேர்ந்து போரிடுகிறான். அர்ச்சுனனைப் போலவே அவனும் மாவீரன். இருவரும் ஒருவரை ஒருவர் போரில் எதிர்கொண்டால் யாரேனும் ஒருவர் கொல்லப்படும் வாய்ப்புண்டு என அறிந்திருந்த சிலருள் அன்னை குந்தியும் ஒருத்தி.

அவள் கர்ணனைச் சந்திக்கச் செல்கிறாள். அவனுடைய பிறப்பின் உண்மையைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுகிறாள். இக்கதையைக் கூறித் தானே அவனுடைய தாய் என உறுதிப்படுத்தி, அவனிடம் பாண்டவர்கள் பக்கம் சேர்ந்து போரிட அவர்களின் அண்ணனான கர்ணனை வேண்டுகிறாள்.

அதனை மறுக்கும் கர்ணன் துரியோதனனுக்கும் தனக்கும் இடையேயான நட்பின் ஆழத்தை விளக்க ஒரு சம்பவத்தைக் கூறுகிறான்.



# தமிழே

**மீனாட்சி பாலகணேஷ்**

“நானும் துரியோதனன் மனைவி பானுமதியும் குற்றமற்ற ஓரிடத்திலமர்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தோம். அப்போது என் பின்பக்கமிருந்து துரியோதனன் வந்தான்; அவனைக் கண்ட பானுமதி எழுந்தாள். ஆட்டத்தில் தோற்பதனைத் தவிர்க்கத்தான் எழுந்திருக்கிறாள் என எண்ணி நான் அவளைப் பிடித்து உட்கார வைக்கப் பார்த்தேன். அப்போது அவள் இடையிலணிந்திருந்த மேகலை அறுபட்டு அதனின்றும் முத்துகள் சிதறி ஓடின.

அப்போது அங்கு வந்த துரியோதனன், “முத்துகளை எடுக்கவோ கோக்கவோ?’ என்று கேட்டான். அவன் நண்பனான என்மீது வைத்திருந்த நம்பிக்கை அத்தகையது. அவனுக்காகப் போர் செய்வதே என் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கும் செயல், அதுவே அறமாகும், புகழையும் தரும்‘ என்கிறான். இந்த நிகழ்ச்சி வியாச பாரதத்தில் குறிப்பிடப்படவில்லை; கும்பகோணம் பாரதப் பதிப்பிலும் இது பற்றிய செய்தி இல்லை. ஆனால் பெருந்தேவனார், வில்லிபுத்தூரார் ஆகியோர் எழுதியுள்ள பாரத வெண்பா, வில்லிபாரதத்தில் இந்நிகழ்ச்சி பற்றிய வரிகளைக் காணலாம்.

பெருந்தேவனார் பாடியுள்ள பாரத வெண்பாவில் கீழுள்ள கருத்தமைந்த பாடல் காணப்படுகிறது. (உத்தியோக பருவம் — பாடல் 319, 320).

“சொக்கட்டான் ஆட்டத்தில் தான் தோற்றுப் போகப்போவதால் எழுந்துவிட்டாள் எனக்கருதி





துரியோதனன் மனைவியின் துகிலை நான் பற்றியிழுத்து அவளை அமரச் செய்ய முயன்றேன். அப்போது அவள் மேகலை அறுந்துவிட, அதனின்றும் சிந்திய முத்துக்களைக் கண்ட அவன் அவற்றை எடுக்கவோ கோக்கவோ எனக் கேட்டான். என்மீது சந்தேகமே கொள்ளாத அந்நண்பனுக்காகப் போரில் என்னுயிரைப் போக்கிக் கொள்ள மாட்டேனா நான்?'

பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கென்புகுந்த தென்னாம—
னான்மணியைக்
கோக்கோ பொறுக்கவோ வென்றானுக்
கென்னுயிரைப்
போக்கா தொழிவனோ புக்கு.
மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை
யான்பிடிக்க
வற்று விழுந்த வருமணிகண்— மற்றவற்றைக்
கோக்கேனோ வென்றுரைத்த கொற்றவற்கெ
னாருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு.'

வில்லிபுத்தூராரும் இதே கருத்தில் அமைந்த பின்வரும் பாடலைத் தமது பாரதத்தில் (வில்லி பாரதம்— உத்தியோக பருவம்— பாடல் 255) பாடியுள்ளார்.

மடந்தை பொற்றிரு மேகலை மணியுகவே
மாசறத் திகழும் ஏகாந்த
இடந்தனில் புரிந்தே நானயர்ந்து இருப்ப,
“எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;
திடம்ப டுத்திட வேலிராச ராசனுக்குச்
செருமுனைச் சென்று, செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே, எனக்கினிப் புகழும்,
கருமமும், தருமமு மென்றான்.

பெருந்தேவனார் எனும் பெயரில் சங்ககாலம் தொட்டுப் பல புலவர்கள் இருந்து வந்துள்ளனர். பாரதம் பாடியோருள் இவர் இரண்டாமவர் என்பர்.

வில்லிபுத்தூராரின் காலம் கிட்டத்தட்ட 14—ஆம் பொது நூற்றாண்டு கருதப்படுகிறது. இவரை ஆதரித்த வரபதி ஆட்கொண்டான் எனும் மன்னனின் வேண்டுகோளின்படி வேதவியாசர் எழுதிய மகாபாரதத்தைத் தமிழில் இவர் எழுதியுள்ளார்.

இரு புலவர்களுமே வடமொழியிலான வியாச பாரதத்தைத் தமிழில் இயற்றினாலும் நட்பின் உயர்வைக் காட்டுவதற்காகவே இங்ஙனம் ஒரு நிகழ்ச்சியைப் புதுமையாகப் புகுத்தியுள்ளனர் என எண்ண இடமிருக்கிறது.

துரியோதனன் மனைவி பானுமதியும் கர்ணனும் ஒரு நாள் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர். பாதி ஆட்டத்தில் திடீரென்று பானுமதி எழுந்தாள். அவள் தோற்கும் நிலையில் இருந்ததால் பயந்து ஓடப் பார்க்கிறாள் என்று நினைத்த கர்ணன் அவள் புடவையைப் பிடித்து இழுத்து நிறுத்த முயற்சி செய்தான். கைதவறி பானுமதியின் இடுப்பில் இருந்த மேகலையில் கர்ணன் கை சிக்கவே மேகலையில் ஒட்டியிருந்த முத்துக்கள் சிதறின. பானுமதி திடீரென எழுந்ததற்குக் காரணம் அவளது கணவன் துரியோதனன் உள்ளே நுழைந்ததாகும். துரியோதனன் கண் முன்னால், முத்து மேகலை சிதறவே இருவரும் தலை குனிந்து


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



அதனால் அல்லவோ, அந்தப்புரத்தில் தன் மனைவியுடன் மாற்றான் ஒருவனை சொக்கட்டான் ஆட அனுமதித்தான். கர்ணனோ துரியோதனனுக்கும் மேலே ஒரு படி சென்று நட்புக்கு இலக்கணம் வகுத்தவன்.

கர்ணன் தனது மூத்த மகன் என்று கூறி குந்தி சொன்ன போதும் கட்சி மாற மறுத்தான் கர்ணன். அப்போது அவன் கூறிய சம்பவம் தான் மேலே கூறப்பட்ட முத்து மேகலை சம்பவம். இதைச் சொல்லி அம்மா! இப்படிப் பட்ட துரியோதனனுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதே என் வாழ்வின் லட்சியம் என்று சொல்லிவிடுகிறான்.



நின்றனர். அடுத்தது என்ன நிகழுமோ என்று பானுமதியும் கர்ணனும் அஞ்சிக் கொண்டிருந்த வேளையில், துரியோதனன் “எடுக்கவோ கோக்கவோ” என்றான். இந்த முத்துக்களை எடுக்கவா அல்லது மாலையாகக் கோர்த்துத் தரட்டுமா? என்று அன்போடு வினவுகிறான்.

கர்ணனின் நட்பைக் கடவுளுடன் கொண்ட நட்பாகக் கருதுபவன் துரியோதனன். கர்ணனுடைய ஒழுக்கத்தின் மீது அவனுக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்படவில்லை. கர்ணனே வியப்படையும் அளவுக்கு அவன் நடந்து கொண்டான்.



புறநானூற்றில் பிராமணன் — க்ஷத்ரியன் மோதல்

புறநானூற்றில் பிராமணப் புலவனும் — க்ஷத்ரியனனான சோழ மன்னனும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர். ஒரு காய் உருண்டோடியதால் சோழ மன்னன் கோபம் கொண்டான். உடனே சோழ மன்னன், சொக்கட்டான் காய்களைப் பிராமணப் புலவன் மீது வீசி எறிந்தான். உடனே புலவர் உன்னுடைய குலத்தில் "பார்ப்பனர் நோவன செய்யலர்" என்று நயமாகக் கூறினார். உடனே அவன் வெட்கித் தலை குனிந்தான்.

புறநானூற்றுப் பாடல் 43 இந்த சம்பவத்தை விளக்குகிறது. சோழன் நலங்கிள்ளி யின் தம்பி மாவளத்தானும் பார்ப்பனப் புலவர் தாமப் பல் கண்ணனாரும் வட்டு விளயாடுகையில் இது நடந்தது.

புலவர் தாமப்பல் கண்ணனார் கூறுகிறார்:

கதிரவனைச் சுற்றி வரும் முனிவர்களும் வியப்படையும் வண்ணம் புறாவுக்காக உயிர்தர முன்வந்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்த தேர்வண் கிள்ளியின் தம்பியே! உன் பிறப்பில் ஐயம் கொள்கிறேன். ஆத்திமாலை சூடிய சோழ மன்னன் எவரும் பிராமணர் வெறுக்கும் செயலைச் செய்யத் துணியார். நீ எப்படிச் செய்தாய்? என்று நான் வெகுண்டேன். இப்படி நான் சொன்னவுடனே உடனே என் மீது கோபிக்காமல் வெட்கப்பட்டாய். சோழர்குடியின் பெருமையை நிலை நாட்டிவிட்டாய். இப்போது நானே தவ்று செய்தேன் என்று தோன்றுகிறது. காவிரி ஆற்றின் மணலை விட நீ நீண்ட காலம் வாழ்வாயாக என்று தாமப்பல் கண்ணனார் வாழ்த்துகிறார்:

'ஆர்புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம்

பார்ப்பார் நோவன செய்யலர் (புறம் 43)'

மேற்கண்ட இரண்டு கதைகளும் விளக்கும் கருத்துகள் அற்புதமானவை.

# சித்து

## இலங்கையில் சூடுபிடிக்கும் தேர்தல் பிரசாரம் – தமிழர்களைக் கவர கட்சிகள் செய்வது என்ன?

இலங்கையில் இந்தாண்டு அதிபர் தேர்தல் நடைபெற உள்ளதால், அரசியல் கட்சிகள் பிரசாரத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளன. தமிழர்களின் வாக்குகளை கவரும் நோக்கத்துடன், பிரதான எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து, வட மாகாணத்திற்கு பயணம் மேற்கொள்வதை காண முடிகின்றது. அதிபர் ரணில் விக்ரமசிங்க மூன்று நாட்கள் பயணமாக வட மாகாணத்திற்கு சென்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், காணி உறுதிப்பத்திரங்கள் உள்ளிட்டவற்றை மக்களுக்கு வழங்கிய பின்னணியில், ஏனைய பிரதான எதிர்க்கட்சிகளும் தமது பார்வையை வட மாகாணத்தை நோக்கி நகர்த்தியுள்ளன.

இலங்கை நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றது. அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட உறுப்பினர்களும் வட மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறான பின்னணியில், இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் 13—வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சு மீண்டும் பேசுபொருளாகியுள்ளது.

அரசியலமைப்பின் 13—ஆவது திருத்தத்தை தமது ஆட்சியின் கீழ் நடைமுறைப்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வட மாகாண விஜயத்தின் போது தெரிவித்திருந்தார். இது பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.''சில அரசியல்வாதிகள் வடக்கு மக்களை, அரசியல் சங்கீத நாற்காலி விளையாட்டுக்கு உட்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு நேரத்தில் பறந்து வந்து, ஒவ்வொரு விடயங்களை செய்கின்றனர். அரசியலமைப்பின் 13—ஆவது திருத்தம் என்பது புதுமையானது ஒன்றல்ல. அது எமது சட்டத்தில் உள்ள ஒன்றாகும். 13—ஆவது திருத்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாண சபைகள் அனைத்தும் செயலிழந்துள்ளது.மாகாண சபைத் தேர்தல், இதற்கு முன்னர் நடத்தப்பட்ட விதத்திலேயே நாடாளுமன்றத்தில் அனுமதி பெற்று, இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும் என்று சஜித் உறுதி தெரிவித்தார்.மேலும், "மாகாண சபைத் தேர்தலை கூட நடத்த முடியாத தலைவர்கள் எவ்வாறு, 13—ஆவது திருத்தம் குறித்துப் பேசுவார்கள். வடக்கு மாகாணத்திற்கு மாத்திரம் அல்ல, முழு நாட்டிற்கும் நல்லிணக்கம் தேவைப்படுகின்றது," என்றார்.

13—ஆவது திருத்தத்தையும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, படிப்படியாக நடைமுறைப்படுத்துவோம் எனவுளனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 13—ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக எதிர்கட்சித் தலைவர்



# விளையாட்டு

## மீண்டும் மீண்டும்

ரஞ்ஜன் அருண் பிரசாத்

சஜித் பிரேமதாஸ வெளியிட்ட கருத்துக்கு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பை வெளியிட்டது. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன, கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் இந்த எதிர்ப்பை வெளியிட்டார்.''தான் ஆட்சிக்கு வந்ததும், 13—ஆவது திருத்தத்தை நடைமுறை படுத்துவதாக சஜித் பிரேமதாஸ தெரிவிக்கின்றார். போலீஸ் மற்றும் காணி அதிகாரங்கள் போன்ற விடயங்களில் எவ்வாறு இந்த அதிகாரத்தை வழங்குவீர்கள் என்ற கேள்வியை நாங்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் எழுப்புகின்றோம்.




30 வருடங்களாக போர் இடம்பெற்ற நாட்டில் வாழ்ந்த மக்கள் வாழும் நாடு இது எனக்கூறிய அபேகுணவர்தன, அவ்வாறான நிலைமையிலிருந்து மீட்கப்பட்ட நாட்டை மீண்டும் பிரிப்பதற்கான முயற்சி.'' எனவும் தெரிவித்தார்.

அதிபர் தேர்தலை கருத்தில் கொண்டே சஜித் இக்கருத்தைக் கூறியுள்ளதாக தெரிவித்த அபேகுணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் தனது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காக மிகவும் கீழ்மட்டத்திற்கு சென்றுள்ளார் என்று விமர்சித்தார்.'13—ஆவது திருத்தம் என்பது இந்த நாட்டிலுள்ள சட்டம்'சஜித் பிரேமதாஸவின் கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி தெளிவூட்டியது.''13—ஆவது திருத்தம் என்பது இந்த நாட்டிலுள்ள சட்டம். இந்த நாட்டிலுள்ள சட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என எவரேனும் வாக்குவாதத்தில் ஈடுபடுவார்களாயின், அதுவும் அரசியலமைப்பிற்கு முரணான கருத்தாகும்,'' என, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார். போலீஸ், காணி அதிகாரங்கள் அல்ல, மாகாண சபைத் தேர்தலை உரியவாறு நடத்தாது 13—ஆவது திருத்தத்தை கைவிட்டதனாலேயே இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாக தெரிவித்த அவர், ஸ்தம்பிதமடைந்துள்ள மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்ற பொருளிலேயே சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டிருந்தார் என தெளிவுபடுத்தினார்.13—ஆவது திருத்தம் தொடர்பிலான பேச்சு மீண்டும் பேசுப்பொருளாக மாறிய நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு காரணமாக அமைந்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, மாகாண சபை முறைமை தொடர்பில் கருத்து வெளியிட்டது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.




இந்த விஜயத்தின் போது, அநுர குமார திஸாநாயக்கவிற்கும், இலங்கை தமிழரசு கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றதுடன், அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு காரணம் மக்கள் விடுதலை முன்னணி என்ற நிலைப்பாட்டை தமிழர்கள் கொண்டிருக்கின்றார்கள். அது தொடர்பில் என்ன பதில் கூற விரும்புகின்றீர்கள் என செய்தியாளர் ஒருவர், அநுர குமார திஸாநாயக்கவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.''எதிர்காலத்தை எப்படித் தீர்மானிப்பது என்றே எண்ணமே தற்போது எம்மிடம் உள்ளது. எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காக தமிழ் மொழியை பேசுகின்ற மக்களுக்கு, குறிப்பாக அரசியல் தொடர்பில் என்னால் உறுதியொன்று வழங்க வேண்டியுள்ளது. அந்த மக்கள் தொடர்பிலான தீர்மானங்களை எடுக்கும் போது அவர்களுக்கான உரிமையை வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறான விடயங்கள் தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும். அனைவரும் கடந்த காலங்கள் தொடர்பில் சிந்தித்தால், எதிர்காலத்தை எம்மால் தீர்மானிக்க முடியாது,'' என அநுர குமார திஸாநாயக்க பதிலளித்தார்.

மாகாண சபை என்பது அதிகார பகிர்வு என்பதால், தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபை தொடர்பில் இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதாக தெரிவித்த திஸாநாயக்க மாகாண சபை முறையில் தீர்வொன்று கிடைக்கவில்லை என்பதையும் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறினார். அதனையும் தாண்டிய ஒரு நடைமுறையொன்று தேவைப்படுகின்றது என வலுயுறுத்திக் கூறிய அவர், அரசியலமைப்பு, சட்டம், நடைமுறை சாத்தியமான, பொருளாதார ரீதியான பல்வேறு துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவே சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என தான் நம்புவதாக கூறினார்.

தேசிய மக்கள் சக்தி, மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவர்களுடன், இலங்கை தமிழரசு கட்சி, யாழ்ப்பாணத்தில் அண்மையில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிட்டார்.13—ஆவது திருத்த மாகாண சபை முறைமை, தமிழ்த் தேசிய பிரச்னைக்கு தீர்வு இல்லை என்பதை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து தெரிவித்தார்.

''தேசிய மக்கள் சக்தியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை முன்னேற்றகரமான பேச்சுவார்த்தை என்று வர்ணிக்கலாம். எல்லா விடயங்களுக்கும் தீர்வு கண்டுவிடவில்லை. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வகையில் ஆரம்ப பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கின்றது,'' எனத் தெரிவித்தார்.

ஊழல் ஒழிப்பு, மக்கள் மத்தியில் சமவுரிமைகள், பொருளாதார சமத்துவம் போன்ற விடயங்களில் அவர்களுடன் நேரடியாகவே இணங்கி போக முடிகின்றது என சுமந்திரன் கூறினார்.''தமிழ் தேசிய பிரச்னைக்கான தீர்வு என்ற விடயத்தில் பல ஏற்றத் தாழ்வுகள், பழைய சரித்திரங்கள் இருந்தாலும் கூட இருக்கின்ற மாகாண சபை முறைமையை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். அதனை நடைமுறைப்படுத்துவார்கள் என்று சொல்லியிருக்கின்றார். மாகாண சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றார்,'' என அவர் கூறினார். ஆனால், தற்போதுள்ள 13—ஆவது திருத்த மாகாண சபை முறைமை, தமிழ்த் தேசிய பிரச்னைக்கு தீர்வு இல்லை என்பதை அவர்களும் ஏற்றுக்கொள்கின்றார்கள் எனக்கூறிய சுமந்திரன், இந்த விடயத்தில் இரு தரப்பினரும் சேர்ந்து போக வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

தமிழ் மக்களின் தாயகத்தில் வடக்கு—கிழக்கு இணைந்ததான ஒரு அலகிலே பூரண அதிகாரப் பகிர்வு, அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு என்பதை




எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கூறியதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.மேலும் பேசிய அவர், ''13—ஆவது திருத்தத்தை இன்றைக்கு அமல்படுத்துவேன் என்று சொல்வது கூட அர்த்தமில்லாது இருக்கின்றதை தெளிவாக எடுத்து சொன்னோம். அவர் விசேடமாக ஒன்றை சொல்லியிருந்தார். நிதி பகிர்வு தொடர்பில் சொல்லியிருந்தார். அதிகாரப் பகிர்வை கொடுத்து விட்டு, நிதி பகிர்வை கொடுக்கா விட்டால், அந்த அதிகார பகிர்வைக் கொடுத்து எந்தவித பிரயோசனமும் இல்லை என சொல்லியிருந்தார்," என்றார்.

தமிழ் மக்களின் தாயகத்தில் வடக்கு—கிழக்கு இணைந்ததான ஒரு பூரண அதிகார பகிர்வு, அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு என சுமந்திரன் கூறினார். "தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அதிகார பகிர்வு பற்றிப் பேசாமல், அது குறித்த வாக்குறுதிகளை கொடுக்காமல், வேறு விடயங்களை சொல்வது, அதிகார பகிர்விலிருந்து தப்பியோடுகின்ற விடயமாக எங்களுடைய மக்கள் கருதுவார்கள்," எனவும் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை முன்னாள் அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987—ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29—ஆம் தேதி இந்த 13—ஆவது திருத்தச்சட்ட உடன்படிக்கை கையெழுத்தானது. அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த உடன்படிக்கை அப்போது கைச்சாத்திடப்பட்டது. இதன்படி, நாட்டில் மாகாண சபைகளை உருவாக்கும் நோக்கில், இந்த 13—ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.இந்த மாகாண சபை முறையின் ஊடாக, காணி மற்றும் போலீஸ் அதிகாரங்கள் மாகாண சபை வசமாகின்றன. எனினும், மத்திய அரசாங்கம் இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை வழங்காதிருக்கின்றது.இலங்கையில் தமிழ் மொழி பேசும் சமூகம், நாட்டின் ஏனைய பகுதிகளில் கலந்து காணப்படுகின்ற போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையிலேயே இந்த 13—ஆவது திருத்தம் அமைக்கப்பட்டுள்ளது.இந்த திருத்தச் சட்டத்தின் ஊடாக, இலங்கையில் 9 மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்த மாகாண சபைகளாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006—ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.இதன்படி, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால், வடக்கு கிழக்கு இணைப்புச் சட்டமானது, சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் 2007—ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாக பிரித்து உத்தரவு பிறப்பித்தது. அரசியலமைப்பிலுள்ள மாகாண சபை முறைமையை அமல்படுத்துமாறு தமிழர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்ற போதிலும், இன்று வரை அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க மத்திய அரசாங்கம் தவிர்த்து வருகின்றது.

'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாக' ஒரே ஒரு எம்.பி.யை வைத்துக் கொண்டே ஒருவரால் இலங்கையில் அதிபராக முடியும் என்றால், இவரது பின்னணியில் எவ்வளவு ஊழல்வாதிகள் இருக்கிறார்கள் என்பதற்கு இதுவே உதாரணம் ஆகும்.

இலங்கை அதிபராக இருப்பதற்கு ஒரு சிங்களவராக இருந்தாலே போதும் எனும் தகுதியை நிர்ணயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு தமிழ்த் தலைவர்களும் துணையிருந்து விலைபோவது காலத்தின் கொடுமை!

இதுவரை பெரிதாய் ஒன்றும் மாற்றம் ஏற்படுத்த அதிபராக இருந்தவர், இனி என்ன செய்துவிடப் போகிறார் என்ற கேள்வியும் மக்களிடம் எழாமல் இல்லை! எனவே இதற்கான தக்க பதிலை இலங்கைத் தேர்தல் முடிவுகள் தரும் என்று நம்புவோம்!

# பணம் பந்தியிலே

## இந்திய கோடீஸ்வர குடும்பத்தினருக்கு சுவிட்சர்லாந்தில் 4 ஆண்டு சிறைத் தண்டனை

வீட்டுப் பணியாளர்களை கொடுமைபடுத்திய குற்றத்திற்காக பிரிட்டனில் வசித்து வரும் பணக்கார ‘ஹிந்துஜா’ குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

‘ஹிந்துஜா’ குடும்பத்தினர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ள தங்களுடைய வீட்டில் பணிபுரிய சில பணியாளர்களை இந்தியாவில் இருந்து அழைத்து வந்துள்ளனர்.பிரகாஷ் ஹிந்துஜா, கமல் ஹிந்துஜா, மற்றும் அவர்களது மகன் அஜய் மற்றும் மருமகள் நம்ரதா ஆகியோர் சட்டவிரோதமாகப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தியது மற்றும் சுரண்டலில் ஈடுபட்டதாக நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அவர் நான்கு முதல் நான்கரை ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும். இருப்பினும், ஆள்கடத்தல் போன்ற கடுமையான குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாக ஹிந்துஜா குடும்பத்தினர் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். அவரது வழக்கறிஞர் ராபர்ட் அசெல், “இது அதிர்ச்சியளிக்கிறது. நாங்கள் இறுதிவரை போராடுவோம்,” என்றார்.ஹிந்துஜா குடும்பம் ஒரு நாளைக்கு 18 மணிநேரம் வேலை செய்ததற்கு ஏழு பவுண்டுகள் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.740) மட்டுமே வழங்கியதாகக் குற்றம் சாட்டினார் இந்தியாவிலிருந்து அவரால் அழைத்துச்செல்லப்பட்ட மூன்று ஊழியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். சுவிஸ் சட்டத்தின்படி, ஊழியர்களுக்கு இதற்கு குறைந்தபட்சம் 70 பவுண்டுகள் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.7400) வரை வழங்கி இருக்க வேண்டும்.தங்களது பாஸ்போர்டைக் கைப்பற்றி வைத்துக்கொண்டு, சுதந்திரமாக நடமாடுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜெனிவாவில் உள்ள ஒரு வீட்டில் ஊழியர்களைச் சுரண்டி வேலை வாங்குவது தொடர்பாக ஹிந்துஜா குடும்பத்திற்கெதிராக விசாரணை தொடங்கப்பட்டதில் இருந்து கிட்டத்தட்ட 6 ஆண்டுகளாக இந்த குடும்பத்தை சுவிஸ் நிர்வாகம் கண்காணித்து வருகிறது. 47 பில்லியன் டாலர் (சுமார் 4 லட்சம் கோடி இந்திய ரூபாய்) வணிக மதிப்பு கொண்ட கார்ப்பரேட் சாம்ராஜ்யத்தைக் கொண்ட ஒரு குடும்பம், தங்கள் வேலையாட்களை விட அவர்களின் நாய்க்கு அதிக பணத்தைச் செலவழிப்பதாக வழக்குத் தொடரப்பட்டது.

ப்ளூம்பெர்க் செய்தி அறிக்கையின்படி, அரசாங்க வழக்கறிஞர் யவ்ஸ் பெர்டோசா, நீதிமன்றத்தில், “ஹிந்துஜா குடும்பத்தினர் ஒரு பணியாளரை விட

# குணம் குப்பையிலே

தங்கள் நாய்க்கு அதிகம் செலவழித்துள்ளனர்," என்று கூறினார்.அந்த வீட்டில் ஒரு முதிர் பணிப்பெண் ஒரு நாளைக்கு 18 மணிநேரம் வேலை செய்துள்ளார். அதற்கு அவருக்கு கொடுக்கப்படும் ஊதியம் வெறும் $7.84 (ரூ.655.13) தான். அதே நேரத்தில் அந்த குடும்பம் தங்கள் நாய்க்கான உணவு மற்றும் பராமரிப்பிற்காக ஆண்டுக்கு $10,000 (ரூ.8,35,629.50) செலவழித்ததாக ஆவணங்கள் காட்டுகின்றன.

பல வேலையாட்கள் வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டியிருந்தது என்றும், அவர்களது சம்பளமும் இந்திய ரூபாயில் தான் இருக்கும் என்றும் பிரான்சு நாணய மதிப்பில் கொடுக்கப்படுவதில்லை என்றும் அந்த அதிகாரி

## இமோஜென் :பாக்ஸ்

கூறினார்.ஹிந்துஜா குடும்பத்தினர் தரப்பு வீட்டில் வேலைக்கு அழைத்து வரப்பட்டவர்களுக்கு போதிய வசதிகளைச் செய்து கொடுத்ததாகவும், அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு எந்தத் தடையும் விதிக்கவில்லை என்றும் அவர்களின் வழக்கறிஞர்கள் தரப்பு தெரிவித்துள்ளது.

'குறைந்த சம்பளம்' என்ற குற்றச்சாட்டை ஹிந்துஜா குடும்பத்தின் வழக்கறிஞர்கள் மறுக்கவில்லை, ஆனால் பணியாட்கள் தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்பட்டு கௌரவத்துடன் நடத்தப்பட்டதாக கூறியுள்ளனர்.பணியாட்களிடம்



நீண்ட நேரம் வேலை வாங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும் மறுக்கப்பட்டன, அதில் குழந்தைகளுடன் திரைப்படங்களைப் பார்ப்பதை வேலையாகக் கருத முடியாது என்று ஒரு வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

தீப்சந்த் ஹிந்துஜா, சுதந்திர இந்தியாவில் நன்கு அறியப்பட்ட சிந்தி நகரமான ஷிகர்பூரில் பிறந்தார். 1914—இல், அவர் இந்தியாவின் வர்த்தக மற்றும் நிதியின் தலைநகரான பம்பாய்க்கு (இப்போது மும்பை) பயணம் செய்தார்.ஹிந்துஜா குழுமத்தின்




ஹிந்துஜா தரப்பு வழக்கறிஞர்கள் கூறுகையில், "பாதிக்கப்பட்டோம் எனக் கூறும் பலர் ஹிந்துஜா குடும்பத்திற்காக பல சந்தர்ப்பங்களில் பணிபுரிந்துள்ளனர். பணிச்சூழலில் அனைவரும் திருப்தி அடைந்திருப்பதை இது காட்டுகிறது," என்றனர். அக்குடும்பத்துக்காக வாதாடிய வழக்கறிஞர்கள், குடும்பத்திற்காக முன்பு பணியாற்றிய பலரையும் சாட்சியாக அழைத்தனர். அவர்கள் நீதிமன்றத்தில் ஹிந்துஜா குடும்பத்தை நன்னடத்தை கொண்டவர்கள் என்றும், அவர்கள் தங்கள் வேலையாட்களை மரியாதையுடன் நடத்தியதாகவும் தெரிவித்தனர்.

ஹிந்துஜா குடும்பத்தின் வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர் மீது அவதூறு பரப்பியதாகக் குற்றம்சாட்டினார். இந்தியாவைப் பூர்விகமாக கொண்ட ஹிந்துஜா குடும்பம், அதே பெயரில் பல வணிக நிறுவனங்களை நடத்தி வருகிறது. கட்டுமானம், ஆடை, ஆட்டோமொபைல், எண்ணெய், வங்கி மற்றும் நிதி போன்ற துறைகளில் ஹிந்துஜா குழுமம் வணிகத்தில் ஈடுபட்டு வருகிறது.

ஹிந்துஜா குழுமத்தின் நிறுவனர் பர்மானந்த் இணையதளத் தகவலின்படி, அவர் அங்குள்ள வணிகத்தின் நுணுக்கங்களை விரைவாகக் கற்றுக்கொண்டார். சிந்துவில் தொடங்கிய அவரது வணிகப் பயணம் 1919—இல் இரானில் ஒரு அலுவலகத்தைத் தொடங்கி சர்வதேச அரங்கில் நுழைந்தார். குழுவின் தலைமையகம் 1979 வரை இரானில் இயங்கியது. அதன் பிறகு ஐரோப்பாவிற்கு மாற்றப்பட்டது. ஆரம்ப ஆண்டுகளில், ஹிந்துஜா குழுமத்தின் செயல்பாடுகளின் இரண்டு முக்கிய அடித்தளங்களாக வணிக வங்கி மற்றும் வர்த்தகம் செயல்பட்டன.ஹிந்துஜா குழும நிறுவனர் பர்மானந்த் தீப்சந்த் ஹிந்துஜாவின் மூன்று மகன்கள் —— ஸ்ரீசந்த், கோபிசந்த் மற்றும் பிரகாஷ் ஆகியோர் செயல்பாடுகளைக் கையிலெடுத்து, நிறுவனத்தை வெளிநாடுகளில் விரிவுபடுத்தினர்.

2023—ஆம் ஆண்டில் ஸ்ரீசந்த் ஹிந்துஜாவின் மரணத்திற்குப் பிறகு, அவரது இளைய சகோதரர் கோபிசந்த் அவருக்குப் பதிலாக குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றார். சுவிட்சர்லாந்தில் மனித கடத்தல் வழக்கை எதிர்கொண்டிருந்த பிரகாஷ், மொனாக்கோவில் தேக்கமடைந்த ஒரு

வணிகத்தை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார். ஹிந்துஜா குடும்பம் பிரிட்டனில் பல மதிப்புமிக்க சொத்துக்களை வாங்கியுள்ளது.

இளைய சகோதரருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்ததாக ஆவணங்கள் காட்டுகின்றன.

ஜெனிவாவின் இருண்ட பக்கம்






சகோதரர்களுக்கிடையே பிரச்னை

ஹிந்துஜா குழுமம் செப்டம்பர் 2023—இல் லண்டனின் ஓல்ட் வார் அலுவலகமான வைட்ஹாலில் ராஃபிள்ஸ் ஹோட்டலைக் கட்டியது. இது முன்னர் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகமாக இருந்தது. இந்த ஹோட்டலின் தனித்துவமான அம்சம், இது கிரேட் பிரிட்டன் பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லமான 10 டவுனிங் தெருவில் இருந்து சில மீட்டர் தொலைவில் உள்ளது.இந்தக் குழு கார்ல்டன் ஹவுஸின் மாடியில் ஒரு தளத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளது. அதில் பல அலுவலகங்கள், குடியிருப்புகளைக் கொண்டுள்ளது. தவிர, இது பக்கிங்ஹாம் அரண்மனைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள தங்கள் நிறுவனங்களில் 2 லட்சம் பேர் பணிபுரிவதாக ஹிந்துஜா குழுமம் கூறுகிறது. ஜூன் 2020—இல் பிரிட்டன் நீதிமன்றத்தில் ஒரு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வாக்குமூலத்தின்படி, ஹிந்துஜா சகோதரர்களுக்கு இடையேயான உறவில் சில சிக்கல்கள் இருந்தது.

சகோதரர்களில் மூத்தவரான ஸ்ரீசந்த், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ள வங்கியின் உரிமையைப் பெறுவதற்காக தனது

உலக பணக்காரர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் மையமாக இருக்கும் ஜெனிவாவில் பணியாட்களை கொடுமைப்படுத்துவதாக பதிவு செய்யப்படுவது இது முதல் வழக்கு அல்ல.2008—இல், லிபிய முன்னாள் சர்வாதிகாரி முயம்மர் கடாபியின் மகன் ஹன்னிபால் கடாபியும் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்து அல்பைன் நகர காவல்துறையால் கைது செய்யப்பட்டார். ஹன்னிபால் கடாபியும் அவரது மனைவியும் தங்கள் வேலைக்காரரை அடித்து கொடுமைப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டனர்.இந்த வழக்கு முடிக்கப்பட்டது, ஆனால் இதன் காரணமாக லிபியாவிற்கும் சுவிட்சர்லாந்திற்கும் இடையில் ராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்பட்டது, பழி வாங்கும் விதமான இரண்டு சுவிஸ் குடிமக்கள் திரிபோலியில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த ஆண்டு, நான்கு பிலிப்பைன்ஸ் பணியாளர்கள், பல ஆண்டுகளாக தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை எனக் கூறி ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் மீது வழக்குத் தொடர்ந்தனர்.

சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

48

## 48. விடை கொடுத்த கிரேக்கம்!

கொற்றவன்

நடுச்சாம நேரம்!... தெளிந்த வானம்!... குளிர்ந்த நிலவு!...

கிரேக்க அரண்மனையில், தனக்கு ஒதுக்கப்பட்ட அந்த அறையின் சாளரத்தில் நின்று கடற்பரப்பை வெறித்துக் கொண்டிருந்தான் வில்லவன்.

அங்கிருந்து பார்க்கும்போது, கடற்கரையில் உயர்ந்து நிற்கும் ஹீலியஸ் சிலையும், அவனுக்கு முதுகுகாட்டியபடி கடற்பரப்பை வெறிக்கும் சிங்கங்களும் நிலவொளியில் தகதகத்தன.

நடுச்சாம நேரமானாலும் உறக்கம் வருவதற்கான எந்த அறிகுறியும் அவனிடத்தில் இல்லை! அவன் நினைவுகள் முழுவதும் தியோதாரா நிறைந்திருந்தாள்.

நடந்ததெல்லாம் கனவா நனவா என்ற பிரமிப்பு அவனை ஆட்டுவித்தபடியே இருந்தது. சேரநாட்டுக் குடாக் கடலோரம் உலவிக் கொண்டிருந்தவனை, அப்படியே அள்ளி எடுத்து வந்து கிரேக்கப் பேரரசின் மண்ணில் உலவவிட்டு, இந்த உலகத்து அதிசயங்கள் என்னவெல்லாம் இருக்கிறது பார் என்பதுபோல, ஒரு சில மாதங்களிலேயே எத்தனை எத்தனை அனுபவங்களை வழங்கிவிட்டாள் அந்தத் தங்கச் சிலை!



தங்க வார்ப்பைப் போலிருந்த கடலலைகளில் தங்கப்பதுமையாய் தோன்றிச் சிரிக்கும் தியோதாராவின் முகம் தெரிந்தது.

ஆகா!... என்னவொரு அழகு!... சேரநாட்டுக்கு எத்தனையோ யவனப் பெண்கள் வந்திருக்கிறார்கள்! அவர்களது சிவந்த மேனியும், பொன்னிற கூந்தலும், நீலம்படர்ந்த விழிகளும் சேரநாட்டுக்கு ஒன்றும் புதிதல்லதான்!

ஆனால் இந்த தியோதாரா மட்டும் தனித்துவமானள்! உலகப் பேரழகிகளில் எல்லாம் தலைசிறந்தவளைத் தேர்ந்தெடுக்கச்



சொன்னால்... இவளைத்தான் எல்லோரும் தேர்வு செய்ய வேண்டியிருக்கும்! அப்படிப்பட்ட அப்பேரழகியின் முகம்!...

அன்றொரு நாள்...

தெள்ளத் தெளிவாய் அவள் முகம் தன் கனவில் தோன்றியது எப்படி? கனவில் கண்டவளை நேரில் கண்டதையும், நேரில் கண்டவளை அவளது ஊரில் கொண்டு சேர்த்ததையும், கிரேக்கத்திலேயே தங்க வேண்டியவள், மீண்டும் தன்னோடு சேரநாடு நோக்கிக் கடற்பயணம் மேற்கொள்ள முடிவெடுத்து உறுதியாக இருப்பதையும் எண்ணி எண்ணி மலைத்தான்!

இது தற்செயலான ஒன்றல்ல, இதுவொரு இறைசெயல் என்பதையும் அவனால் உணரமுடிந்தது.

இறைவனின் திருவிளையாடல் அதிசயங்களை யார்தான் புரிந்து கொள்ள முடியும்? எப்படியோ இறைவின் திருவுளம் இணைக்க முடிவெடுத்துவிட்ட பின் தியோதாரவையும் தன்னையும் இனி யார்தான் பிரிக்க முடியும் என நினைத்தவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

“எல்லாம் இறைவன் செயல்!” என அவன் அதரங்கள் அனிச்சையாக அசைந்தன.

“எல்லாம் இறைவன் செயல்!”

வில்லவன் கூறிய வார்த்தைகள் அந்த அறையில் எதிரொலித்தது போல இருக்கவே, சுற்றிலும் பார்வையை ஓடவிட்டவன் முகத்தில் குறுநகை படர்ந்தது.

“வரவர எனக்குப் பித்து பிடித்து விட்டது” புன்னகை மாறாமலேயே புலம்பினான் வில்லவன்.

“வரவர எனக்கும் தான் பித்து பிடித்து விட்டது!” இம்முறை எதிரொலி தியோதாராவின் குரலில் தெளிவாக ஒலித்தது.

தன் மீதே ஐயம் கொண்டவனாய் தடுமாறிய வில்லவன், அப்போதுதான் தியோதாராவைக் கவனித்தான். அந்த அறைக்குள் சுவற்றில் சாய்ந்தபடி நின்ற தியோதாரா கண்களைச் சிமிட்டிச் சிரித்தாள்.

“தாரா... இங்கே... இந்நேரத்தில் எப்படி?...”

“மன்னிக்கவும்!...”

“எதற்கு மன்னிப்பு?”

“தங்கள் அனுமதி பெறாமல்... இங்கே வந்ததற்கு!...”

“ஏன் அனுமதி? கிரேக்கமே கொண்டாடும் இத்தீவின் சொந்தக்காரிபோல் விளங்கும் தங்களுக்கு இந்த ஒற்றை அறைக்குள் வர ஏன் அனுமதி?”

“நூறு அறைகள் இருந்தாலும், தங்களின் இந்த அறைக்கு இணையாகுமா?”

“ஏன்? இந்தக் அறைக்கு அப்படியென்ன தனிச்சிறப்பு?”

“அதை நான் சொல்லித்தான் தெரிந்து கொள்ள

வேண்டுமா? தங்களுக்கே தெரியாதா?" தியோதாரா அவனை ஓரக்கண்ணால் பார்த்து பொய்க்கோபம் காட்டினாள்.

அவளது விழிகளை நோக்கியவன், அந்த வேல்விழிகளின் வீச்சின் தாக்கம் தாங்காமல், தன் பார்வையைக் கடலின் பக்கம் திருப்பி சில நொடிகள் அமைதி காத்தான்.

தெரியாமல் தடுமாறினாள்.

அவளுக்குள் சில வார்த்தைகள் வெளிவரத் துடித்தன. 'எங்கள் கிரேக்கத்தில் அழகும் வீரமும் பொருந்திய வீரர்கள் இல்லையா? ஆனால் கவர்ந்திழுக்கும் வனப்புமிக்க இந்தச் சேர மாவீரனுக்கு இணையாய் என் கண்கள் யாரையுமே ஒப்புநோக்க மறுக்கின்றனவே! இதற்கென்ன சொல்வேன்?'



"நான் வந்தது..." தியோதாராவின் தயக்கமான வார்த்தைகளுக்கு அவன் திரும்பினான்.

"நான் வந்தது தங்களுக்குப் பிடிக்கவில்லையோ?" அவளது வார்த்தைகளைக் கேட்டு அவன் சற்றே பதற்றம் கொண்டான்.

"முகத்தைக் அப்பக்கம் திருப்பிக் கொண்டு விட்டீர்களே!... அதனால் கேட்டேன்!" புன்னகை பூத்தவாறே கேட்டாள்.

"மழையைக் கண்டதும் மயில் தோகையை விரித்தாடுகிறதே, அதை நடனம் என்பீர்களா? நடுக்கம் என்பீர்களா?"

"இதென்ன கேள்வி? மழையைக் கண்டால் மயிலுக்கு மகிழ்ச்சிதானே!"

"பிறகென்ன கேள்வி? உலகப் பேரழகியான தங்களைக் கண்டால், எந்த ஆடவனுக்கும் உவகை வரத்தானே செய்யும்?" அவன் கூறியதைக் கேட்டதும், தியோதாராவின் சிவந்த கன்னங்கள் மேலும் சிவந்தன. சிறிதுநேரம் என்ன பேசுவதென்று

தியோதாராவின் அதரங்கள் அந்த வார்த்தைகளை வெளிப்படுத்தத் துடியாய் துடித்தன.

பெண்மை அவளை நெம்பித் தள்ளியது. மிகவும் பிரயத்தனப்பட்டு அந்த வார்த்தைகளைத் தன் கட்டுக்குள் வைத்தபடி, அவளும் சாளரத்தின் அருகே வந்து நின்றாள்.

கடற்பரப்பை ஆராய்ந்தவளின் பார்வை, நிலவின் மேல் சென்று நிலைத்தது.

அங்கே அமைதியில் சில கணங்கள் கரைந்தன.

"சற்றுமுன்பு தாங்கள் கேட்ட கேள்வியை இப்போது நான் கேட்கலாமா?" அவளது அமைதியைக் கலைத்தன வில்லவன் வார்த்தைகள்.

"ஆங்! என்ன கேட்டீர்கள்?" நிலவிடமிருந்து அவள் நினைவு திரும்பினாள்.

"தாங்கள் ஏன் முகம் திருப்பிக் கொண்டீர்கள் என்று கேட்டேன்! நான் சொன்னது தங்களுக்குப் பிடிக்கவில்லையா?"



“இல்லை! இல்லை! என் நினைவை இந்த முழுநிலவு ஈர்த்துக் கொண்டு விட்டது!”

“தவறில்லை! என்னை இந்த நீலக்கடல் ஈர்த்துக் கொண்டதைப் போல, தங்களை நிலவு ஈர்த்துக் கொண்டதா?”

“ஆம்! எந்தச் சூழலிலும் நம்மை ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு!”

“இயற்கைக்கு மட்டுமா? நம் இதயத்தைக் கவர்ந்தவர்களுக்கும் அந்த ஆற்றல் உண்டு!” வில்லவன் கூறியதைக் கேட்டு வியப்புற்றவளாய் அவனைப் பார்த்தாள் தியோதாரா.

இம்முறை அவளது விழிவீச்சை அவன் எதிர்கொண்டான். நான்கு விழிகளும் நேருக்குநேர் சந்தித்துக் கொண்டதில் அவர்களது உள்ளத்தில் தேனூற்று சுரந்தது. விழி யுத்தத்தை விலக்கிக் கொள்ளுங்கள் என்று அறிவு அறிவுறுத்தியது. ஆனால் ஆசை கொண்ட மனமோ அடம்பிடிக்கத்தான் செய்தது.

அறிவும் ஆசையும் எதிரெதிர் துருவங்கள் போல நின்று போராடத் தொடங்கினால் பல புதிர்கள் தோன்றும்! அந்தப் புதிர்களில் பல அற்புதனகள் விளங்கக் கூடும்!

வாழ்க்கையின் புதிர் முடிச்சுகளால்தான் துன்பம் வருகிறது என்று நினைக்கிற மனித இயல்புகள் அவர்களை ஆட்டுவித்தது. ஆனால் அந்தப் புதிர் முடிச்சுகளில் ஒளிந்திருக்கும் சுவாரசியங்களையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

சிலநேரம் தங்களது மனவோட்டம் இன்னதென்று விளங்கப்படுத்துவதும், மறுகணமே அதனை விளங்க மறுப்பதுமாய் அவர்கள் இருவரது கண்கட்டு ஆட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

காற்றில் மேலும் ஈரப்பதம் கூடிக் கொண்டிருந்ததில், தியோதாராவுக்கு குளிர் குத்தியது. மேனி சிறிது நடுக்கம் கொண்டது.

“இப்படி குளிர்க் குத்தும் வேளையில் இங்கே வரலாமா?” அன்பு ததும்ப வினவினான்.

“அதையே நானும் கேட்கலாம் அல்லவா?” வினாவை வில்லவன் பக்கம் திருப்பிக் முறுவலித்தாள் தியோதாரா.

“இப்படிக் கேள்வி கேட்டுக் கொண்டே இருவரும் இங்கேயே நின்று கொண்டிருக்க முடிவெடுத்து விட்டீர்களா? உறங்குவதாக உத்தேசம் இல்லையா?” என்றபடி அங்கே வந்தான் வளவத் திரையன். அவனைத் தொடர்ந்தாற்போல, தாலியாவும் உடன் வந்து நின்றாள்.

“எங்களை விடு! நீங்கள் இருவரும் என்ன எங்கே உலவிக் கொண்டிருகிறீர்கள்?” என அதிர்ச்சியை வெளிப்படுத்தினான் வில்லவன்.

"உங்களைத் தேடி இவர்! தோழியைத் தேடி நான்!" என தாலியா பதிலிறுத்தாள்.

"விடிந்தால் நாம் சேர நாட்டுக்குப் புறப்பட வேண்டும்! கப்பல் பயணம் முழுதும் பேசுவதற்கு உங்களுக்கு நேரம் இருக்கிறதே! பிறகென்ன இங்கு இப்போது இப்படி நின்ற கோலம்?" எள்ளல் நகையுடன் வினவிய வளவத்திரையனுக்கு, வில்லவன் பதிலளிக்காமல் தியோதாராவைப் பார்த்தான்.

"எல்லாம் காலம் செய்கிற கோலம்! இதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும் இப்போது?" என தியோதாரா எதிர்க்கேள்வி தொடுத்தாள்.

"இவர்களை இப்படி அழைத்து வந்து மீண்டும் அழைத்துப் போவதற்குத்தான் நாம் இவ்வளவு தூரம் வந்தோமா என சேரநாட்டில் கேட்பார்களே! என்ன சொல்வதாய் உத்தேசம்?" என மீண்டும் வளவத்திரையன் எழுப்பிய வினாவுக்கும் வில்லவனிடமிருந்து பதில் இல்லை!

அதன் பிறகும் அவர்கள் நால்வரும் அந்த நள்ளிரவில் நெடுநேரம் உரையாடிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அவர்களின் பல கேள்விகளுக்கு அங்கே முழுமையான பதில் ஏதும் கிட்டவில்லை!

முந்திக் கொண்டு அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அப்போதே விடை கிடைத்து விடுமா என்ன?

அவர்களின் கேள்விகளுக்கான பதிலைக் காலம் சரியான நேரத்தில் தரத்தான் போகிறது!

மறுநாள் காலை!..

தெலோஸ் தீவின் மக்கள் பெருமளவில் திரண்டு வந்து கடலரசிக்கு வழியனுப்பு விழாவைச் சிறப்பாகச் செய்தனர்.

கண்ணீர் மல்க தெலோஸ் தீவின் மன்னர் பாரீஸ், அனைவர்க்கும் விடை கொடுத்தார். அத்துடன் கிரேக்கத்தின் பொன்னும் மணியும் வைரமும் என எண்ணிலடங்கா பரிசில்களையும் கொடுத்தார்.

கதிரவன் மேலெழும்பிய சற்றைக்கெல்லாம் கடலரசி கம்பீரமாகப் புறப்பட்டது.

அதைத் தொடர்ந்தாற்போல சேர நாட்டு நாவாய்களும், கிரேக்க நாவாய்களும் அணிவகுத்தன.

காண்பதற்கே கொள்ளை அழகாய் அந்தக் காட்சி இருந்ததை, மக்களின் வார்த்தைகளும் ஆரவாரமும் பலவாறு பிரகடனப்படுத்தின.

கரையில் நின்று கையசைத்த மன்னரும் மற்றவர்களும் புள்ளிகளாகி மறையத் தொடங்கிய பின்னரும், தியோதாராவும் தாலியாவும் அத்திக்கையே பார்த்தபடி இருந்தனர்.

"நாம் சேரநாட்டில் இருந்து புறப்பட்டு ஆறு திங்களுக்கு மேலாகிவிட்டன. நாட்கள் எவ்வளவு விரைவாக ஓடிவிட்டன! இந்த அழகிய தீவில் சில நாட்கள் இருந்த எனக்கே இத்தீவைப் பிரிகிற வலி மிகுதியாக இருக்கையில், இவர்களின் நிலை..." என்றவாறு வந்து நின்றான் வளவத்திரையன்.

"பிறந்த நாட்டைப் பிரிகிற வேதனைக் கொடுமையிலும் கொடுமை!" வருத்தம் தொனிக்கக் கூறினாள் தாலியா.

"இப்போதும் பாதகம் ஒன்றுமில்லை!...விரும்பினால் உங்கள் தீவுக்குத் திரும்பிச் செல்லலாம்!" என்ற வளவத்திரையனின் அந்த வார்த்தைகளைக் கேட்டுச் சற்றே கோபம் கொண்டவர்களாக அப்பெண்கள் இருவரும் அவனது பக்கம் திரும்பினர்.

"சரி சரி! கோபம் கொள்ளாதீர்கள்! நீங்களாக விரும்பி இந்த முடிவை எடுத்திருக்கிறீர்கள்! நாங்கள் எவ்வளவோ எடுத்துக்கூறியும் மீண்டும் சேரநாட்டுக்கு விஜயம் செய்யும் முடிவை நீங்கள் மாற்றிக் கொள்ளவில்லை! இப்போது பாருங்கள், தாயை விட்டுப் பிரிகிற குழந்தையைப்போல கண்களைக் கசக்கிக் கொண்டிருக்கிறீர்கள்!" அவன் நகையாடுவதைக் கண்டு கொதிப்புற்றாள் தாலியா.

"திரையரே! சற்று அமைதி காத்தருளுங்கள்!" தாலியா கூறினாள்.

"ஆகட்டும்! அம்மணி!" என்றவாறு நகர்ந்தான் வளவத்திரையன்.

வில்லவன், கப்பலின் ஓட்டத்தில் நெளியும் கடலலைகளைப் பார்த்தபடி தலைகுனிந்து நின்றான். கப்பல் முன்னோக்கி நகர, கப்பலை விரட்டுவது போலவும், கப்பலிலிருந்து விலகி ஓடுவது போலவும் கடலலைகள் மாயத்தோற்றம் காட்டின.

இந்த அலைகள் எதையோ தெரிவிக்கின்றனவே! எதைக் காட்டுகின்றன? வில்லவன் மனது விடையற்ற விடையைத் தேடியது.

தியோதாரா... தமிழ் கற்பதற்காக சேரநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டாள். கடற் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு, சேரநாட்டு முசிறித் துறைமுகத்தில் கரையொதுங்கினாள். இவளை மீண்டும் கிரேக்கத்துக்குப் பத்திரமாகக் கொண்டு சேர்ப்பிக்க, தான் எடுத்த முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியபோது...

இதோ.... 'தமிழ் கற்க வேண்டும்' என்ற தன் எண்ணத்தில் இருந்து சற்றும் பின்வாங்காதவளாய் மீண்டும் சேரநாட்டுக்குப் புறப்பட்டுவிட்டாள்!

கிரேக்கத்திலேயே அவள் தமிழ் கற்பதற்கான ஏற்பாடுகளைத் தெலோஸ் மன்னர் செய்திருந்தும், பிடிவாதமாகச் சேரநாட்டில்தான் தமிழ் கற்பேன்



எனப் புறப்பட்டுவிட்டாள்.

எது எப்படியிருந்தாலும், தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட இந்தத் தங்கச்சிலையான கிரேக்கத் தாரகை மீண்டும் சேரநாட்டுக்குப் புறப்பட்டது, தனக்குக் காலம் வழங்கியிருக்கும் நல்வாய்ப்புதான்!'

எண்ணங்கள் அலை அலையாய் ஓட, வில்லவன் கடலலைகளைப் பார்த்த வண்ணமே தலைக் கவிழ்ந்திருந்தான்.

தியோதாராவின் பார்வை இப்போது வில்லவன் பக்கம் திரும்பியது.

கடற்கரையில் தன்னந்தனியவளாய் ஒதுங்கிக் கிடந்த தன்னைக் காப்பாற்றி, மீண்டும் கிரேக்கத்துக்குப் பத்திரமாய் அழைத்து வந்ததோடல்லாமல், தெலோஸ் தீவுக்கு வரவிருந்த ஒரு பேராபத்தையும் தடுத்து, தன் தாய்நாட்டைக் காப்பாற்றிய இந்த வில்லவனிடம் எப்போதோ தன் மனதைப் பறிகொடுத்தாயிற்று! மேலும் என்ன இவருக்குக் கைம்மாறு செய்வது என்ற தவிப்பு அவளைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தது.

உலகில் வலிமையானதும், விலைமதிப்பற்றதும் அன்புதான்! ஆனால் அந்த அன்பைப் பண்டமாற்றுப் பொருள் போலப் பயன்கருதிப் பயன்படுத்திவிட்டால், அதைப் போல் மலிவான ஒன்றும், அற்பத்தனமான ஒன்றும் வேறில்லை!

காரண காரியங்களின் பொருட்டோ, பிரதிபலன் கருதும் பொருட்டோ அல்லது வேறெதென் பொருட்டோ அன்புக்கு அரிதாரம் பூசப்பட்டுவிட்டால்... தருபவருக்கும் பெறுபவருக்கும் அதைப் போன்ற தண்டனை வேறெதுவும் இல்லை!

வில்லவனும் தியோதாரவும் இதுகுறித்து ஒருவருக்கொருவர் நிறையவே சிந்தித்தபடியே இருக்கிறார்கள்.

சேர மாமன்னர் செங்குட்டுவரின் புதல்வன் தான்தான் என்பதைத் தெரிவிக்காமல் வில்லவனும், தெலோஸ் தீவின் இளவரசி தான்தான் என்பதைத் தெரிவிக்காமல் தியோதாரவும், ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்த வழிவகை தெரியாமல், கத்தியின்மேல் நடப்பதைப் போல அல்லாடிக் கொண்டிருக்கும் இந்தச் சூழல் என்று மாறும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆழ்கடலின் ஆழத்தை விடவும் ஆழமானது எது? உயர்ந்த மலைகளின் உயரத்தை விடவும் உயரமானது எது என்று அவர்கள் ஒருவருக்கொருவர் பாடம் படிக்கவிருக்கிறார்கள்!

அவர்களுக்குக் காலம் அதைக் கற்பிக்கக் காத்திருக்கிறது!

அந்தக் காலத்துக்காகவே அவர்களும் காத்திருக்கிறார்கள்!

(முதல் பாகம் முற்றிற்று!)

# தத்துவம்

ஓயாத ஒளிமழையில்
நிழல் முளைத்து ரீங்கரிக்கிறது
எல்லாமும்.

சிவந்த மலர்களின் தீயில்
குளித்து எழுகிறான் சூரியன்.
துல்லியங்களின் பருவமிது.

எறும்பும் அதன் நிழலும்போல
நொடியும் அதன் நினைவும்
சேர்ந்து நகர்கின்றன.

ஒரு பொருளுக்கு, எத்தனை
நிழல்கள்!
சிறுத்து, பெருத்து, கருத்து.

எல்லா நிழல்களும் சேர்ந்து
விரியும் கோடை இரவு,
மிகப் பெரிய கருப்புக் குடைபோல.

**ச.அனுக்ரஹா**

# எண்ணம்

எண்ணங்களை
ஏழு வண்ணங்களாக
மாற்றி
ஒவ்வொரு வண்ணத்திலும்
ஆயிரம் ஆயிரம் எண்ணங்களை
வைத்து
வானத்தில்
பறக்க விட்டேன்
படத்தை போல கயிறு கட்டி
நீல வானம்
பல வண்ணங்கள் கொண்ட வானமாக
மாறி போனது

# சிட்டு

ஊதா நிற ஓசனிச்சிட்டு
சாரலில் நனைந்து கொண்டு
அந்தரத்தில்
சிறகை பட பட வென்று
அடித்து கொண்டு
தன்னை நிலைநிறுத்தி கொண்டு
ஜிமிக்கிப்பூக்களை
சுற்றி சுற்றி
தேன் குடித்தது

**சோழன்**

# சிந்தித்து முடிவெடு

அழுகையில் தொடங்கி
அழுகையில் முடியும் — இந்த
அவல வாழ்வினில்
ஒரு முறையேனும்
மனம் விட்டு
சிரித்திருக்கிறாயா?
எண்ணிப்பார்.

பிறந்தவுடன்
பாலுக்கு அழுகை
கொஞ்சம் வளர்ந்தவுடன்
பள்ளிக்கு செல்ல அழுகை
பள்ளியில் மதிப்பெண்
குறைந்தால் அழுகை
பள்ளி முடித்து
கல்லூரியில் சேர அழுகை

பருவம் வந்ததும்
காதலிலும் அழுகை
காதலித்து கைப்பிடித்த
வாழ்விலும் அழுகை
வாழ்வின் அடுத்தபடி
மழலை செல்வத்துக்கு அழுகை

மழலை வளர்ந்து
மங்கை ஆனதும் அவள்
எதிர்காலம் நினைத்து
மனம் நடுங்க அழுகை
மங்கைக்கு நல்ல
மாங்கல்யம் அமைய அழுகை
மங்கை தாய்மை
அடைந்தால் சந்தோஷ அழுகை

பேரக்குழந்தை எட்டி உதைத்தால்
பெருகி வழிந்தோடுமே அழுகை
வயதான பின் பிள்ளைகளால்
கைவிடப்பட்டு
முதியோர் இல்லத்தின்
மூலையில் முடங்கிப் போகும்
முக்கல் முனகல் அழுகை

ஆக வாழ்வின்
ஒவ்வொரு அடியிலும்
ஒவ்வொரு நொடியிலும்
அழுகை...அழுகை....

அழுகை மறந்து
அகம் மகிழ
சிரிக்க மறந்தாயே

முகம் மலர
சிரிக்க மறுத்தாயே

அழு...அழு...
அழுகை நம்மோடு பிறந்தது
நம்மோடு தொடர்வது...

அழுவதும் சிரிப்பதும்
நம்மால் மட்டும்
செய்ய முடிவது.
இரண்டும் நம்
கை வசம் இருப்பது.
சிந்தித்து முடிவெடு
சிரிப்பதா? அழுவதா?

**ஜீவன் (மகேந்திரன்)**

## சாகசக் காட்சிகளில் மிரட்டும் அஜித்!



இயக்குநர் பா. இரஞ்சித்தின் நீலம் புரோடக்சன்ஸ் தயாரிக்கும் அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இப்படத்திற்கு, 'பாட்டல் ராதா' எனப் பெயரிட்டுள்ளனர். மதுப் பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் இப்படத்தில், நாயகனாக குரு சோமசுந்தரம் நடிக்கிறார். மேலும், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய், மாறன், ஆண்டனி உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இசை — ஷான் ரோல்டன். தன் கதாப்பாத்திரம் குறித்து சஞ்சனா பேசுகையில், "படத்தின் அளவை விட எனக்கும் கதைக்கும் முக்கியத்துவம் இருக்கிறதா என மட்டுமே கவனிப்பேன். தற்போதைய நோக்கம் நாயகியாக நடிக்க வேண்டும் என்பதே" என்கிறார்.

**'விடாமுயற்சி' விஸ்வரூப வெற்றியாகட்டும்!**

**பா. இரஞ்சித்தின் நீலம் புரோடக்சன்ஸ் நாயகி!**

அஜர்பைஜான் நாட்டில் நடிகர் அஜித்குமார் நடிக்கும் 'விடாமுயற்சி' படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியது. அஜித் அதிரடி சாகசக் காட்சிகளுக்கும் டூப் போடாமல் நடிக்கும் காட்சிகள் அங்கே படமாக்கப்பட்டு வருகின்றன. 'மங்காத்தா' படத்துக்குப் பின், நடிகர் அர்ஜுன் இத்திரைப்படத்தில் அஜித்குமாருடன் மீண்டும் இணைந்து நடிப்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்தப் படத்தில் ஆரவ், ரெஜினா, சஞ்சய் தத், அருண் விஜய் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். இதன் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தினை எட்டியுள்ளது. தீபாவளிக்கு படத்தினை வெளியிட திட்டமிட்டுள்ளது படக்குழு.

**சஞ்சனா நாயகியாக சஞ்சரிக்கட்டும்!**

## ரோட்டோர உணவகத்தில் கீர்த்தி சுரேஷ்!

## பிறந்தநாள் பரிசாகும் ராயன்!



## அரைசதம் விரைவில் முழு சதமாகட்டும்!

## இப்படி எல்லாம் வெற்றிக்கு வழியா?

தனுஷின் 50—வது திரைப்படமான "ராயன்' ஜூன் 13—ஆம் தேதி வெளியாகும் என முதலில் அறிவித்திருந்தனர். ஆனால், இத்திரைப்படத்தின் ரிலீஸ் தள்ளிப்போகிறது எனத் தொடர்ந்து பேசப்பட்டு வந்தது. தற்போது ரிலீஸ் குறித்தான அறிவிப்பை படக்குழுவே அதிகாரபூர்வமாக வெளியிட்டிருக்கிறது. ஜூலை 28 தனுஷின் பிறந்தநாள் என்பதால் அதன் ஸ்பெஷலாக படத்தை ஜூலை 26—ஆம் திரைக்கு எடுத்து வருகிறார்கள்.

ரிவால்வர் ரீட்டா, கன்னிவெடி, ஹிந்தியில் "பேபி ஜான்' என பிசியாக நடித்து வருகிறார் கீர்த்தி சுரேஷ். சினிமா பிரபலங்கள் என்றால் நட்சத்திர ஓட்டல்களில் தங்குவது, அங்கு சாப்பிடுவதுதான் வழக்கம். ஆனால், சமீபத்தில் சென்னையில் இரவு நேரத்தில் ரோட்டோர உணவகத்தில் மக்களுடன் நின்று சாப்பிடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியது. நெட்டிசன்கள் பலரும் வரவேற்பு தெரிவித்து பதிவிட்டு வருகின்றனர். அதனால் கீர்த்தியின் நடிப்பில் வரும் 'ரகுதாத்தா' படக்குழு பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறது. படத்துக்கான ப்ரோமொஷனாக இது அமைந்திருப்பதாக மகிழ்கின்றனர் 'ரகுதாத்தா' குழுவினர்.



# தல வலம்

## திருக்கருப்பறியலூர்
(தலைஞாயிறு)

### திருச்சித்திரக்கூடம்
(தலைஞாயிறு)

புவனகிரி செயபாலன்

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே.

திருஞானசம்பந்தர்

இறைவர் ஸ்ரீ குற்றம் பொறுத்த நாதர்.

இறைவி ஸ்ரீ கோலவளைய நாயகி, விசித்திர பாலாம்பிகை அம்பாள். தலவிருட்சம் கொடிமுல்லை.

தீர்த்தம் சூரிய புஷ்கரணி.

கோகுடி என்பது முல்லையில் ஒருவகை. இதைத் தலவிருட்சமாக கொண்டதால் ஆலயப் பெயர் கோகுடி கோயில். ஊரின் பெயர் கருப்பறியலூர்.

தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் காவிரி வடகரை தலங்களில் 27வது தலம். 2000 ஆண்டு பழமை வாய்ந்த கோயில்.





தலப்பெயர்

இத்தலம் சீர்காழிக்கு மேற்கில் இருப்பதால் மேலைக்காழி என்றும், சூரியன் வழிபட்டதால் தலை ஞாயிறு. தலவிருட்சம் முல்லை என்பதால் யூதிகா வனம். பிறவிக்கு ஏதுவாகிய கன்மம் கெடுதியால் கன்ம நாசபுரம். சூரியன் அர்ச்சனை செய்ததால் ஆதித்தபுரி. பிறவிப் பிணி போக்கி பிறவா நெறி தருதலால் கருப்பறியலூர் எனப் பெயர்கள் பல உண்டு.

தீர்த்தம்

விநாயகர் தீர்த்தம், (பழவாறு நதி) வசிப்பட தீர்த்தம், அனுமன் தீர்த்தம், நிம்ப புஷ்கரணி, சங்க புஷ்கரணி, பொற்றாமரை, செங்கழுநீர் தடாகம் என எட்டு தீர்த்தங்கள்.

புராணம்

கயிலை மலையில் உள்ள வனத்தில் அணுவளவு தவம் செய்தாலும் அது மேருமலை போல் வளர்ந்து பயன் தரும். அங்குள்ள தடாகக் கரையில் ஆங்கிரஸ், கௌதமர், வாமதேவர், கபாலி முனிவர்கள் தவம் செய்து வந்ததைக் கண்ட பெருமான் (ஈசன்) பூலோகத்தில் யூதிகா வனம் சென்று தவம் செய்தால் எல்லா சக்திகளையும் அடையலாம் என்று சொல்ல, முனிவர்கள் அவ்வாறே தவம் செய்ய, இறைவன் சுயம்புலிங்கத்தில் தோன்றி சிவகதி அளித்து அருளினார். சிர்து தேசத்து அரசன் சுசரிதனின் மகன் விசித்திராங்கன். அவனது மனைவி சுசீலை. மக்கட் பேறுக்காக அமைச்சரிடம் அரசாட்சியை ஒப்புவித்து விட்டு தல யாத்திரையாக காசி முதல் பல தலங்களையும் தரிசித்து திருப்புண்கூரில் ஒரு வேப்பமரத்தடியில் அமர்ந்தனர்.

அப்போது ‘நீங்கள் அருகில் உள்ள யூதிகா வனம் சென்று விநாயக நதியில் நீராடி இறைவனை வழிபட்டால் துன்பம் நீங்கும்!’ என்று ஒரு அசிரீரி சொன்னது.

இருவரும் அதன்படியே செய்ய, பெருமான் அருள் பாலித்தார். சுசீலை மகப்பேறு பெற்றாள். இருவரும் சில காலம் அங்கேயே தங்கி ஆலயப்பணி செய்து ஊருக்குச் சென்றனர்.

இராவணன்

புலத்திய முனிவர் மக்கள் செல்வம் பெற கயிலை மலையில் கடுந்தவம் இருக்க, பெருமான் அருள் செய்தபடி இங்கு வந்து வழிபட்டார். அம்மையோடு தோன்றி அருள் பாலித்தார். பத்து தலைகளுடன் ராவணன் பிறந்தான். ராவணனும் கடுந்தவம் செய்து மிகுந்த வலிமை பெற்றான்.



பெற்றார்.

இராமர்

ராவணனை கொன்ற பாவம் தீர ராமர், ராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தை வைத்து சிவலிங்க பூஜை செய்ய விரும்பி அனுமனிடம் இரண்டரை நாழிகைக்குள் சிவலிங்கம் கொண்டு வரப் பணித்தார்.

அனுமன் வர காலம் தாழ்ந்ததைக் கண்டு மணலால் லிங்கம் அமைத்து வழிபட அவரது பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது. சிவலிங்கத்தோடு வந்த அனுமன், தான் கொண்டு வந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்காக, ராமர் வழிவட்ட லிங்கத்தை பெயர்த்து எடுக்க முயன்று தோல்வி கண்டு மூர்ச்சையானான். இதனால் அனுமனுக்கு சிவ அபராதம் ஏற்பட்டது.

ஒரு சமயம் புஷ்பக விமானத்தில் ராவணன் செல்லும்போது ஓரிடத்தில் விமானம் செல்ல முடியாமல் தடைபட்டு நிற்க, கீழே இறங்கி வந்து பார்த்தான். சிவாலயத்தின் மீது விமானத்தின் நிழல் பட்டதால் தடை ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்தான். விநாயக நதியில் நீராடி இறைவனை வழிபட, தன் துயர் நீங்கி கயிலை சென்றான்.

இந்திரஜித்

ராவணன் மகன் மேகநாதன் இந்திரனை வென்றதால் இந்திரஜித் எனப் பெயர் பெற்றான். இவன் வானத்தில் பறக்கும்போது இவனது விமானம் இத்தலத்தில் மேலே நகரவில்லை. காரணம் சிவலிங்கம் தடுத்தது. இந்திரஜித் சிவலிங்கத்தைப் பெயர்க்க முயற்சித்ததால் உயிர் துறந்தான்.

ராவணன் தன் மகனின் குற்றத்தைப் பொறுத்து உயிர் பிச்சை அளிக்குமாறு இறைஞ்சவே, இறைவன் அருள் புரிந்தார். இந்திரஜித் உயிர்பெற்று ராவணனோடு இலங்கை சென்றான். தான் செய்த குற்றத்தை பொறுத்தருள வேண்டுமென இத்தல ஈசனை வழிபட அவனை மன்னித்து அருள் தந்ததால் குற்றம் பொறுத்தீஸ்வரர் எனப் பெயர்

இதைக் கண்ட ராமர், ‘அனுமனே! நீ சிவனை நினைத்து தவம் இருந்தால் சிவ தோஷம் நீங்கும்.’ என்று யோசனை கூற, அதன்படி அனுமன் செய்யலானான். அனுமன் முன் சிவன் தோன்றி ‘அனுமனே! நீ கன்மபுரம் (தலை ஞாயிறு) சென்று வழிபாடு செய்தால் இத்தோஷம் நீங்கும்’ எனக் கூறவே, அதுபோல் அனுமன் செய்ய, அந்த தோஷம் நீங்கியது.

சிவனின் அருளை வியந்த அனுமன், இத்தலத்துக்கு வடகிழக்கில் தன் பெயரால் ஒரு லிங்கம் அமைத்து அதை வழிபாடு செய்ய ஆரம்பித்தார். இத்தலம் தற்போது ‘திருக்குரக்கா’ என்று அழைக்கப்படுகிறது.

வச்சிராயுதம்

ஒரு முறை இந்திரன் இறுமாப்புடன் கையிலைக்குச் சென்றான். அப்போது ஈசன் பூதவடிவாய் தோன்றினார். இந்திரன் அவரை ஈசன் என்று அறியாமல் அவர் மீது வச்சிராயுதத்தை எறிந்தான். அதன் பின் ஈசன் என்பதை தெரிந்து கொண்டு தன் பிழையை பொறுத்தருளுமாறு வேண்டினான்.



நின்ற நிலையில் கோலவளை நாயகி அருள்பாலிக்கிறார்.

'கூற்றானைக் கூற்று தைத்துக் கோல் வளையால் அவளோடும்...' என்றும்,

'சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்

வைத்து ஐந்து திறம்பா வண்ணம்

கைம்மாவி னுரிவை போர்த்துமை வெருவக்

கண்டானைக் கருப்பறியலூர்...' எனச் சுந்தரர் தன் பதிகங்களில் பாடியுள்ளார்.

சட்டைநாதர் சன்னிதி

சீர்காழியில் இருப்பது போலவே, உயர்ந்த தனிக் கோயிலாக சட்டை நாதர் சன்னதி உள்ளது. மேலேறிச் சென்று தோணியப்பரைத் தரிசித்துவிட்டு, அதற்கும் மேலே சென்று சட்டைநாதரை தரிசிக்க செங்குத்தான மரப்படிகள் வழியே ஏற வேண்டும். அதனாலே இது 'மேலைக்காழி' என்று அழைக்கப்படுகிறது.

ஈசனும் இந்திரன் குற்றத்தை பொறுத்து அருள் செய்தமையால் 'குற்றம் பொறுத்த நாதர்' என்ற பெயர் ஏற்பட்டது என்று தல வரலாறு கூறுகிறது. இத்தல ஈசனுக்கு 'அபராத சமேஸ்வரர்' என்ற பெயரும் உண்டு.

கோயில்

இவ்வாலயம் மூன்று நிலையுடன் கூடிய ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோபுர வாயிலைக் கடந்ததும் முன் மண்டபம் உயர்ந்து காணப்படுகிறது. ஒளிமண்டபம் வௌவ்வால் நெத்திமண்டப அமைப்பில் காணப்படுகிறது.

மூலவர் சன்னதி கோபுர வாசலுக்கு நேரே இல்லாமல், சிறிது வடக்கே தள்ளி கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். வடக்கே தெற்கு நோக்கி

தோணியப்பர் சன்னதியை தற்போது கர்ப்ப ஞானேஸ்வரர் கர்ப்ப ஞான பரமேஸ்வரி சன்னிதி என்று அழைக்கிறார்கள்.

கோயில் வடபுறத்தில் தலவிருட்சம் ஜாதி முல்லையும், அதன் அடியில் ஆதிலிங்கமும் உள்ளன.

மகா மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகள், நடராஜர், மண்டபத்து வடக்கு பக்கம் சுவரில் நாரை வழிபடும் கல் சிற்பம், கர்ப்ப கிரக கோஷ்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, வடபகுதியில் பிரம்மன், துர்க்கை, சண்டிகேஸ்வரருக்கு தனி சன்னதி உள்ளது.



சுயம்புவாக தோன்றிய மூலவருக்கு தனி உற்சவர் கிடையாது.

கல்வெட்டு

இத்தலத்துக்கு மூன்றாம் குலத்துங்கன், கோனேரின்மை கொண்டான், இராசராச தேவர், பிரதாப கிருஷ்ண தேவராயர் போன்றோர் கால 12 கல்வெட்டுகள் உள்ளன. சுவற்றில் உள்ள கல்வெட்டில் ஊர் சபை உறுப்பினர் ஆவதற்கு உரிய சட்டதிட்டங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் குலோத்துங்க சோழர் காலத்தில் இவ்வூருக்கு 'தனிநாயக சதுர்வேதிமங்கலம்' என்று பெயர். இவரது ஆட்சியில் சோழகுலத்தான் மங்களாதிராசர் என்பவர் கோயிலில் ஸ்தூபியை அமைத்தார் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

தருமபுர ஆதீனம் கட்டுப்பாட்டில் இருக்கும் இக்கோயிலுக்கு 1953 ஆம் வருடம் அஷ்ட மகா கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

அதன்பிறகு 70 ஆண்டுகளுக்குப் பின், தற்போது கோயில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு கடந்த 2022 ஆண்டு, ஆக.22 அன்று மகா குடமுழுக்கு நடைபெற்றது.

பரிகாரம்

சூரியன், தான் பெற்ற சாபத்திலிருந்து விடுபட, பல சிவ தலங்களில் வழிபட்டான். அவ்வாறு வழிபட்ட அனைத்து தலங்களும் சூரிய தோஷ பரிகாரத் தலங்கள் எனப் போற்றப்படுகின்றன. அதன்படி இத்தலமும் சூரிய தோஷ பரிகாரத் தலம் ஆகும். தோஷமுள்ளவர்கள் இத்தலத்துக்கு வந்து இறைவனை வழிபட்டு தோஷம் நீங்கப் பெறலாம்.

இந்த உலகில் தவறு செய்யாத மனிதன் என்று யாருமே கிடையாது. தவறு செய்வது எப்படி மனித இயல்போ, அவற்றை பொறுத்து அருள்வது தெய்வ இயல்பு! எப்படிப்பட்ட தவறு செய்யும் எவரையும் மன்னிக்கும் விசாலமான மனம் கொண்டவர் சிவபெருமான். அந்த ஈசனை சரணடைந்து தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்பவர்களுக்கு ஈசன் மன்னித்து அருள் புரிவது இத்தலம்!

கல்வியில் சிறப்பு பெறவும், நீண்ட நாள் திருமணம் ஆகாமல் இருப்பவர்களும் இங்கு வந்து பிரார்த்தனை செய்து வணங்கினால் உடனடியாக பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்!

கோவில் திறக்கும் நேரம்

தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து மேற்கே 8 கி.மீ. தூரத்தில் பட்டவர்த்தி என்ற ஊர் உள்ளது. இந்த ஊருக்கு வடகிழக்கில் 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை மணல்மேடு சாலை வழியாகவும் வரலாம். பேருந்து வசதிகள் உண்டு!

(தொடரும் வலம்.....)




# இராஜ ராஜ சோழன்

**ஆசிரியர்:** ஜெகாதா

**விலை :** ரூ. 600

**வெளியீடு:**
குமரன் பதிப்பகம்,
சென்னை–17




அனைத்துத் துறைகளிலும் நானூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி முத்திரை பதித்த நூலாசிரியர் ஜெகதா, மாறுபட்ட கோணத்தில், இராஜ ராஜ சோழனின் வாழ்க்கை வரலாற்றை இதுவரை எவரும் அறியாத புத்தம்புது தகவல்களுடன் அளித்துள்ளார்.

இலங்கையைக் கைப்பற்றியவர், தென் கிழக்கு ஆசியாவில் புலிக்கொடியை பறக்க விட்டவர் என்ற பெருமைகளை உடைய இராஜ ராஜ சோழன் கி.பி. 1014—இல் மரணித்ததில் எழும் சர்ச்சை, உடையாளூரில் சமாதி போன்றவை குறித்து மாறுபட்ட தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இராஜ ராஜ சோழனின் மூதாதையர், அவருடைய படையெடுப்புகள், சோழ சாம்ராஜ்ஜியம், கூட்டாட்சி, சூழ்ச்சிப் பின்னணி, உள்ளாட்சி நிர்வாகங்கள், ஆன்மிகப் பணிகள், அயல்நாட்டு உறவுகள், மொழி, கல்வி வளர்ச்சி, கடற்படை, நாணயங்கள், நீர்வளம், நில உரிமை படைத்தவர்கள், வாரிசுரிமைக்கு எதிரான போராட்டம் என்று 50 கட்டுரைகளில் சோழப் பேரரசைப் பற்றி முழுமையாக அறியக் கூடிய நூல் இது.



# ஈரம்

பானுமதி ராஜகோபாலன்

அழைப்பு மணி ஒலித்தது. கம்ப்யூட்டரில் மூழ்கியிருந்த ஆனந்த், கடிகாரத்தை பார்த்தான். இரவு பத்தரை!

“இந்த நேரத்தில் யார்? சொந்தக்காரரர் கல்யாணத்துக்கு போன இந்திராவாஞ் நாளை தானே கல்யாணம். நாளை மாலை ரிசப்ஷனுக்கு சென்று, கையோடு இந்திராவை அழைத்து வருவதாக இருந்ததேஞ்’ என, யோசனையுடன் கதவைத் திறந்தான்.

பூட்டிய கிரில்லுக்கு அப்பால், ஒரு பெரியவர், கசங்கிய சாதாரண வேட்டி சட்டை, முகத்தில் கருப்பும், வெள்ளையுமாக மண்டிய ரோமக் காடு, நீண்ட பயணத்தால் களைத்த முகம் என, கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார்.

அவர் கையிலிருந்த சீட்டை பார்த்தார்.

“ஆனந்த், நம்பர். 8, யோகானந்தம் நகர்?”

“ஆமாம்… இது தான். நான் தான் ஆனந்த்… நீங்க… என்ன வேணும்?”

அவர் வறண்ட உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

“நான் உங்கப்பாவோட நண்பன்; காரைக்காலேருந்து வர்றேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்.”

பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து, ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

வாங்கிப் பார்த்த ஆனந்த், “அப்பாவா?” என்று வினவியபடி, கடிதத்தை படித்தான்.

அதில், “அன்புள்ள ஆனந்துக்கு, அப்பா எழுதுவது. ஆசிர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி, என் நண்பன். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை, சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான். விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால், ராமசாமியும், அவர் மனைவியும் வாழ, ஓரளவாவது உதவியாக இருக்கும்.

“விபத்து சம்பந்தமான போலீஸ் விசாரணை, விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வேன் உரிமையாளர் தர ஒப்புக் கொண்ட இழப்பீடு போன்ற சகல விவரங்களையும் சேகரித்து, அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில், தலைமை அலுவலகத்தில் தருவார்களாம்… சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது; செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பை பார்த்துக் கொள். பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வர வேண்டும். உன் அப்பா பரமேஸ்வரன்…’ என்று எழுதப்பட்டிருந்தது.



சொன்னார். பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு… அதான்… அகாலத்திலே வந்து…”

“அதனாலே என்ன . . . பரவாயில்லை.”

பிரிட்ஜை திறந்து பார்த்தான் ஆனந்த்.

தோசைமாவு இருந்தது. நான்கு தோசை சுட்டு, மிளகாய் பொடி, எண்ணெய், தண்ணீர் கொண்டு வந்து, டேபிள் மேல் வைத்தான்.

“சாப்பிடுங்க... இதோ வர்றேன்,” என்றவன், வாசல் பக்கம் மொபைலுடன் போனான்.

திரும்பி வந்த போது, சாப்பிட்டு முடித்து, கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார் ராமசாமி.

“சொல்லுங்க... என்ன நடந்தது?” என்று, அவர் எதிரில் அமர்ந்து, பேப்பர்களை வாங்கிப் பார்த்தான்.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராமசாமி.

ஒரு வினாடி யோசித்தவன், சட்டென சாவி எடுத்து வந்து, கேட்டைத் திறந்தான்.

“வாங்க சார்… உட்காருங்க…” என்றவன், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். தயங்கியபடி உள்ளே வந்த ராமசாமி, தண்ணீரை வாங்கிப் பருகினார்.

“சாப்பிட்டீங்களா?”

“இல்லே… வழியிலே இரண்டு வாழைப் பழம் சாப்பிட்டேன். பஸ் லேட்டு, காலையில காரைக்கால்லே கிளம்பினா, சாயங்காலம் மெட்ராஸ் போயிடலாம்ன்னு உங்கப்பா

பையனின் போட்டோ இருந்தது. 22 வயதில், அழகாக, பதவிசாக இருந்தான் பையன். ஆனந்துக்கு கண்கள் கலங்கின.

முகத்தை துடைத்துக் கொண்டார் ராமசாமி.

“இவனுக்கு முன்னாலே பிறந்த நாலஞ்சு பேரும், சின்ன வயசிலேயே போய் சேர்ந்துட்டாங்க… இவன் தான் தங்கினான். மகேஷ்ன்னு பேர்; கஷ்டப்பட்டு படிக்க வெச்சேன்… பொறுப்பான பிள்ளை. ஸ்காலர்ஷிப்லயே பி.இ., முடிச்சான். வேலை கிடைச்சுட்டா, நம்ம கஷ்டம் தீர்ந்துடும்ன்னு வாய்க்குவாய் சொல்வான்; வேலையும் கிடைச்சுது.

என்னையும், என் மனைவியையும், நிற்க வச்சு நமஸ்காரம் செய்துட்டு, மெட்ராஸ் கிளம்பினான். பஸ் ஸ்டாண்ட் போக, ரோடு கிராஸ் செய்யறப்போ, வேகமா வந்த டிராவல் வேன் மோதி, ஸ்பாட்லேயே...” மேல் துண்டால் முகத்தை மூடி, குலுங்கினார் ராமசாமி; பேசாமல் அவரையே பார்த்தான் ஆனந்த்.



அவராகவே தொடர்ந்தார்.

“அந்த வேன் சொந்தக்காரர், நஷ்ட ஈடு தர ஒத்துக்கிட்டார். முதல்லே அதை வாங்கவே மனசு ஒத்துக்கல. பிள்ளையை பறி கொடுத்துட்டு, அந்த பணத்திலே சாப்பிடறதான்னு வெறுப்பா இருந்தது. உங்கப்பா தான் எனக்கு ஆறுதல் சொல்லி, வாங்கிக்க சொல்லி வற்புறுத்தினார். எனக்கு நிரந்தரமா ஒரு வேலையும் கிடையாது. என் மனைவி ஏற்கனவே நோயாளி, பிள்ளை போன துக்கத்திலே, படுத்த படுக்கையாயிட்டா... எங்களை பகவான் அழைச்சுக்கற வரை, சாப்பிட்டுத் தொலைக்கணுமே... அதனாலே, கடைசியா நஷ்ட ஈடு வாங்கிக்க சம்மதிச்சேன். உங்கப்பா தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து, இங்கே அனுப்பி வெச்சார். என் பிள்ளை உங்களுக்கு உதவி செய்வான்னு லெட்டர் கொடுத்தார்.”

“செய்யறேன்... கண்டிப்பா உதவி செய்றேன்,” என்று எழுந்தவன், அவர் படுக்க, பாயும் தலையணையும் கொடுத்தான்.

மறுநாள் காலை, காபி போட்டு அவருக்கு கொடுத்து, தானும் குடித்து, குளித்து விட்டு வந்தான்.

அவரும் குளித்து விட்டு வர, இருவருமாக பைக்கில் கிளம்பினர்.

“இங்கே நுங்கம்பாக்கம்ன்னு இருக்காமே... அங்கே தான் ஹெட் ஆபீஸ் இருக்காம்.”

“நுங்கம்பாக்கம் பக்கம் தான். நான் கூட வந்து செஞ்சு தர்றேன்” வழியில் ஓட்டலில் டிபனை முடித்து, டிராவல் ஆபீஸ் வந்தனர்.

பார்மாலிடீஸ் எல்லாம் முடித்து, “செக்‘ கைக்கு வர மதியானம் ஆகி விட்டது.

“ரொம்ப நன்றிப்பா... எனக்காக ரொம்ப சிரமப்பட்டுட்டே. நான் இப்படியே ஊருக்கு கிளம்பறேன். இப்ப பஸ் புடிச்சா, ராத்திரிக்குள்ளே காரைக்கால் போயிடலாம். என் மனைவி தனியா இருக்கா; துணைக்கு ஆள் இல்லை...”

“நானே பஸ் ஏத்தி விடறேன் வாங்க,” என்றவன், ஓட்டலுக்கு அழைத்துப் போய், அவர் மறுத்தும் கேளாமல், சாப்பிட வைத்து, தானும் சாப்பிட்டான்.

கோயம்பேடு வரை, பைக்கில் அழைத்துச் சென்று, காரைக்கால் பஸ்சில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐநூறு ரூபாயை, பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான்.

“ஒரு நிமிஷம்...” என்று போனவன், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தான்.

“ஊர் போய் சேர எத்தனை நேரம் ஆகுமோ, வழியிலே சாப்பிட்டுக்குங்க...” என்று, டிபன் பொட்டலம், தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை, அவரிடம் கொடுத்தான்.

அவர் நெகிழ்ந்தார்.

“என்னாலே உனக்கு ரொம்ப சிரமம்ப்பா. லீவு வேறே போட்டுட்டு, எனக்காக அலைஞ்சிருக்கே... ஊருக்கு போனதும் முதல் வேலையா உங்கப்பாவைப் பார்த்து நன்றி சொல்லணும்.”

ராமசாமி உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொண்டே போக, அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான், ஆனந்த்.

“ஒரு விஷயம் சார்... நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லே...”

ராமசாமி திடுக்கிட்டார்.

“என்னப்பா சொல்றே?”

“ஆமாம்... நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க... நான் இருக்கிறது, யோகானந்தம் நகர் எக்ஸ்டன்ஷன். நீங்க, மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது, கிட்டத்தட்ட, 2 கி.மீ., தொலைவில இருக்கு.”

ராமசாமிக்கு, ‘குப்’பென வியர்த்தது.

“அடடா... தப்பு செய்துட்டேனே... ரொம்ப ரொம்ப சாரிப்பா. நீ, நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே... அனாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கட்டு...”

அவரைத் தடுத்தான் ஆனந்த்.

“நீங்க வந்தது ராத்திரி பத்தரை மணிக்கு... மெட்ராஸ்ல இருக்கிறவங்களுக்கே, இங்க அட்ரஸ் தேடி கண்டு பிடிக்கறது கஷ்டம்; நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும், நீங்க வந்த காரியத்தை சார்...”

டிரைவரும், கண்டக்டரும் பஸ்சில் ஏற, எழுந்தான் ஆனந்த்.



பத்தி தெரிஞ்சதுலே, எனக்கு மனசு சங்கடமா போயிட்டது...

“அதான் உங்களை சாப்பிட சொல்லிட்டு, லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினேன். நீங்க அட்ரஸ் மாறி வந்த விஷயம் கேட்டு, உங்க நண்பர், அதான் அந்த ஆனந்தோட அப்பா, ரொம்பவே வருத்தப்பட்டார். அவர் கிட்டே, அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கிப் பேசிட்டு... பொழுது விடிஞ்சதும், ஒரு ஆட்டோவிலே உங்களை அனுப்பி வைக்கலாம்னு இருந்தேன்.

“ஆனா, மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபீஸ் விஷயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா, நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்னு... எந்த ஆனந்துன்னா என்ன சார்... நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க, நான் உதவியா இருந்தேனேன்னு, நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும்

அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை, ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது.

“நல்லா இருப்பா... நல்லா இரு... வேறென்ன சொல்றது?”

பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப் போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான்.

“அப்பா... நீங்க இப்ப உயிரோடு இருந்து, இது மாதிரி லெட்டர் கொடுத்தனுப்பி இருந்தாலும், கண்டிப்பா உதவி செஞ்சிருப்பேன். என் வளர்ச்சியை பார்க்காமலே போயிட்டீங்களே... யாரோ ஒருத்தருக்கு பிள்ளையா இருந்து, அவர் நண்பருக்கு உதவி செய்திருக்கேன் அப்பா... உங்களுக்கு திருப்தி தானே?”

கனத்த மனதுடன், பஸ்சை விட்டு இறங்கினான் ஆனந்த்.

# தமிழர்

## டி.ஆர். மகாலிங்கம் நூற்றாண்டு

கலை உலகில் கம்பீர குரலால் 45 ஆண்டுகள் ஆட்சி செய்த டி.ஆர். மகாலிங்கம்

கூடல் மாநகரான மதுரையை அடுத்த சோழவந்தான் அருகேயுள்ள தென்கரை கிராமத்தில் 1924 — ஆம் ஆண்டு ஜூன் 16 — ஆம் தேதி டி. ஆர். மகாலிங்கம் பிறந்தார். இவரது தந்தை பெயர் தென்கரை ராமகிருஷ்ணன். இதுதான் டி. ஆர். மகாலிங்கம் என அழைக்கப்பட காரணம்.

மகாலிங்கத்துடன் பிறந்தவர் ஆறு பேர். மற்ற ஐந்து பேரும் வேதம் படித்தவர்கள். நாடக நடிகர் ராமையாவின் உதவியுடன் ஜெகநாதர் ஐயரின் வாய்ஸ் கம்பெனியின் பாலமோகன காந்த சபாவில் மகாலிங்கம் சேர்ந்தார்.

அப்பொழுது டி. ஆர். மகாலிங்கத்தின் வயது 12. அதன் பிறகு யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை நடத்திய வள்ளி திருமணத்தில் வேலனாக நடித்தார். அந்த காலகட்டத்திலேயே... டி. ஆர். மகாலிங்கம் பாடிய ‘காயாத கானகத்தை’ பாடல் நாடகம் பார்ப்பவர்களிடையே பெரிய கைத்தட்டலை வாங்கி கொடுத்தது.

1935 — ஆம் ஆண்டு மகாலிங்கம் கிருஷ்ண லீலாவில் கிருஷ்ணராக நடிக்கிறார். மகாலிங்கம் அபாரமாக பாடுகிறார் என்பது ஏ. வி. மெய்யப்ப செட்டியாருக்கு தெரிய வருகிறது. அந்தச் சமயம் ஏ.வி. மெய்யப்ப செட்டியார் ‘நந்தகுமார்’ என்ற படத்தை தயாரித்துகொண்டிருந்தார்.

‘கிருஷ்ண லீலா’ நாடகத்தை ஏவி. எம் பார்த்து டி. ஆர். மகாலிங்கத்தின் நடிப்பு பிடித்து விடவே உடனே டி .ஆர். மகாலிங்கத்தின் தந்தையைச் சந்தித்து மகனை நடிக்க வைக்க அனுமதி கேட்டு முதன் முதலாக 500 ரூபாய் முன் பணம் கொடுத்து தனது நந்தகுமார் படத்தில் நடிக்க வைக்கிறார் ஏவி.எம்.

‘நந்தகுமார்’ படத்தை தொடர்ந்து டி. ஆர். மகாலிங்கத்துக்கு ‘பக்த பிரகலாதா’, ‘பூலோக ரம்பை’, ‘தாசி பெண்’, ‘மனோன்மணி’ என பட வாய்ப்புகள் தொடர்ந்து வந்தன. ஆனால் இத்தனை படங்கள் வந்தாலும் இவருக்கு கிடைத்த கதாபாத்திரம் சிறு சிறு கதாபாத்திரங்களே.

1938 — ஆம் ஆண்டு ஏவி. எம்—யின் ‘ஸ்ரீ வள்ளி’ தயாரித்தபோது, வள்ளியாக நடிக்க குமாரி ருக்மணியை ஒப்பந்தம் செய்தார். முருகனாக யாரை நடிக்க வைக்கலாம் என யோசிக்கும்போது டி. ஆர். மகாலிங்கம் நினைவுக்கு வந்தார்.

‘சங்கீதத்தில் சாதனை புரிந்த எஸ். ஜி. கிட்டப்பாவின் குரல் போலவே இருக்கு. இந்தப் பையனையே முருகனா நடிக்க வையுங்க...’






## சி. அசோக்

என மெய்ய செட்டியாருக்கு சிலர் யோசனை சொன்னார்கள். அதன்படியே 'ஸ்ரீ வள்ளி' படத்தில் வேலன், வேடன், விருத்தன் என மூன்று வேடங்களில் டி. ஆர். மகாலிங்கம் நடித்தார். இத்திரைப்படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று 55 வாரங்கள் வெற்றிகரமாக திரையில் ஓடியது.

டி. ஆர். மகாலிங்கத்தின் இயல்பான நடிப்பு, இன்றியமையாத இசை பாடல்களும் படத்தின் வெற்றிக்கு துணை புரிந்தது.

இதையடுத்து டி. ஆர். மகாலிங்கம் நடித்த அடுத்த வெற்றி படங்கள் 'நாம் இருவர்', 'வேதாள உலகம்' இந்த இரு படங்களும் நல்ல வரவேற்பை பெற்ற திரைப்படங்களாக அமைந்தன. இந்தத் திரைப்படத்தில் டி. ஆர். மகாலிங்கம் பாரதியின் பாடலை கம்பீரமாக தனது குரலில் பாடி இருப்பார்.

டி . ஆர். மகாலிங்கம் தனது 17 வயதில் கோமதி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். 1950 — ஆம் ஆண்டு டி. ஆர். மகாலிங்கத்துக்குச் சொந்தமாக படம் எடுக்க ஆசை வந்தது. தனது ஒரே மகன் சுகுமாரின் பெயரிலேயே சுகுமார் புரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியை தொடங்கி 'மச்ச ரேகை', 'மோகனசுந்தரம்', 'சின்னத்துரை' போன்ற படங்களைத் தயாரித்தார்.

டி. ஆர். மகாலிங்கம் 40 படங்களில் நடித்து, நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடினார். 1978 — இல் உடல் நலக்குறைவால் 54 வயதில் ஏப்ரல் 21 —ஆம் தேதி டி. ஆர். மகாலிங்கம் காலமானார்.சுமார் 45 ஆண்டுகள் கலை உலகைத் தனது கம்பீரக் குரலால் கட்டுப்படுத்தி வைத்திருந்த இந்த கானப்பறவை, 54—ஆவது வயதில்





மரணத்தைத் தழுவியது. இன்றளவும் 'செந்தமிழ்த் தேன்மொழியாள்...' ஒலிக்காத மேடையில்லை. மேடைக் கச்சேரிகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இப்போதும் அந்தப்பாடல் கேட்போரைச் சொக்கவைத்துக் கொண்டுதான் இருக்கிறது. கிட்டத்தட்ட 40 ஆண்டுக்காலம் தமிழ்த் திரையுலகையும் நாடக அரங்குகளையும் தம் கணீர் குரலாலும் நடிப்பாலும் வசப்படுத்தி வைத்திருந்த டி.ஆர்.மகாலிங்கத்துக்கு இது நூற்றாண்டு.

என்று குடும்பத்தில் எல்லோரும் விரும்பினார்கள். பி.சுசிலாம்மா, ராதாரவி, ஒய்.ஜி.மகேந்திரா, நாசர், செந்தில், வெண்ணிற ஆடை நிர்மலா, வேல ராமமூர்த்தி, கு.ஞானசம்பந்தம், நல்லி குப்புசாமி செட்டி, கவியரசு கண்ணதாசன் குடும்பத்தினர் உட்பட பலரும் விரும்பி வந்து தாத்தாவுக்கு மரியாதை செய்தார்கள்.

காமராஜர், கருணாநிதி, எம்.ஜி.ஆர் என்று தமிழக முதல்வர்களின் அன்பைப் பெற்றவர் எங்கள்



நடிகர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர், பாடகர், நாடக இயக்குநர் எனப் பல முகங்கள் கொண்ட டி.ஆர்.மகாலிங்கத்துக்கு சொந்த ஊரான சோழவந்தானில் நூற்றாண்டு விழா எடுத்துள்ளார்கள் மக்கள்.

தமிழக அரசும், சினிமாத்துறையினரும் சேர்ந்து செய்திருக்க வேண்டிய வேலை. அவர்கள் செய்யாத பணியை டி.ஆர்.மகாலிங்கத்தின் பேரன், டி.ஆர்.எம். எஸ். ராஜேஷ் மகாலிங்கம் ஊரைத் திரட்டிச் செய்திருக்கிறார். நூற்றாண்டு விழா முடித்து ஆசுவாசமாக இருந்த டி.ஆர்.மகாலிங்கத்தின் பேரன் டி.ஆர்.எம்.எஸ்.ராஜேஷ் மகாலிங்கத்திடம் விழா குறித்தும் தாத்தா குறித்தும் பேசினோம்.

"எங்கள் தாத்தா 'இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை', 'இன்னிசையாய் செந்தமிழாய் இருப்பவனே', 'ஆடை கட்டி வந்த நிலவோ' போன்ற காலத்தால் அழியாத பாடல்களைக் கொடுத்தவர். சென்னையிலேயே அவரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியிருக்கலாம். ஆனால், அவர் பிறந்து, கடைசிக்காலம் வரை வாழ்ந்த இந்த வீட்டில் கொண்டாட வேண்டும்

தாத்தா. குறிப்பாக கலைஞருடன் மிக நெருக்கமாக இருந்தவர். அதனால், முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்து அழைப்பிதழ் தந்தேன். நிச்சயம் இந்த நூற்றாண்டுக் காலத்தில் தாத்தாவின் நினைவைப் போற்றும் வகையில் முதல்வர் ஏதேனும் சிறப்பு செய்வார்" என்கிற ராஜேஷ், தாத்தாவுக்கும் தென்கரை கிராமத்துக்கும் இருந்த பிணைப்பு பற்றியும் பகிர்ந்துகொண்டார்.

வள்ளி திருமணம் நாடகம் மூலம் மீண்டும் புகழின் உச்சத்துக்குப் போனார். புதுக்கோட்டை நாடக நடிகர் சங்கத் தலைவராக இரண்டுமுறை இருந்தார். மதுரை நாடக நடிகர் சங்கத்துக்குக் கட்டடம் கட்டும் பணியையும் முன்னெடுத்துச் செய்தார். இந்தச் சூழலில்தான் கண்ணதாசன் 1959—ல் 'மாலையிட்ட மங்கை' படம் மூலம் தாத்தாவுக்கு ரீ என்ட்ரி கொடுத்தார். 'பீல்டிலேயே இல்லாதவரை ஏன் நடிக்க வைத்து ரிஸ்க் எடுக்குறீங்க' என்று கண்ணதாசனிடம் சிலர் கேட்டிருக்கிறார்கள். 'எனக்கு மகாலிங்கத்தின் தொண்டை மீது நம்பிக்கை உள்ளது' என்றாராம் கண்ணதாசன். அந்த அளவுக்கு உச்சஸ்தாயி



குரலால் புகழ்பெற்றவர் தாத்தா. ‘மாலையிட்ட மங்கை’ பெரிய ஹிட். அந்தப்படத்தின் பாடல்கள் அனைத்தும் இன்றுவரை பேசப்படுகிறது. ஹை பிட்ச்சில் பாடுபவர் என்றே அறியப்பட்ட தாத்தாவை ‘நானன்றி யார் வருவார்’ என்ற பாடலை குறைந்த சுதியில் எம்.எஸ்.வி பாட வைத்தார்.

‘மாலையிட்ட மங்கை’க்குப் பிறகு மீண்டும் தாத்தாவுக்கு வாய்ப்புகள் குவிந்தன. ‘திருவிளையாடல்’, ‘அகத்தியர்’, ‘திரு நீலகண்டர்’, ‘ராஜராஜசோழன்’, ‘திருமலை தெய்வம்’ என வரிசையாகப் படங்கள் வெற்றி பெற்றன. எம்.எஸ்.வி, ஜி.ராமநாதன், எஸ்.வி.வெங்கட்ராமன் போன்ற இசை மேதைகளுக்குப் பிடித்தமானவராக இருந்த தாத்தா, பிற நடிகர்களுக்குப் பின்னணி பாட மாட்டேன் என்பதில் கடைசிவரை உறுதியாக இருந்தார். ‘ஏன் இதில் இவ்வளவு பிடிவாதம், இதனால் பல வாய்ப்புகள் போகுமே’ என்று பாட்டி கேட்டதற்கு, ‘என் ரசிகன் என் குரல் எனக்கானதாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறான், அவனை ஏமாற்றக்கூடாது’ என்று சொன்னாராம்.

சினிமாவில் பிஸியாகஇருந்தாலும் குடும்பத்தினரை கவனிக்காமல் தாத்தா இருந்ததில்லை. புதிது புதிதாக கார்கள் வாங்குவதிலும், நாய்கள் வளர்ப்பிலும் தாத்தாவுக்கு ஆர்வம் அதிகம். வரிசையாக வெளிநாட்டுக் கார்கள் வீட்டு வாசலில் நிற்கும்” என்கிறார் ராஜேஷ் மகாலிங்கம்.

டி.ஆர்.மகாலிங்கத்துக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். மகன் சுகுமாரனின் மகன்தான் ராஜேஷ். ராஜேஷ் இசைக் கச்சேரிகள், நாடகங்கள் நடத்துகிறார். தாத்தாவைப் போலவே கணீர் குரல் அவருக்கு. ஆரம்பக் காலங்களில் தாத்தாவுக்குப் பெயர் வாங்கிக்கொடுத்த வள்ளிதிருமண நாடகத்தில் அவர் ஏற்ற முருகன் வேடத்தையே ராஜேஷூம் ஏற்று நடிக்கிறார். தென்கரையில் டிஆர்.மகாலிங்கம் கட்டிய டி.ஆர்.எம்.சுகுமார் பவனத்திலேயே அவரது நூற்றாண்டு விழாவை நடத்தியிருக்கிறார் ராஜேஷ்.

“இந்த வீட்டை தாத்தா 1961—ல் கட்டினார். அப்போதிருந்த எல்லாப் பிரபலங்களும் இந்த வீட்டுக்கு வந்திருக்காங்க. 1969—ல் முதலமைச்சர் ஆனவுடன் கலைஞர் முதலில் வந்தது இந்த வீட்டுக்குத்தான். இந்த வீட்டிலேயே நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது மனதுக்கு நிறைவா இருக்கு...” என்கிறார் அவர்.

‘எங்கள் திராவிடப் பொன்னாடே...’ பாடல் மூலம் திராவிட இயக்கங்களுக்கு எழுச்சியை ஏற்படுத்திய டி.ஆர்.மகாலிங்கத்தின் குரல், ‘இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை’ என பக்தியும் பாடியது. ‘சொட்டு சொட்டுனு சொட்டுது பாரு இங்கே..’ என்று எளிய மக்களின் இதயத்தையும் தாலாட்டியது.

மதுரையில் சிலை வைத்து டி.எம். சௌந்தர்ராஜனைப் பெருமைப்படுத்தியது போல, தமிழக முதல்வர் ஸ்டாலின் டி.ஆர். மகாலிங்கத்துக்கும் சிறப்புச் செய்து நூற்றாண்டைக் கொண்டாட வேண்டும் என்பது ராஜேஷின் விருப்பம் மட்டுமல்ல, மதுரை மக்களின் விருப்பமும்கூட!

# சிவகாமியின்



## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## வாதாபி மார்க்கம் 38

புலிகேசியின் படை வாதாபியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வாதாபியிலிருந்து கிளம்பிய போது அந்தப் படை எவ்வளவு பெரியதாயிருந்ததோ, அதில் பாதிதான் இப்போது இருந்தது. ஆயினும், இன்னமும் அது பெரும்படைதான். ஏறக்குறைய மூன்று இலட்சம் யுத்த வீரர்கள் அந்தப் படையில் இருந்தார்கள். ஏழாயிரம் போர் யானைகளும் இருந்தன.

போகுமிடத்தையெல்லாம் சுடுகாடாகவும் பாலைவனமாகவும் செய்து கொண்டு அப்படை சென்றது. கிராமங்களும் பட்டணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. வீடு வாசல்களையும் உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்ள முயன்ற மக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள், அல்லது அங்கஹீனம் செய்யப்பட்டார்கள். வீடுகளும் குடிசைகளும் வைக்கோற் போர்களும் கொளுத்தி விடப்பட்டன. ஏரிக் கரைகள் வெட்டி விடப்பட்டன.




ஒரு பக்கம் பசியினாலும் இன்னொரு பக்கம் பழி வாங்கும் வெறியினாலும் சளுக்கிய வீரர்கள் இம்மாதிரி பயங்கர அட்டூழியங்களைச் செய்தார்கள். தாங்கள் செய்வது போதாதென்று யானைகளையும் அவர்கள் அந்த நாச வேலையில் ஏவி விட்டார்கள்.

பசியும் வெறியும் கொண்ட போர் யானைகள் தாம் போகும் வழியிலிருந்த பசுஞ்சோலைகளை அழித்தன. பயிர் செய்த வயல்களைத் துவைத்தன. வீட்டுக் கூரையைப் பிடுங்கி வீசின. வைக்கோற் போர்களை இடறி எறிந்தன.

இதனாலெல்லாம் சளுக்கர் படை திரும்பிப் போன பாதை வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளும்படி இருந்தது. அந்தப் பாதையானது ஒரு பெரிய பயங்கரமான சூறைக் காற்றுப் போன வழியைப் போலக் காணப்பட்டது. அந்தப் பாதையில் பின்னர் வெகு காலம் அழுகுரலும் புலம்பல் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன. பருந்துகளும் கழுகுகளும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. நரிகள் பட்டப் பகலிலேயே ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

வாதாபி நோக்கிச் சென்ற சளுக்கர் படையுடன் கூடச் சிவகாமியும் போய்க் கொண்டிருந்தாள். அவளைப் பல்லக்கிலே வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்கள். ஆனால் பல்லக்குச் சுமப்பவர்கள் தன்னைத் தூக்கிக் கொண்டு போவதாகவே சிவகாமிக்குத் தோன்றவில்லை. தடுக்க முடியாத ஏதோ ஒரு விதியானது தன்னை எங்கேயோ அழைத்துப் போய்க் கொண்டிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

சளுக்கர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட உடனே அவள் மனத்தில் தோன்றியிருந்த பீதியும், தன்னுடைய கதி என்ன ஆகப் போகிறதோ என்ற கவலையும் இப்போது மறைந்து விட்டன.

அத்தகைய நிலைமையில் ஓர் அபலைப் பெண்ணிடம் சற்றும் எதிர் பார்க்க முடியாத மனோ தைரியம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.




மனோதைரியம் மட்டும் அல்ல; தன்னுடைய சக்தியைக் குறித்த ஒரு பெருமித உணர்ச்சியும் உண்டாகியிருந்தது!

சிறைப் பிடிக்கப்பட்ட பெண்களை விடுதலை செய்யும்படி புலிகேசியிடம் விண்ணப்பம் செய்து வெற்றி பெற்றதிலிருந்து அந்தப் பெருமித உணர்ச்சி சிவகாமிக்கு உண்டாயிற்று. இதோ ஒரு சக்கரவர்த்தி பல்லவ சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் எவ்வளவோ பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி அபலையாகிய தன்னுடைய வேண்டுகோளுக்கு உடனே இணங்கினார்! இது மட்டுமல்ல; இன்னும் தான் என்ன சொன்னாலும் அந்தப்படி அவர் செய்ய ஆயத்தமாயிருந்தார் என்பதை அவருடைய முகபாவத்திலிருந்து சிவகாமி தெரிந்து கொண்டாள்.



அதே சமயத்தில் சிவகாமி இன்னோர் இரகசியத்தையும் கண்டு கொண்டிருந்தாள். (அல்லது கண்டு கொண்டிருந்ததாக எண்ணினாள்.) அன்று காஞ்சியில் கூடியிருந்த சபையிலே புலிகேசியின் முகத்தைப் பார்த்த போது ஏதோ ஒரு விளங்காத மர்மம் அதில் இருப்பதாக அவளுக்குத் தோன்றியதல்லவா? அது என்ன என்பது இப்போது அவளுக்குத் தெரிந்து விட்டது. புத்த பிக்ஷு நாகநந்தியின் முகத்துக்கும் புலிகேசியின் முகத்துக்கும் இருந்த ஒற்றுமைதான் அது. ஆஹா! தெரிந்தது மர்மம்! புலிகேசி சக்கரவர்த்தியும் புத்த பிக்ஷுவும் ஒருவரே தான்! மகேந்திர பல்லவர் மாறுவேடம் பூண்டு தேச யாத்திரை செய்வதுண்டு என்பதைச் சிவகாமி அறிந்திருந்தாளாகையால் புலிகேசியும் அப்படி மாறுவேடம் பூணுவது இயற்கையென்று அவளுக்குத் தோன்றியது. புத்த பிக்ஷு தன்னுடைய நாட்டியக் கலையில் காட்டிய ஆர்வமெல்லாம் அவளுக்கு நினைவு வந்தது. ஒருவேளை தனக்காகவே புலிகேசி காஞ்சி மீது



நினைத்தாளா? நல்ல கேள்வி! அவளுடைய எல்லாவித மானஸீக அனுபவங்களுக்கும் அடிப்படையில் மாமல்லரின் நினைவு இருந்து கொண்டுதானிருந்தது. ஆனால் அந்த நினைவு அவ்வப்போது விசித்திர ரூபங்களைக் கொண்டது. அன்பு ஆத்திரமாயிற்று. ஆத்திரம் துயரம் ஆயிற்று. துயரம் துவேஷத்தையும், பழி வாங்கும் எண்ணத்தையும் உண்டாக்கிற்று.

பல்லவ சாம்ராஜ்யத்தை ஆளப் பிறந்த மாமல்லரால், பல்லவ நாட்டுப் பெண்களைச் சிறைப் பிடிக்கப்படாமல் காப்பாற்ற முடியவில்லை. இந்த ஏழைச் சிற்பியின் மகளால் அவர்களை விடுதலை செய்ய முடிந்தது! இந்தச் செய்தியைச் சத்ருக்னன் அவரிடம் சொல்லும் போது அவர் என்ன நினைப்பார்? மகிழ்ச்சியடைவாரா? கோபங் கொள்வாரா? அவர் என்ன நினைத்தால் இங்கு யாருக்கு என்ன? கேவலம் சிற்பியின் மகள் என்று தானே என்னை அவர் அலட்சியம் செய்து விட்டிருந்தார்? அவருடைய தந்தை என்னை அவமானப்படுத்தியதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாரல்லவா? உண்மையிலேயே என்னிடம் அன்பு இருந்தால், என்னைக் காட்டிலும் இராஜ்யத்தைப் பெரியதாய் எண்ணியிருப்பாரா? மகேந்திர பல்லவரிடம் தம் எண்ணத்தைத் தைரியமாகச் சொல்லி என்னை மணந்து கொண்டிருக்க மாட்டாரா? அப்படிச் செய்திருந்தால் இந்த விபரீதமெல்லாம் நேர்ந்திருக்குமா?

நல்லது; அவருக்கு ஒரு பாடம் கற்பிக்கிறேன். இதோ ஒரு மகா சக்கரவர்த்தி — பல்லவ இராஜ்யத்தைக் காட்டிலும் மூன்று மடங்கு பெரிய ராஜ்யம் உடையவர் — நான், காலால் இட்ட

படையெடுத்து வந்திருக்கலாம் என்றும் அவள் எண்ணமிட்டாள்.

தன்னிடம் இவ்வளவு சக்தி இருக்கிறது என்பது சிவகாமிக்கே வியப்பையும் பிரமிப்பையும் அளித்தது. கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர் போன வாதாபிப் புலிகேசி தன்னுடைய விருப்பத்தின்படி நடக்கச் சித்தமாயிருக்கிறார்! இந்த நினைவு அடிக்கடி தோன்றிச் சிவகாமியின் பெருமிதத்தை வளர்த்து வந்தது. அன்றியும், தன்னுடைய பாதுகாப்பைப் பற்றி அவளுக்குக் கவலை ஏற்படாமலும் செய்தது. தன்னுடைய விருப்பத்திற்கு விரோதமாக ஒன்றும் நடவாதென்றும், தனக்குத் தீங்கு எதுவும் நேராதென்றும் அவள் தைரியம் கொண்டாள்.

இந்த நாட்களில் சிவகாமி மாமல்லரைப் பற்றி

பணியைத் தலையால் செய்வதற்குக் காத்திருக்கிறார்! மாமல்லர் வந்து இதைப் பார்க்கட்டும்! இப்படிப்பட்ட மகோன்னத பதவியை நான் எவ்வளவு துச்சமாகக் கருதி அவருடன் வருவதற்குச் சித்தமாயிருக்கிறேன் என்பதையும் நேரிலே தெரிந்து கொள்ளட்டும்! ஒருவேளை அவர் வராமலே இருந்து விட்டால்! இந்த எண்ணம் தோன்றியதும் சிவகாமியின் உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் ஒருகணத்தில் சுண்டிப் போய் அவளுடைய தேகம் ஒரு தோல் கூடாக மாறி விட்டது போன்ற பயங்கர உணர்ச்சி ஏற்பட்டது. அடுத்தகணம் அவள் மீண்டும் தைரியம் பெற்றாள். வராமலிருந்து விடுவாரா? ஒருநாளும் அப்படிச் செய்ய மாட்டார். அவ்வளவு கேவலமான மனுஷர் அல்ல; அவருடைய அன்பும் அவ்வளவு மட்டமானதல்ல. வேலின் மேல் ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக வேனும் அவர் அவசியம் வருவார்.



'ஒருவேளை அவர் வரவில்லையானால்...' என்பதாகச் சிவகாமி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சிந்தனை செய்தாள். 'வரவில்லையென்றால், அதற்கு என்ன அர்த்தம்? என்னிடம் அவருக்கு உண்மையில் அன்பு இல்லை. என்னிடம் காதல் கொண்டதாக அவர் சொன்னதெல்லாம் வெறும் நடிப்பு என்று தான் அர்த்தம். நல்லதாய்ப் போயிற்று! அன்பில்லாதவரைப் பிரிந்து வந்ததற்காக நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? என் தந்தை எனக்களித்த அற்புதமான நாட்டியக் கலை இருக்கிறது. விஸ்தாரமான வாதாபி இராஜ்யம் இருக்கிறது. அதற்கு அப்பால் ஹர்ஷவர்த்தனருடைய சாம்ராஜ்யமும் இருக்கிறது. அன்பில்லாத ஒரு மனிதரிடம் பிரேமை வைத்து ஏன் உருகி அழிய வேண்டும்?'

இப்படிச் சிவகாமி எண்ணியபோதே, உண்மையில் அவளுடைய உள்ளம் அந்த அன்பில்லாத மனிதரைக் குறித்து உருகிக் கரைந்து கொண்டிருந்தது. சீச்சி! இது என்ன வீண் பிரமை? அவர் மட்டும் வந்து என்னை அழைத்துப் போகாவிட்டால், அப்புறம் இந்த உலக வாழ்க்கையில் என்ன இருக்கிறது? எதற்காக வாழ வேண்டும்? நாட்டியமாவது, கலையாவது, மண்ணாங்கட்டியாவது? வீணாக என்னை நானே ஏமாற்றிக் கொள்வதில் என்ன பிரயோஜனம்? சளுக்கரிடம் சிறைப்பட்டு நான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது அவருக்காகத்தான். வழியில் பயங்கர அட்டூழியங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு நான் வாதாபிக்குப் போவதும் அவருக்காகத்தான். அவர் வந்து இந்தப் பாதகச் சளுக்கர்களைப் பழிவாங்கி என்னை மீட்டுக் கொண்டு போவார் என்ற நம்பிக்கையினால்தான். அவருடைய அன்புக்காகவே நான் உயிர் வாழ்கிறேன். அவருடைய கௌரவத்தைப் பாதுகாக்கவே நான் வாதாபிக்குப் போகிறேன். அவர் என்னை மறந்து விட்டால்? நல்லது அப்புறம் இந்த உயிரை மாய்த்துக் கொள்ள எத்தனை நேரம் ஆகி விடும்?

சிவகாமி நாட்டியமாடும்போது சில பாடல்களுக்கு அபிநயம் பிடிப்பதற்கு மின்னல் மின்னும் நேரத்தில் உணர்ச்சிகளையும் முகபாவங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டியதாயிருக்கும். பார்ப்பவர்கள் அம்மாறுதல்களைத் தொடர்ந்து கவனிப்பது கூட அசாத்தியமாகி விடும். இப்போது சிவகாமியின் உள்ளமானது உண்மையாகவே அத்தகைய மின்னல் வேக உணர்ச்சி மாறுதல்களை அனுபவித்து வந்தது.

பல்லவ நாட்டுப் பெண்களை விடுதலை செய்த பிறகு, வடபெண்ணை நதிக்கரை போய்ச் சேரும் வரையில் புலிகேசிச் சக்கரவர்த்தி அவள் இருந்த பக்கம் வரவேயில்லை. புலிகேசியின் புத்த

பிக்ஷு வேஷத்தைப் பற்றிய இரகசியம் தெரிந்து விடப் போகிறதே என்னும் தயக்கத்தினாலே தான் அவர் தன்னிடம் வரவில்லையென்று சிவகாமி கருதினாள். அது தனக்குத் தெரிந்திருப்பதாக இந்தப் பிரயாணத்தின் போது காட்டிக் கொள்ளக் கூடாது என்றும் அவள் தீர்மானித்துக் கொண்டாள். வடபெண்ணை நதிக்கு அக்கரையில், முன்னதாக வந்த வாதாபி சைனியத்தின் பெரும் பகுதி தங்கியிருந்தது. அந்தச் சைனியத்தோடு பின்னால் புலிகேசியோடு வந்த சிறு சைனியம் ஒன்று சேர்ந்த அன்று இரவு, சிவகாமி ஓர் அதிசயமான கனவு கண்டாள். ஆனால் அது கனவா நனவா என்பது அவளுக்கு வெகுநாள் வரையில் சந்தேகமாயிருந்து வந்தது. கனவாயிருந்தாலும் நனவாயிருந்தாலும், அதில் கண்டதும் கேட்டதும் அவளுடைய உள்ளத்தில் புதிய பல சந்தேகங்களையும் கவலைகளையும் கிளப்பி விடுவதற்கு ஏதுவாயிருந்தன.

வாதாபி சைனியம் தண்டு இறங்கியிருந்த இடத்துக்கு சற்றுத் தூரத்தில் சிவகாமியின் பல்லக்கு இறக்கப்பட்டது. பிரதேசம் இயற்கை அழகு பொருந்தியதாயும் நிசப்தமாயும் இருந்தது. பூரண சந்திரன் வானத்திலும் பூமியிலும் பால் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். இனிய இளங்காற்று வீசிக் கொண்டிருந்தது. நீண்ட பிரயாணத்தினால் பெரிதும் களைப்புற்றிருந்த சிவகாமி ஒரு மரத்தினடியில் படுத்துக் கொண்டாள். அவளுடைய கண்கள் தாமே மூடிக் கொண்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் நித்திரா தேவியின் வயப்பட்டு அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்தாள். ஏதோ பேச்சுக் குரல் கேட்டு உறக்கம் சிறிது கலைந்தது. ஆனால் கண்ணிமைகள் திறக்க மறுத்தன. எனினும், யார் பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் அதிகமாயிருந்தது. பெரிதும் முயன்று கண்ணிமைகளைச் சிறிது திறந்தாள். எதிரே நிலவு வெளிச்சத்தில் அவள் சற்றும் எதிர்பாராத அதிசயமான காட்சி ஒன்று தென்பட்டது.

புலிகேசிச் சக்கரவர்த்தியும் புத்த பிக்ஷுவும் அருகருகே நின்று கொண்டிருந்தார்கள். ஒரே உயரம்; ஒரே உருவம். முகத்தின் தோற்றம், மூக்கின் அமைப்பு, கண், புருவம் எல்லாம் ஒன்றே. உடைகளில் மட்டுந்தான் வித்தியாசம். ஒருவர் சக்கரவர்த்திக்குரிய கிரீடம் முதலியவை தரித்திருந்தார். இன்னொருவர் மொட்டைத் தலையுடனும் காவி வஸ்திரத்துடனும் விளங்கினார். இதைப் பார்த்த சிவகாமி தன் மனத்திற்குள், 'ஆ! இதென்ன! புலிகேசியும் புத்த பிக்ஷுவும் ஒருவர்தானே? இங்கே தனித்தனியாய் நிற்கிறார்களே? ஆகையால், இது உண்மையான காட்சியல்ல, நாம் கனவு காண்கிறோம். கனவிலேதான் இந்த மாதிரி பிரமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது!' என்று எண்ணமிட்டாள். மறுபடியும் கண்ணிமைகள் மூடிக் கொண்டன.

கண்கள் மூடிக் கொண்டபோதிலும் செவிகள் திறந்திருந்தன. பின்வரும் சம்பாஷணை அவளுடைய காதில் விழுந்தது.

"அண்ணா! நீ சொன்னது இந்தப் பெண்தானே?"

"இவள்தான்!"

"இவள்தான் சிவகாமியா?"

"ஆம், இவள்தான் சிவகாமி!"

"எனக்கு நீ எழுதிய ஓலையில் 'காஞ்சி சுந்தரியை நீ எடுத்துக் கொள்; சிவகாமியை எனக்குக் கொடுத்து விடு' என்று எழுதியிருந்தாயே; அது இந்தப் பெண்ணைப் பற்றித்தானே?"

"ஆமாம், தம்பி, ஆமாம்!"

"அப்படி, இவளிடம் நீ என்ன அழகைக் கண்டாயோ, அதுதான் எனக்குத் தெரியவில்லை. இவளை விட எத்தனையோ சுந்தரமான பெண்களை நம் வாதாபியிலே நான் பார்த்திருக்கிறேன்."

"இவள் நாட்டியமாடும்போது பார்க்க வேண்டும்; அப்போது வேறு விதமாகச் சொல்லுவாய்!"

"அதையும் மகேந்திர பல்லவனுடைய சபையில் பார்த்தேனே! அப்படியொன்றும் அதிசயமாக எனக்குத் தெரியவில்லை."

"உனக்குத் தெரிந்திராது; கலை கண்களோடு பார்ப்பவர்களுக்குத் தெரியும். அஜந்தா சித்திரங்களைப் பார்த்து, 'இது என்ன அதிசயம்?' என்று சொன்னவனல்லவா நீ?"

"போகட்டும்; நமது வம்சத்துக்கு நீ ஒருவன், கலைக் கண் உடையவன் இருக்கிறாயே, அதுவே போதும். இந்தத் தென்னாட்டுப் படையெடுப்பில் நமக்கு எல்லாம் அபஜயமாய் முடிந்தது. ஏதோ உன்னுடைய மன விருப்பமாவது நிறைவேறியதே, அந்த வரையில் எனக்கும் திருப்திதான்."

"தம்பி! இவளை நீ சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் திரும்பி வரும் வரையில் இவளுக்கு ஒரு குறைவும் வைக்கக் கூடாது."

"இதென்ன இப்படிக் கவலைப்படுகிறாய், அண்ணா?"

"நான் இவளுக்காகக் கவலைப்படவில்லை. இவளிடமிருக்கும் கலைக்காகத் தான் கவலைப்படுகிறேன். அந்தத் தெய்வக் கலைக்கு யாதொரு குறைவும் வரக்கூடாதே என்று கவலைப்படுகிறேன்."



“இல்லை அண்ணா, இல்லை! ஏதோ விளையாட்டுக்காகச் சொன்னதை உண்மையாக எடுத்துக் கொள்ளாதே! உன் விருப்பத்துக்கு மாறாக நான் எந்தக் காரியத்திலாவது நடந்து கொண்டிருக்கிறேனா? இவளுடைய மனங்கோணாமல் எல்லா ஏற்பாடுகளும் செய்து வைக்கிறேன். நீ கவலையின்றிப் போய் விட்டு வா!”

இத்துடன் சம்பாஷணை முடிந்ததாகத் தோன்றியது. சிவகாமி மறுபடி நினைவற்ற உலகத்தில் ஆழ்ந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்து சிவகாமி கண் விழித்து எழுந்த போது மேலே கூறிய கனவுக் காட்சியும் சம்பாஷணையும் சிறிது சிறிதாக ஞாபகம் வந்தன. அவையெல்லாம் கனவுதானா, ஒருவேளை உண்மையான நிகழ்ச்சிகளா என்ற சந்தேகமும் அவள் மனத்தில் எழுந்து குழம்பியது. வெகு நேரம் சிந்தித்துக் கனவாகத்தானிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தாள். அப்படி ஒரேவித உருவமுள்ள இரண்டு பேர் இருக்க முடியாது. இருந்தாலும் ஒருவர் பிக்ஷுவாகவும் ஒருவர் சக்கரவர்த்தியாகவும் இருக்க முடியாது. அவர்கள் தன்னெதிரே வந்து நின்று அவ்விதமெல்லாம் பேசுவது ஒருநாளும் நடந்திருக்க முடியாத காரியம். தன்னுடைய பிரமை கொண்ட மனத்தில் கற்பனையிலேதான் இவையெல்லாம் நிகழ்ந்திருக்க வேண்டும். மூர்க்கப் புலிகேசியிடம் ஒரு பக்கத்தில் கலைப்பற்றும் இருக்கும் அதிசயத்தைக் குறித்துத் தான் அடிக்கடி எண்ணமிட்டதுண்டல்லவா? அது காரணமாகவே ஒரே மாதிரி இரண்டு உருவங்கள் தன்னுடைய கனவிலே தோன்றி அத்தகைய சம்பாஷணையை நடத்தியிருக்க வேண்டும்.

“நல்ல கலை! நல்ல கவலை! என்னைக் கேட்டால், என்ன சொல்வேன் தெரியுமா? மகேந்திர பல்லவனிடம் சொன்னதைத்தான் உனக்கும் சொல்வேன்!”

“மகேந்திர பல்லவனிடம் என்ன சொன்னாய், தம்பி!”

“இந்த அற்பர்களுக்கு இவ்வளவு மரியாதை என்ன! எங்கள் நாட்டிலேயென்றால் சாட்டையால் அடித்து நடனம் ஆடச் சொல்வோம் என்று கூறினேன்.”

“பார்த்தாயா? உன்னை நம்பி இவளை எப்படி ஒப்புவித்து விட்டுப் போவது? நான் வேங்கிபுரத்துக்குப் போகவில்லை.”

புலிகேசியும் புத்த பிக்ஷுவும் உண்மையில் ஒருவர்தான் — இவ்விதம் சிவகாமி தீர்மானம் செய்து கொண்டபோதிலும் மேற்படி கனவு கண்டதன் காரணமாக அவளுடைய உள்ளம் பெரிதும் கலக்கமும் கவலையும் அடைந்திருந்தது.

(சபதம் தொடரும்)



## யோகமும் வாழ்க்கை நிர்வாகமும்

யோகம் என்னும் சொல்லிற்கு ஒருங்கிணைதல், ஒருமுகப்படுத்துதல், நிலைக்கச் செய்தல் எனப் பல பொருள்கள் விளக்கங்கள் உள்ளன.

யோகம் என்னும் விஞ்ஞானமானது இவ்வுலகிற்கு ஒப்பற்ற கொடை. யோகம் என்னும் சொல்லிற்கு ஒருங்கிணைதல், ஒருமுகப்படுத்துதல், நிலைக்கச் செய்தல் எனப் பல பொருள்கள் விளக்கங்கள் உள்ளன. பொதுவாகத் தனித்தனியாக இயங்கிக் கொண்டுள்ள உடல், மனம், மூச்சு, அறிவு என்னும் இவற்றை முறையாக இணைப்பதே யோகம் ஆகும். மனிதன் தன் அன்றாட வாழ்விலே, தன் உடல்நிலைக்கு ஏற்ப சிறிது நேரத்திற்குச் சரியான யோகப் பயிற்சியை மேற்கொண்டால், உடலை மனத்தை மூளையைத் திறம்பட நிர்வகிக்க இயலும்.

பிணிகளற்ற, மனஅழுத்தமற்ற எதிர்மறை எண்ணங்களற்ற அறுபகையற்ற உயர்ந்த வாழ்க்கையை வாழ இயலும். சில ஆண்டுகளாகவே நிர்வாகம் சார்ந்த கல்வியானது உலகெங்கிலும் பரவலாகச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. பலவகையான நிர்வாகம் சார்ந்த பணிகளில் வேலை வாய்ப்பும் மிகுதியாகிக் கொண்டு வருகிறது. உடலைப் பேணுவதும் நிர்வகிப்பதும் மிகவும் இன்றியமையாதது ஆகும். உடல் நலம் இருந்தால்தான் நம்மால் திறம்படச் செயலாற்ற முடியும்.

யோகத்திலே ஆசனப் பயிற்சியைச் செய்வதன் மூலம் நம் உடலைப் பேணி, நல்ல ஆற்றலுடன் நிர்வகிக்கவியலும். ஆசனம் என்பது உடலை ஒரு நிலையில் இருத்துவது என்றஉ பொருள். ஆசனங்களில் நின்படி செய்வது, அமர்ந்த நிலையில் செய்வது, படுத்த நிலையில் செய்வது எனப் பலவகைகள் உள்ளன. ஆசனங்களைச் செய்யும்போது உடல் தசைகளும் எலும்புகளும் நரம்புகளும் வலிமை அடைகின்றன. இறுக்கம் தளர்ந்து நெகிழ்வடைகின்றன. உடல் சோர்வு ஏற்படாதவாறு நம்மால் தொடர்ந்து பல மணி நேரத்திற்குச் செயலாற்றவியலும்.

ஆசனப் பயிற்சி என்பது உடல் நிர்வாகம் ஆகும். முதுமையில் வரும் பல உடல், மனம் சார்ந்த நோய்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளவியலும்.

அடுத்து மூச்சுப் பயிற்சியைச் செய்கிறோம். இதனைப் பிராணாயாமம் என்று கூறுவர். மூச்சுப் பயிற்சியைச் செய்வதால், உடலிலே பிராண வாயு ஓட்டம், அதாவது மூச்சு ஓட்டமானது சீராக நடைபெறும். பிராணாயாமப் பயிற்சி உடலில் தேங்கியிருக்கும் கழிவுப்பொருட்கள், நச்சுப் பொருட்களை அகற்றி, உடலின் வெப்ப





## கல்யாணி வெங்கடராமன்

நிலையையும் சீர் செய்கிறது. ஒவ்வொரு நோய்க்குத் தக்க மூச்சுப் பயிற்சிகளை மேற்கொண்டு நோயிலிருந்து விடுபடலாம். இதற்குத் தக்க ஆசிரியரிடம் பயின்று முறையாகப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். மூச்சுப் பயிற்சியைச் செய்யச் செய்ய மனம் அமைதியடைகிறது.

யோகத்திலே முத்திரைப் பயிற்சிகள் உள்ளன. முத்திரை என்பது பழைமையான விஞ் ஞானம். வேதங்களில் முத்திரைகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கை முத்திரைகள் என குறிப்பிடுகின்றனர். பொதுவாக முத்திரைகளை நாம் பூஜை செய்யும்பொழுதும், நடனம் ஆடும் பொழுதும், ஹோமங்களைச் செய்யும்பொழுதும் பயன்படுத்துகிறோம். கைவிரல்களை ஒரு குறிப்பிட்ட நிலையில் வைக்கும்பொழுது அந்நிலையில் உடலின் ஆற்றல் குறிப்பிட்ட பாதையில் பாய்கிறது. சான்றாக, ஞானமுத்திரை, தியான முத்திரைகளைச் செய்யும் பொழுது மூளையானது அமைதி அடைகிறது. பீனியல் சுரப்பியானது தூண்டப்படுகிறது. நினைவாற்றலையும் பெருக்குகிறது. வேறு சில முத்திரைகள் மூளையைச் சுறுசுறுப்பாக இயங்க வைக்கின்றன.

எண்ணற்ற முத்திரைகள் உள்ளன. மனச் சோர்வு, மன அழுத்தம், மன இறுக்கம் இவற்றிலிருந்து விடுபட முத்திரைகள் உதவுகின்றன. சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல், இதயம் சார்ந்த பலவகையான நோய்கள் முத்திரைப் பயிற்சியால் காணாமல் போகின்றன. பொதுவாக முத்திரைப் பயிற்சியானது மனஅழுத்த நிர்வாகமாகத் திகழ்கிறது.






தியானம் என்பதற்கு மனத்தை ஒருமுகப்படுத்துதல், சமயம் சார்ந்த பிரார்த்தனைகள் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. யோக ஞானத்தின் தந்தை என போற்றப்படும் பதஞ்சலி முனிவர்,"மனமானது தன் சிதறுண்ட எண்ணங்களிலிருந்து, உணர்வுகளிலிருந்து, கிளர்ச்சிகளிலிருந்து முற்றிலும் விடுபடுவதே தியானம் என விளக்குகிறார்.

நம் நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே ஓம்கார தியானம் நடைமுறையில் உள்ளது. ஓம்காரமானது ஒலி அமைப்பு முழுவதையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டுள்ளது என ஒலியியல் வல்லுநர்கள் உரைக்கின்றனர். ஓம்கார தியானத்தை முறையாக மேற்கொண்டால் மனமும் மூளையும் அமைதி எய்தி ஆற்றலைப் பெருக்கிக் கொள்கின்றன.

மனம் என்பது மிகவும் நுண்மையான அதிர்வலைகளால் ஆகியுள்ளது. மனம் மிகவும் அலைபாயும் தன்மையுடையது. மனத்திலே சங்கிலித் தொடர் போன்ற எண்ணங்கள் எழும்பியவாறு உள்ளன. மனம் ஓர் இசைக் கருவியைப் போன்றது. இசைக்கருவியின் தந்திகள் மிகவும் இறுக்கமாகவோ அல்லது தளர்வாகவோ இருப்பின் அதிலிருந்து உயர்ந்த இசையைத் தோற்றுவிக்க வியலாது. முதலில் சுருதி கூட்ட வேண்டும். பழக்கப்படுத்த வேண்டும், பயிற்சி அளிக்க வேண்டும், ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும், அதன் பிறகு தான் பண்படுத்தவியலும். பண்படுத்தப்பட்ட மனம்தான் தியானத்திற்கு ஏற்ற மனமாகும்.

தொழில்நுட்ப விஞ்ஞானத்தில் முன்னேறி, பலதுறைகளில் சிறந்து விளங்கும் மனிதனுக்குத் தன் மனத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்பது வியப்பு. நாம் அனுபவிக்கும் எல்லா அனுபவங்களும் அதாவது இன்ப துன்பங்களின் நினைவுகள் எண்ணங்கள் போன்றவை அடங்கியுள்ள மனத்தின் ஆழத்திலே புதைந்துள்ளன.

'மனித மனத்தின் ஆழத்திலே அடங்கியுள்ள அளவற்ற சக்தியை வெளியுலகின் பக்கம் பாயச் செய்வதால் விஞ்ஞான வளர்ச்சி என்பது சாத்தியமாகிறது: எண்ணங்களின் மூலம் பாயச் செய்வதால் இலக்கியம், கலை, தத்துவ சாத்திரங்கள் போன்றவை உருவாகி, அறிவு வளர்ச்சி ஏற்படுவது சாத்தியமாகிறது; மனித மன ஆற்றலை மூலப் பிரவாகத்திலேயே முறையாகச் சாதனையின் மூலம் பாயச் செய்வதால் மனிதன் கடவுளாகிறான்' என மனத்தின் பேராற்றலை அற்புதமாக விளக்கியுள்ளார் சுவாமி விவேகானந்தர்.

'நான்' என்பதன் பல முகங்களைச் சரியாக உணர்ந்து கொண்டால், 'நான்' என்பதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கலாம். 'நான்' என்பதை மனத்தின் ஆழத்திற்குச் சென்று உணர்ந்தால், நாம் அனைவரும் ஒன்றுதான் என்னும் உண்மையை உணரலாம். தியானத்தினால் இந்த நிலையை எய்த இயலும்.

'மன ஏவ மனுஷ்யானாம் காரணம் பந்த மோக்ஷயோ'"என அம்ருதபிந்து உபநிஷதம் விளக்குகிறது. மனிதனுடைய பிணைப்பிற்கும் முக்திக்கும் மனம்தான் காரணமாக விளங்குகிறது. வீட்டைத் தூய்மை செய்யும் பொழுது தேவையற்ற

> Yoga is not to be performed; it is to be lived. Yoga doesn't care about what you have been; it cares about the person you are becoming.
>
> AADIL PALKHIVALA

பொருட்களை, குப்பைகளை வெளியேற்றுகிறோம். அதைப் போன்றே நன்கு ஆராய்ந்து, தேவையற்ற எண்ணங்கள் என்னும் குப்பைகளை அப்புறப்படுத்தி விட வேண்டும். தியானத்தின் மூலம் இதனை எளிதாகச் செய்துவிடலாம்.

சீரான ஒலி அதிர்வுகளைக் கேட்கும் பொழுது மனமும் மூளையும் அமைதி எய்துகிறது. இன்டர்நேஷனல் அகாடமி ஆஃப் சவுண்ட் ஹீலிங் என்ற அமைப்பு, மன நிலையளவு, உணர்வு நிலையளவு, எண்ண நிலையளவு என்னும் அனைத்து நிலைகளிலும் ஒலி அதிர்வுகள் நல்ல பயனை நல்குகிறது என ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து விவரித்துள்ளது.

சீரான ஒலி அதிர்வுகள் மன இறுக்கத்தை அகற்றுகின்றன. அதிகாலை நேரத்தின் பறவைகளின் இன்னொலி, ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளின் ஆர்ப்பொலி, மலையிலிருந்து இறங்கும் அருவியின் போரொலி, சலசலத்து ஓடும் நீரின் சுநாத ஒலி என இவ்வனைத்து ஒலிகளுமே மனதிற்கு இதமளிக்க வல்லவை ஆகும்.

இயற்கையாகக் கேட்ட இயலவில்லை எனின் இவ்வொலிகளைப் பதிவு செய்து கொண்டும் கேட்கலாம். முறைப்படி தியானம் செய்வதால் மனத்தையும் மூளையையும் நன்கு நிர்வகிக்க இயலும். எனவே தியானம் என்பது மனம் மற்றும் மூளையை நிர்வகிக்க உதவுகிறது. எனவே இது மன நிர்வாகம் அல்லது மூளை நிர்வாகமாகும்.

சினம், பகைமை, பொறாமை போன்ற உணர்வுகள் இருக்கும்பொழுது இரத்தம் தன்னுடையத் தூய்மையை இழக்கிறது எனக் கூறுகின்றனர். நல்ல எண்ணங்கள் மிகுந்திருப்பின் மனம் மிக மிகத் தூய்மையாக இருப்பின் அத்தகையோரின் உடலிலிருந்து தூய்மையான அதிர்வலைகள் வெளிப்படுகின்றன. அத்தகைய அதிர்வலைகள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. யோகக் கலை வழியாக நம்மால் இதனைச் செய்ய வியலும் எனில், இதனால் மற்ற உயிரினங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்குமெனில், இதைவிடப் பெரிய பேறு வேறு என்ன உள்ளது?

நம் மொழி வேறாக இருக்கலாம். நம் சமயம் வேறாக இருக்கலாம். நம் பண்பாடு வேறாக இருக்கலாம். ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் அன்பு காட்ட வேண்டும். இத்தகைய தன்னலமற்ற அன்பானது சுரந்து, ஊற்றாகிப் பொங்கிப் பாய்ந்து அனைவரின் மனங்களையும் நனைக்க வேண்டும். இத்தகைய அன்புதான் மனித நேயத்தை வளர்க்கிறது.

இத்தகைய மனித நேயத்துடன் மனித குலம் வாழ வேண்டும் என யோகம் உணர்த்துகிறது. இந்த சர்வதேச யோகா தினத்தில் இதனை நன்கு உணர்ந்து, இறைவன் நமக்கு அளித்துள்ள பரிசான இந்த அரிய வாழ்க்கையை யோகத்தினால் நன்கு நிர்வகித்து, பிறவிப் பயனை எய்த வேண்டும் என உறுதி பூணுவோம்.

இயற்கையுடன் இணைந்து வாழ்வதே ஆரோக்கியம் தரும். அதற்கான பாதைதான் யோகா. 'தன்னுள் எப்படி வாழ வேண்டும்' என்கிற சாரத்தைப் பயிற்றுவிக்கும் அறிவியல்தான் யோகா. இந்த மருந்தில்லா சிகிச்சை முறை உடல், மனம், ஒழுக்கம், உணர்ச்சி நிலைகள், ஆன்மிகக் கூறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. யோகா செய்வதால் தசைகள், எலும்புகள், செல்கள் என உடலின் மொத்த உறுப்புகளும் வலிமை பெறும்.

மன அழுத்தம் நீங்கும்

இன்று நம் வாழ்க்கை முறை மாற்றம் காரணமாக




இளம் தலைமுறையை மன அழுத்தம் பீடித்து வதைக்கிறது. யோகா செய்வதால், மன அழுத்தத்தைக் குறைக்கலாம்; அதனால் ஏற்படும் விளைவுகளையும் தடுக்கலாம்.

சூரிய நமஸ்காரம்

யோகாசனங்களில் பிரபலமானது சூரிய நமஸ்காரம். உடலை வளைத்துச் செய்யும் யோகாசனத்தையும் மூச்சை ஒழுங்குபடுத்தும் பிராணாயாமத்தையும் ஒருங்கிணைத்துச் செய்வதுதான் சூரிய நமஸ்காரம். ஒரே ஒருமுறை சூரிய நமஸ்காரம் செய்வதன்மூலம் 8 வகை ஆசனங்களை செய்துவிடலாம்.

சூரியன் இருக்கும் திசையை நோக்கி சூரிய நமஸ்காரம் செய்வது சிறப்பு; கண்ணைக் கூசுகிற, சுட்டெரிக்கிற நேரத்தில் செய்யக் கூடாது.

யோகா உடலுக்கும் மனதுக்கும் மிகவும் நன்மை பயக்கும். எனவே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நுரையீரலை வலுப்படுத்தும் சில யோகாசனங்களைப் பற்றி பார்க்கலாம். நுரையீரல் உடலின் மிக முக்கியமான உறுப்பு. அவை உடலின் அனைத்து பகுதிகளுக்கும் ஆக்ஸிஜனை வழங்குகின்றன. எனவே அவற்றை ஆரோக்கியமாக வைத்திருப்பது முக்கியம். ஆனால் தவறான உணவுப் பழக்கம் மற்றும் தவறான வாழ்க்கை முறை ஆகியவை நுரையீரலில் மிகவும் மோசமான விளைவை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக நுரையீரல் முன்கூட்டியே பலவீனமடையத் தொடங்குகிறது மற்றும் சுவாச நோய்கள் ஏற்படத் தொடங்குகின்றன. தினமும் சிறிது நேரம் யோகா செய்வதே நுரையீரல் ஆரோக்கியமாக இருக்க சிறந்த வழியாகும்.

புஜங்காசனம், சேதுபந்தாசனம் போன்ற யோகாசனங்கள் மார்பைத் திறந்து, நுரையீரலை விரிவுபடுத்தி, காற்றோட்டத்தை மேம்படுத்துகின்றன. இது தவிர பிராணாயாமம், கபாலபதி போன்ற யோகா ஆசனங்கள் சுவாசத்தை உள்ளிழுப்பதையும் வெளியேற்றுவதையும் வலியுறுத்துகின்றன. இது நுரையீரலின் திறனை அதிகரிக்கிறது. தொடர்ந்து இந்த யோகா ஆசனங்களைச் செய்வது சுவாச மண்டலத்தின் தசைகளை பலப்படுத்துகிறது. இதனால்




சுவாசத்திற்கு அதிக முயற்சி தேவையில்லை.

புஜங்காசனம்

யோகாசனம் செய்யும் விர்ப்பை விர்த்து குப்புறப் படுத்துக் கொள்ள வேண்டும். இரு கைகளையும் மார்புக்கு நேராக தரையில் உள்ளங்கைகளை இருக்கும் மாறு ஊன்றி வைக்கவும். மூச்சை நன்றாக உள்ளிழுத்துக்கொண்டே கைகளை நன்கு ஊன்றியவாறு சற்று மார்பு பகுதிளைத்து உயர்த்தவும்.

உங்கள் வயிறு பகுதி தரையில் இருக்க வேண்டும். உங்கள் தலை மற்றும் கழுத்தை உயர்த்தி கூர்மையாக நோக்கிப் பார்க்க வேண்டும். சில நொடிகள் இந்த நிலையில் இருந்து மெதுவாக ஓய்வெடுக்கவும்.

உஸ்த்ராசனம்

இதைச் செய்ய வஜ்ராசன முறையில் அமர வேண்டும். உங்கள் முழங்கால்களை வளைத்து இடுப்பு வலையாமல் நேராக உட்கார வேண்டும். மூச்சை உள்ளிழுத்தபடி பின்னோக்கி குனிந்து வலது கையால் வலது குதிகாலைப் பிடிக்கவும்.

அதன்பின் இடது கையால் இடது குதிகால் பிடிக்கவும். இந்த நேரத்தில் கழுத்தை பின் நோக்கி வலைக்கவும். இந்த நிலையில் சிறிது நேரம் இருங்கள். பின்னர் உங்கள் குதிகால்களில் இருந்து உங்கள் கைகளை அகற்றி ஓய்வெடுக்கவும்.

சேது பந்தசனா)

உங்கள் முழங்கால்களை வளைத்து கால்களை தரையில் வைத்து முதுகில் படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் கால்களை இடுப்பு அகலத்தில் வைக்கவும்.

மெதுவாக உங்கள் கால்களை உங்கள் இடுப்புக்கு அருகில் கொண்டு வர முயற்சிக்கவும். மூச்சை உள்ளிழுத்து உங்கள் கால்கள் மற்றும் கைகளில் அழுத்தம் கொத்து இடுப்பை மேல்நோக்கி உயர்த்தவும்.

தோள்களும் தலையும் தரையில் இருக்க வேண்டும். உங்களால் முடிந்தவரை இடுப்பை தரையில் இருந்து உயர்த்த முயற்சிக்கவும். மேலே செல்லும் போது மூச்சை உள்ளிழுக்கவும் கீழே வரும்போது மூச்சை வெளியேற்றவும். இந்த நிலையில் சிறிது நேரம் இருங்கள். பின்னர் பழைய நிலைக்கு திரும்பவும்.

உர்த்வா முக ஸ்வனாசனா

குப்புறப் படுத்து கைகளை உங்கள் உடலுக்கு அருகில் வைக்கவும். கீழே குனிந்து முழங்கைகளை உடலுக்கு அருகில் வைத்துக்கொள்ளவும்.

பிறகு மூச்சை உள்ளிழுத்து கைகளை நேராக்குங்கள். இப்போது பாயில் இருந்து உங்கள் தொடைகளை உயர்த்தி மார்பை உயர்த்தவும். உங்கள் தலையை பின்னால் நகர்த்தி மேலே பார்க்கவும்.

30 முதல் 60 வினாடிகள் வரை நீங்கள் ஆசனத்தில் இருக்க 5 முறை மூச்சை உள்ளிழுக்கவும். படிப்படியாக உடலில் வலிமை மற்றும் நெகிழ்வுத்தன்மை அதிகரிக்கும் போது நீங்கள் நேரத்தை அதிகரிக்கலாம். 90 வினாடிகளுக்கு மேல் செய்ய வேண்டாம். அது முடியாவிட்டால், உங்களால் முடிந்தவரை செய்யுங்கள்.

ஆரம்பத்தில் இதைச் செய்வதில் சிரமம் இருக்கலாம் ஆனால் கைகள் மற்றும் தோள்களின் தசைகளை வலுப்படுத்துவதன் மூலம், யோகாசனத்தை எளிதாக செய்யலாம். இந்த யோகாசனங்களை தினமும் செய்து வந்தால் நுரையீரலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




## நெஞ்சு எரிச்சல் ஏற்படுவது ஏன்?

நாகரிக உணவுப் பழக்கம் என்ற பெயரில் நம் உணவு முறை மாறிவரும் இக்காலகட்டத்தில் உணவைச் சாப்பிட்டதும் நெஞ்சில் எரிச்சல் ஏற்படும் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்திய மக்கள்தொகையில் பாதிப் பேருக்கு நெஞ்செரிச்சல் உள்ளது. இவர்களில் 100—ல் 20 பேருக்கு இது அன்றாட பிரச்சினையாகவும், மீதிப் பேருக்கு மழைக்காலத்தில் முளைக்கும் காளானைப் போல், அவ்வப்போது முளைக்கும் பிரச்சினையாகவும் உள்ளது.

வழக்கத்தில், இதை நெஞ்செரிச்சல் என்று சொன்னாலும், இது நெஞ்சு முழுவதும் ஏற்படும் பிரச்சினை அல்ல. இது உணவுக் குழாயில் ஏற்படுகிற பிரச்சினை. நடு நெஞ்சில் தொடங்கித் தொண்டைவரை எரிச்சல் பரவும். மருத்துவ மொழியில் இதற்கு 'இரைப்பை அமிலப் பின்னொழுக்கு நோய்' சுருக்கமாக என்று பெயர்.

காரணம் என்ன?

வாயில் போடப்பட்ட உணவு உமிழ்நீருடன் கலந்து, முதற்கட்டச் செரிமானம் முடிந்ததும், அதை இரைப்பைக்குக் கொண்டு சேர்ப்பது முக்கால் அடி நீளமுள்ள உணவுக்குழாய். இதன் உள்பக்கம் சளி சவ்வு (Mucus membrane) உள்ளது. இது, உணவுக் குழாய்க்கு ஒரு கவசம் போல அமைந்து பாதுகாப்பு தருகிறது.

உணவுக் குழாயின் மேல்முனையிலும் கீழ்முனையிலும் சுருக்குத் தசையால் ஆன இரண்டு கதவுகள் (Sphincters) உள்ளன, மேல்முனையில் இருக்கும் கதவு, நாம் உணவை விழுங்கும்போது, அது மூச்சுக் குழாய்க்குள் செல்வதைத் தடுக்கிறது, கீழ்முனையில் இருக்கும் கதவு, இரைப்பையில் சுரக்கும் அமிலம் உணவுக் குழாய்க்குள் நுழையவிடாமல் தடுக்கிறது. இந்தக் கதவு, உணவுக் குழாய்க்கும் இரைப்பைக்கும் இடையில் ஓர் எல்லைக்கோடுபோல் செயல்படுகிறது.

நெஞ்செரிச்சலுக்கு அடிப்படைக் காரணம், இரைப்பையில் சுரக்கும் அமிலம் இந்த எல்லைக் கோட்டை கடந்து, உணவுக் குழாய்க்குள் தேவையில்லாமல் நுழைவதுதான். இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம், உணவுக் குழாயின் தசைகள் காரம் நிறைந்த, சூடான, குளிர்ச்சியான உணவுகளைத் தாங்குமே தவிர, அமிலத்தின் வீரியத்தைத் தாங்கும் சக்தி அவற்றுக்கு இல்லை. இந்த அமில அலைகள் அடிக்கடி மேலேறி வரும்போது, அங்குள்ள திசுப் படலத்தை அரித்துப் புண்ணாக்கிவிடும். இதனால், நெஞ்செரிச்சல் ஏற்படும்.

மிகவும் இனிப்பான, காரமான, கொழுப்பு மிகுந்த உணவு வகைகளை அடிக்கடி சாப்பிட்டால் உணவுக் குழாயின் கீழ்முனைக் கதவு பழசாகிப்போன சல்லடை வலை போல 'தொளதொள'வென்று தொங்கிவிடும். விளைவு, இரைப்பையில் இருக்கும் அமிலம் மேல்நோக்கி வரும்போது, அதைத் தடுக்க முடியாமல் உணவுக் குழாய்க்குள் அனுமதித்துவிடும்.

இரைப்பையில் அளவுக்கு அதிகமாக அமிலம் சுரந்தாலும், அது உணவுக் குழாயின் கீழ்ப் பகுதிக்குச் சென்று காயத்தை ஏற்படுத்தும். 'அல்சர்' எனப்படும் இரைப்பைப் புண் உள்ளவர்களுக்கு இப்படித்தான் நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது.

வயிற்றில் அழுத்தம் அதிகரித்தால், நெஞ்செரிச்சல் ஏற்பட வாய்ப்பு அதிகம். உடல் பருமனாக உள்ளவர்கள், கர்ப்பிணிகள், இறுக்கமாக உடை அணிபவர்கள், வயிற்றில் கட்டி உள்ளவர்கள் ஆகியோருக்கு நெஞ்செரிச்சல் உண்டாக இதுவே காரணம்.

வழக்கமாக, பெண்கள் சாப்பிட்ட பின்பு வீட்டைச் சுத்தம் செய்கிறேன் என்று குனிந்து நிமிர்ந்து வேலை செய்வார்கள். இதனால் வயிற்றில் அழுத்தம் அதிகரித்து, அமிலம் மேலேறி, நெஞ்செரிச்சலை உண்டாக்கிவிடும்.

சிலருக்கு இரைப்பையிலிருந்து ஒரு பகுதி மார்புக்குள் புகுந்து (Hiatus Hernia) உணவுக் குழாயை அழுத்தும். இதன் விளைவாக, உணவுக் குழாயின் தசைகள் கட்டுப்பாட்டை இழந்துவிட, இதற்காகவே காத்திருந்ததுபோல் இரைப்பை அமிலம், உணவு, வாயு எல்லாமே உணவுக்

குழாய்க்குள் படையெடுக்க, நெஞ்செரிச்சல் தொல்லை கொடுக்கும்.

பலருக்கு உணவைச் சாப்பிட்டவுடன் நெஞ் செரிச்சல் ஏற்படும்; சிலருக்குப் பசிக்கும்போது ஏற்படும். பொதுவாக இந்தத் தொல்லை இரவு நேரத்தில்தான் அதிகமாக இருக்கும்.

தூண்டும் காரணிகள்

அதிகக் கார உணவு, துரித உணவு, கொறிக்கும் உணவு போன்றவற்றை அடிக்கடி சாப்பிடுவது; காலை உணவைத் தவிர்ப்பது, சரியான நேரத்தில் உணவைச் சாப்பிடாமல் இருப்பது, பசிக்கும் நேரத்தில் சத்துள்ள உணவு வகைகளைச் சாப்பிடாமல், நொறுக்கு தீனிகளால் வயிற்றை நிரப்புவது, இரவில் தாமதமாக உறங்குவது, கவலை, மன அழுத்தம் போன்றவை நெஞ்செரிச்சல் ஏற்படுவதைத் தூண்டுகின்றன.

மருத்துவர்
ஜெயச்சந்திரன்

என்ன முதலுதவி?

நெஞ்செரிச்சலை உடனடியாகக் குறைக்க இளநீர் சாப்பிடலாம். புளிப்பில்லாத மோர் குடிக்கலாம். நுங்கு சாப்பிடலாம். ஜெலுசில், டைஜீன் போன்ற அமிலக் குறைப்பு மருந்துகளில் ஒன்றை 15 மி.லி. அளவில் குடிக்கலாம். இவை எதுவும் கிடைக்காத நேரத்தில், குளிர்ந்த நீரைக் குடித்தால்கூட நெஞ் செரிச்சல் குறையும்.

அலட்சியம் வேண்டாம்!

அடிக்கடி நெஞ்செரிச்சல் ஏற்பட்டால், மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டியது






முக்கியம். இதற்கு இரண்டு காரணங்கள்: சிலருக்கு மாரடைப்பு ஏற்படும்போது ஆரம்ப அறிகுறியாக, நெஞ்சில் எரிச்சல் மட்டுமே ஏற்படும். எண்டோஸ்கோபி / இசிஜி பரிசோதனையைச் செய்துகொண்டால் இந்தக் குழப்பம் தீரும். அடுத்து, நீண்ட நாள் நெஞ்செரிச்சல் உள்ளவர்களுக்கு உணவுக் குழாய் கீழ்முனைச் சுவரில் குடல் சுவரைப் போன்ற மாறுபாடு உண்டாகும்.

இதற்கு 'பாரட்ஸ் உணவுக் குழாய்' (Barrett's Esophagus) என்று பெயர். இது ஏற்படும்போது 100—ல் ஒருவருக்குப் புற்றுநோயாக மாறக்கூடிய அபாயம் உள்ளது. இதற்கு எண்டோஸ்கோபி மூலம் சிகிச்சை செய்யமுடியும்.

### தடுப்பது எப்படி?

நேரத்துக்கு உணவைச் சாப்பிடுங்கள். தேவையான அளவுக்குச் சாப்பிடுங்கள். அதிகச் சூடாக எதையும் சாப்பிடாதீர்கள். காரம் மிகுந்த, மசாலா கலந்த, எண்ணெயில் பொரித்த, கொழுப்பு நிறைந்த, புளிப்பு ஏறிய உணவுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

ஒரே நேரத்தில் வயிறு நிறைய சாப்பிடுவதைவிட அடிக்கடி சிறிது சிறிதாகச் சாப்பிடலாம். தக்காளி சாஸ், ஆரஞ்சு, எலுமிச்சை, காபி, டீ, சாக்லேட், மென்பானம், நூடுல்ஸ், புரோட்டா, வாயு நிரப்பப்பட்ட பானம் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள். வேகவைத்த, ஆவியில் அவித்த உணவு மற்றும் நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகளையும் பழங்களையும் அதிகரித்துக் கொள்ளுங்கள்.

அவசரம் அவசரமாகச் சாப்பிடுவது தவறு. அப்படிச் சாப்பிடும்போது, உணவோடு சேர்ந்து காற்றும் இரைப்பைக்குள் நுழைந்துவிடும். பிறகு, ஏப்பம் வரும். சமயங்களில், ஏப்பத்துடன் 'அமிலக் கவளம்' உணவுக் குழாய்க்குள் உந்தப்படும். இதனால், நெஞ்செரிச்சல் அதிகமாகும்.

வழக்கமாக, உணவைச் சாப்பிட்டதும் இரைப்பை விரியும். அப்போது இரைப்பையின்மேல் அழுத்தம் ஏற்பட்டால், உணவுக் குழாய்க்குள் அமிலம் செல்லும். இதைத் தடுக்க, இறுக்கமாக அணியப்பட்ட ஆடைகள், பெல்ட் ஆகியவற்றைச் சிறிது தளர்த்திக்கொள்ள வேண்டும். உணவைச் சாப்பிட்டபின் குனிந்து வேலை செய்யக்கூடாது; கனமான பொருளைத் தூக்கக்கூடாது; உடற்பயிற்சி செய்யக்கூடாது. மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் வலிநிவாரணி மாத்திரைகளைச் சாப்பிடக்கூடாது.

### முக்கிய யோசனைகள்

சாப்பிட்டவுடன் படுக்காதீர்கள். குறைந்தது இரண்டு மணி நேரம் கழித்துப் படுக்கச் செல்லுங்கள். அப்போதுகூட படுக்கையின் தலைப் பகுதியை அரை அடியிலிருந்து ஒரு அடி வரை உயர்த்திக்கொள்வது நல்லது, இதற்காக நான்கு தலையணைகளை அடுக்கிவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. தலைப் பக்கக் கட்டில் கால்களுக்குக் கீழே சில மரக்கட்டைகளை வைத்தால் போதும். வலது புறமாகப் படுப்பதைவிட, இடது புறமாகத் திரும்பிப் படுப்பது நெஞ்செரிச்சலைக் குறைக்கும்.

மது அருந்துவது, புகைபிடிப்பது, புகையிலை/பான்மசாலா போடுவது இந்த மூன்றும் நெஞ்செரிச்சலுக்கு முக்கிய எதிரிகள். புகையில் உள்ள நிக்கோடின், இரைப்பையில் அமிலச் சுரப்பை அதிகரிப்பதோடு, உணவுக் குழாயின் தசைக் கதவுகளையும் தளரச் செய்வதால், நெஞ்




செரிச்சல் அதிகமாகிவிடும். இந்த எதிரிகளை உடனே ஓரங்கட்டுங்கள். உடல் எடையைப் பராமரியுங்கள். அப்புறம் பாருங்கள், நெஞ்செரிச்சல் உங்களிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுக்கொள்ளும்.

நெஞ்சு எரிச்சலால் அவதிப்படுபவர்கள் இந்த அருமருந்தைப் பயன்படுத்திப் பயனடையுங்கள். இந்த பிரச்சனை அடிக்கடி வருகிறது எனில் அதை புறக்கணிக்காதீர்கள். இந்த பிரச்சனை மிகவும் தீவிரமாகவும் இருக்கலாம். ஆயுர்வேதத்தில் நெஞ்செரிச்சல் குணமாக பல மருந்துகள் உள்ளன. பக்கவிளைவுகள் இல்லாத இந்த வைத்தியத்தை வீட்டிலேயே செய்யலாம்.

கற்றாழை சாறு : ஆரோக்கியத்திற்கு எண்ணிலடங்கா நன்மைகளைத் தரும் கற்றாழை சாறு எல்லா வகையிலும் நன்மை பயக்கும். அசிடிட்டி காரணமாக நெஞ்செரிச்சல் பிரச்சனை தொடர்ந்தால், அதை குணப்படுத்த, உணவு உண்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் கற்றாழை சாற்றை குடிக்கவும். இதனால் நெஞ்செரிச்சல் குணமாகும்.

நீங்கள் நெஞ்செரிச்சல் பிரச்சனையைத் தவிர்க்க விரும்பினால், இரவில் தூங்குவதற்கு முன், சர்க்கரை இல்லாமல் ஒரு கிளாஸ் பால் குடிக்கவும். பால் அசிடிட்டி பிரச்சனையையும் குணப்படுத்துகிறது. இதனுடன், செரிமானமும் சீராக இருக்கும்.

மஞ்சள் கடுகு : மஞ்சள் கடுகு சரியான செரிமானத்தை பராமரிக்க மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிறது. இது உணவிலும் பயன்படுத்தப்படுகிறது. மஞ்சள் கடுகு அமிலத்தன்மை மற்றும் நெஞ்செரிச்சல் பிரச்சனையிலிருந்து விடுபட பயனுள்ளதாக இருக்கும். லஸ்ஸியில் ஒரு சிட்டிகை மஞ்சள் கடுகு பொடி செய்து குடிப்பதால் பிரச்சனை வராது.

ஆப்பிள் வினிகர் : ஆரோக்கியத்திற்கும் சருமத்திற்கும் நன்மை பயக்கும் ஆப்பிள் சைடர் வினிகர், அமிலத்தன்மை மற்றும் நெஞ்செரிச்சலை குணப்படுத்துவதில் பயனுள்ளதாக இருக்கிறது. ஒரு ஸ்பூன் தேன் மற்றும் ஒரு ஸ்பூன் ஆப்பிள் வினிகரை அரை கிளாஸ் தண்ணீரில் கலந்து குடித்தால், பலனை நீங்களே உணர்வீர்கள்.

நெஞ்சு எரிச்சலால் அவதிப்படுபவர்கள் இந்த அருமருந்தைப் பயன்படுத்திப் பயனடையுங்கள்.

இதற்கு தேவையான பொருட்கள்

குப்பைக் கீரை. — ஒரு கைப்பிடி, ஓமம் — 10 கிராம், மஞ்சள் தூள்— சிறிதளவு

எப்படி தயாரிக்க வேண்டும்?

முதலில் குப்பைக் கீரையை நன்றாக சுத்தப்படுத்தி ஆய்ந்து எடுத்துக் கொள்ளவும்.ஒரு பாத்திரத்தில் 500 மி.லி தண்ணீர் ஊற்றி அதில் ஆய்ந்து வைத்துள்ள குப்பைக் கீரையையும் அதனுடன் ஓமம் மற்றும் மஞ்சள் தூளையும் சேர்த்து கொதிக்க வைக்கவும்.

நன்கு கொதித்து அதனை 100 மி.லி அளவாகச் சுண்டச் செய்து இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

பயன்கள்

இந்தக் கசாயம் நெஞ்சு எரிச்சலைக் குணப்படுத்த உதவும்.

நெஞ்சு எரிச்சலால் பாதிக்கப்படும் பொழுது இந்தக் கசாயத்தைத் தயார் செய்து கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்து வந்தால் நெஞ்செரிச்சல் சார்ந்த குறைபாடு நீங்கும்.



# வாழ்வும்

## வாழ்நாளை வளர்க்கும் வாசிப்புப் பழக்கம்

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் தொடங்கிவிட்டன. பாடம், படிப்பு, தேர்வு என்கிற வட்டத்திற்குள் வந்துவிட்டனர் குழந்தைகள். விடுமுறைக் காலத்தில் எடுத்த சிறப்புப் பயிற்சிகளான நீச்சல், பாட்டு, இசைக் கருவிகளை இசைத்தல் உள்ளிட்ட எவையும் இனி தொடருமா, வளருமா? தெரியாது. போட்டித் தேர்வுகள் பிரதானமாகிவிட்டன.

"எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிடிஸ் போய் எல்லாமும் எக்ஸாம் கரிக்குலர் ஆக்டிவிடிஸ் ஆக மாறிவிட்டது என்று எதுகை மோனையுடன் ஆங்கிலத் தமிழில் புலம்பினார் நண்பர் ஒருவர்.

கலை இலக்கிய வாழ்வியல் செயற்பாடுகள் குறைந்துபோய்த் தேர்வுகள் குறித்த திசை நோக்கிய பயணமாகவே கல்வி ஆகி வருகிறது என்பது அவர்தம் கவலை. என்ன செய்வது?




வருங்கால வாழ்வைத் திட்டமிடுகிறபோது தவிர்க்க முடியாதவை இவை. ஆனாலும் கல்வியின் அடிப்படைப் பயிற்சி முறைகளான எழுத்தும் வாசிப்பும் இன்னும் வளப்படுத்த வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன.

அழகாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசத் தெரிந்த பிள்ளைகளுக்கு அவர்கள் பயிலும் வகுப்பின்கீழ் இருக்கிற பாட நூல்களைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால் திணறுகிறார்கள். சில சொற்களைச் சொல்லி எழுதச் சொன்னால், எழுத்துகள் அவர்களுக்குப் பரிச்சயமில்லை என்பது பளிச்செனத் தெரிகிறது. ஒற்றை இலக்க எண்களைக் கூட, கூட்டவோ, பெருக்கவோ, வகுக்கவோ கைப்பேசிக் கணக்கானை இயக்கத் தொடங்கிவிடுகிறார்கள். வாய்பாடும் மனப்பாடமும் போயே போச்சு.

என்றோ கேட்ட வானொலிப் பேட்டி ஒன்றில் வ.சுப.மாணிக்கனார் சொன்னது நினைவுக்கு வருகிறது. 'எனக்குத் தொல்காப்பியம் முழுவதும் மனப்பாடம். திருக்குறள் முழுவதும் பாடம். திருவாசகம் தினமும் ஓதுவதுண்டு...'

இன்னும் அவர் சொன்னதைக் கேட்டதுகூட மறந்துவிட்ட எனக்கு, இப்படிச் சொல்லும்படி என்ன தெரியும் என்று கேட்டுக்கொண்டே படிக்கப் பழகுகிறேன்.

எதையும் காட்சி ஊடக வாயில்களின் மூலமாகவே கற்றுத் தேறுகிற தலைமுறையினராக இருக்கிறோம். இவற்றையெல்லாம் படித்து என்னவாகப் போகிறது? தேவையென்றால் கூகுள் பகுதியை வருடினால் போதும், எல்லாம் வந்து கொட்டும் என்கிற பதில் படக்கென்று வந்துவிடுகிறது.

பழமோ, உணவோ, பார்த்துப் பசியாற முடியாது. புசித்தால்தான் உயிர் வாழ முடியும். அதுவும் செரித்தால்தான் உண்டு. வாசிப்பும் அப்படித்தான். ரசித்து, ருசித்துப் படித்து உள்வாங்கி உணர்வில் கலந்துவிட்டால் அதன் நினைவுச் சுகமும், சிந்தனை வலிமையும் ஈடு இணையற்றவை.

# வாசிப்பும்



கிருங்கை சேதுபதி

காலி வயிற்றைக் காற்று நிரப்பி நோய் செய்வதுபோல, வாசிப்பற்ற மனத்தை, வறட்சி மிகுந்த யோசனைகள் நிரப்பிச் செயலாற்றலைச் சிதைத்துவிடுகின்றன.

வாசிக்க முடியாவிட்டாலும் யோசிப்பதற்கு உரிய கருத்தாடல்களைச் செவிமடுக்கவாவது செய்யலாம். இன்றைக்கு நமது,பேச்சு முறையும் திரைசார் உரையாடல் மொழியாகவே இருக்கிறது. கைப்பேசிகளில் உலாவரும் சிறு, குறுங்காட்சிகளின் செயற்கையான பேச்சுமுறையே வளரிளம் குழந்தைகளின் புழங்குமொழி ஆகி வருகிறது. வீடுகளுக்கே உரிய தனிச் சொற்களும் உரையாடல்களும் வட்டாரம் சார்ந்த பழமொழிகளும் சொலவடைகளும் முற்றாக ஒழிந்துவிட்டன போலும். முதியவர்களின் உரையாடல்கள் கூட, தற்காலக் காட்சி ஊடக மொழிவயப்பட்டுவிட்டன. மரபுத் தொடர்களையோ, பழமொழிகளையோ பேசவும் கேட்கவும் கூடிய வாய்ப்புகள் அருகிவிட்டமையால், அவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுதுகிற பயிற்சி இந்தத் தலைமுறையினருக்குச் சிரமமாய் இருக்கிறது. வாய்விட்டுப் படிக்கவும் மனம்கொள்ளுமாறு கேட்பதும் நடைமுறையில் குறைந்திருக்கிறது. அவசர யுகம்தான். ஆனாலும், அடிப்படையான சொற்களைக் கூட எழுதவும் பேசவும் முடியாமல் போனால், சிந்தனை என்னாகும்? உடம்புக்குத் தேவையான வசதிகளை வளப்படுத்திக் கொள்வதுபோல், உள்ளத்திற்குத் தேவையானவற்றையும் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?




உரிய காலங்களில் பயன்படுத்தாமல் போகிற சொற்கள் காலாவதியாகி விடுகின்றன. அன்றாட வாழ்வில் புழக்கத்தில் இருந்த சொற்கள் பல அகராதிகளில் தஞ் சமடைந்திருக்கின்றன. சொந்த வீட்டில் சுகமாக வாழ்கிற மக்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பிவிட்டதுபோல் வேதனையாக இருக்கிறது. அதனால், மொழிக்கு இழப்பு இருக்கிறதோ, இல்லையோ நம் சிந்தனைக்கு வறட்சி வந்துவிடும்.

தாய்மொழிப் பயிற்சியும் பயன்பாடும் குறைந்துவருகிறபோது,மண் சார்ந்த மரபுகள் அருகிவிடுகிறபோது, நம்பிக்கையும் மனிதாபிமானமும் குறைந்துவிடுவது உறுதி. விபரீத எண்ணங்களும்




செயல்களும் மிகுந்து சமூகக் குற்றங்கள் பெருகிவிடும். செயற்கைத் தொழில்நுட்பம் வளர்ச்சிக்குத் தேவைதான். ஆனாலும், மனிதன் இன்னமும் இயற்கை உயிரிதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

உயிருடன் இருக்க, இயங்க ஓய்வில்லாது சுவாசித்தல் நடக்க வேண்டும். அதுபோல், உயிர்ப்புடன் இருக்க, இயங்கத் தொடர் சிந்தனை தேவை. தினமும் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளித்த பிறகு, பூசை அறையில் நின்று சில பாசுரங்களையோ, திருமுறைகளையோ, மந்திரங்களையோ சொல்லுவதால் பக்தி மட்டும் வெளிப்படுவதில்லை, நினைவாற்றலும் நிலைப்படுகிறது. வாய்விட்டு ஓதுகிறபோது எழும் அதிர்வலைகள் மனத்தில் புத்துணர்வும் உடலில் மெல்லிய நுண் இயக்கங்களும் உருவாகின்றன.

என் தந்தையார் தினமும் படிக்கிற நூல்களில் இருந்து எழுதிய பக்கங்கள் பல ஏடுகளாக இருக்கின்றன. அவை யாவும் மூளைக்குள் முளைவிடுவதற்காக இடுகிற வீரிய சிந்தனை விதைகள் என்பது இப்போது புரிகிறது. பள்ளிக்குப் போகுமுன் வாசிக்கச் சொல்லிப் பழக்கிய அவர், வருவித்து வைத்திருக்கும் இதழ்களை உரத்து வாசிக்கச் சொல்லிக் கேட்பார். பயன் இருவருக்கும். புரியாத தொடர்களை, செய்திகளை, கதைகளை இடையிடையே அவர் விளக்கவும் செய்வார். பின்னால், அவை எந்தெந்தப் புத்தகங்களில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்தபோது வியப்பாக இருந்தது. இளமையில் எழுதப் படிக்கக் கற்கிற சுகமும் வேகமும் முதுமையை இளமையாக்கும் உற்சாகப் பயிற்சிகள்.

இன்றைக்கு வயது வேறுபாடில்லாமல் எல்லாரும் நடைப்பயிற்சி மேற்கொள்கிறார்கள். முடிந்த வரையில் உடற்பயிற்சி செய்கிறார்கள். யோகா வகுப்புகளும் நிரம்பி வழிகின்றன. இதுபோல், அகப்பயிற்சியாக, வாசிப்புப் பயிற்சி இருக்கிறது என்பதை வசதியாக மறந்துவிடுகிறார்கள்.

மலையாளத்தில் மறுபதிப்பு வருகிற நூல்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தொடுகிறபோது, இன்று தமிழில் நூறுகளைக் கடப்பதற்கே அரும்பாடுபட






வேண்டியதாயிருக்கிறது என்பதும் வருத்தத்திற்குரிய செய்திதான். படித்தவர்களின் எண்ணிக்கை கூடிய அளவிற்கு வாசிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவது ஒருவித வீழ்ச்சியே. சிந்தனைத் தேய்மானம் பெருகிவருகிற இந்தக் காலகட்டத்தில் செயற்கை நுண்ணறிவுச் செயல்பாடுகள் மிகுந்து வருவது மனிதகுலத்திற்கான சவாலை அதிகரிக்கச் செய்கிறது.

காலத் தேவைக்கேற்பச் செறிவூட்டப்பட வேண்டிய சிந்தனைத் திறன், பயனற்ற பொழுதுபோக்குக் கருவிகளால் மழுங்கடிக்கப்பட்டு வருவது ஆபத்தானது. அடிக்கடி படிப்பதற்கான புத்தகங்களைப் பரிமாறிக் கொள்கிற நண்பர் ஒருவரை இரண்டாண்டுகளாகக் காணோம். எதிர்பாராத விதமாக எதிர்ப்படுகிறபோது வருத்தப்பட்டுச் சொன்னார். ‘புதுசா ஒரு கைப்பேசியை என் மகன் வாங்கிக் குடுத்திட்டான். காணொலிகளிலேயே என் பொழுது கழிஞ்சு போச்சு. அதிலிருந்து மீண்டுவரப் பழகி வர்றேன்!’ என்றார்.”

முதியவர்களுக்கே இந்த நிலை என்றால், வளரிளங்குழந்தைகளின் நிலை என்னவாகும் என்று கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. முகத்துக்கு நேரே கைப்பேசியை வைத்துப் பார்க்கப் பழகிவிட்டபிறகு, நடைபாதையில் காலுக்குக் கீழே என்ன இருக்கிறது என்பதைக் கவனிக்கக் கூடத் தெரியாமல் போய்விடுகிறது. தொலைநோக்குப் பார்வை குறைந்தேவிட்டது என்பதைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது. இ—புக், ஃபேஸ்புக் எல்லாம் இருக்கட்டும். எடுத்து விரித்து வாய்விட்டுப் படிக்கிற புத்தகங்கள் நம் கைகளில் இருக்கட்டும். வாசிப்புப் பழக்கம் அன்றாடம் நடக்கட்டும்.

நம் இல்லத்துப் பிள்ளைகளை மையமாக வைத்தே நம் இயக்கங்கள் அனைத்தும் இருக்கின்றன. அவர்களின் கல்வி முதலான அடிப்படை வசதிகளைக் கொண்டே நாம் கஷ்டங்களைச் சகித்து வருகிறோம். அவர்களை வளர்க்கிறோம். அவர்களுடன் சேர்ந்து நாமும் வளர்கிறோம். அவர்களோடு கூடி இருந்து உண்ணுவதுபோல, தினமுமோ, வாரத்தின் ஓரிரு நாள்களிலோ கூடி, வாசிக்கிற பழக்கத்தைக் கொள்ளலாமா?

தொலைக்காட்சிப் பெட்டியுடன் கூடிய வரவேற்பு அறைகளில், பத்திரிகைகளோடு படிப்பதற்கு ஏதுவான புத்தகங்களும் வைத்துப் பழக்கப்படுத்திக் கொள்வதும், முறை வைத்து வாசிப்பதும், வாசித்தவை குறித்து விவாதிப்பதும், உற்சாகமான உரையாடலுக்கும் சிந்தனைக்கும் வழிவகுக்கும்.

உறவுகளுக்குள் நடந்த வேண்டாத வம்புகளைப் பேசி மனவருத்தங்களைப் பெருக்கிக் கொள்வதைவிட, வேண்டியவற்றைத் தெரிவு செய்து வாசிப்பதும் விவாதிப்பதும் மன அழுத்தங்களைக் குறைக்கும். மனித மாண்பை வளர்க்கும் அல்லவா? வாழ்நாள்களை வளர்விக்கும் வாசிப்புப் பழக்கத்தை நாள்தோறும் கடைப்பிடித்தால் நல்லது.

‘நல்ல நாள் என்று?’ எனத் தேடாமல், தள்ளிப் போடாமல், இன்றே, இப்போதே, உடனே வாசிப்பைத் தொடங்குங்கள். தொடருங்கள்!

# தமிழ் 2024

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

**Email: editor@ithamil.com**





VARSHA™
IDLI/DOSA BATTER
Let's Eat Fresh!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers
VARSHA
VARSHA